உள்ளத்தை உருக்கும் அற்புத
சம்பவங்கள்
நிறைந்த
அருமையான
சித்திரம்



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
0 JAN 1949
MADRAS
2553

# ஜெமினியின்
# சக்ரதாரி

இப்பொழுது சென்னை **கிரௌன், ஸ்டார்** இரு தியேட்டர்களிலும்
மற்றும் அநேக முக்கிய நகரங்களிலும் நடைபெறுகிறது.....

**டைரக்ஷன்: கே.எஸ். கோபாலகிருஷ்ணன்**

*சென்னையில் தினசரி 3 காட்சிகள : 3. 6.15, 9.30*



# நாடுகளின் ஐசுவரியம் ஏ.உ.கிரீஸ்

இ. மு. 466, 428 ஆண்டுகளுக்கிடையே ஏதன்ஸ் நகரம் பெரிகிள்ஸ் என்றதோர் மகாவிர பராக்ரமசாலியின் தலைமையில் ஆளப்பட்டு வந்தது. ஏதன்ஸ் நகரை அவர் புனர்நிர்மாணம் செய்தார். அந்நகரில் பெரிய அரங்கங்களையும், கம்பீரமான சிலைகளையும், அழகிய கோயில்களையும் கட்ட பெயர்பெற்ற கற்றச்சர்களையும், சிற்பிகளையும் கொணர்ந்தார். அது மட்டுமல்ல. கிரேக்க நாட்டின் பெருமையைப் பெருக்க வேதாந்திகளையும், ஞானிகளையும், பாடகர்களையும், கவிகளையும், சிற்பிகளையும், வானசாஸ்திர நிபுணர்களையும் தனது நகரத்துக்கழைத்து வந்து அவர்களுக்கு ஆதரவளித்து வந்தார்.

இன்று நம்முன்னுள்ளது நாட்டின் புனரமைப்புவேலை. அதற்கு ஏராளமான பொருள் தேவை— பெருஞ்சீமான்கள் சிலருடைய செல்வம் மட்டுமல்ல, ஏழை எளியோர் எல்லோருடைய சேமிப்பும் தேவை. அதிகப்படியான வரும்படி அவ்வளவையும் சேமித்து பல விதமாகவுள்ள சர்க்கார் பத்திரங்களில் முதலிடுங்கள். நாடுகளின் ஐசுவரியம் அவற்றின் மக்கள் தங்களுடைய சேமிப்புகளை சிறந்த வழியில் முதலிடுவதின் மூலம்தான் பெருகுகிறது என்பதை ஞாபகத்திலிடுங்கள். நீங்களும் நன்மையடைவீர்கள். சர்க்கார் பத்திரங்களில் முதலிட்ட உங்கள் தனத்தின் மதிப்பு விலைவாசிகள் இறங்கி வரும்போது அதிகரிக்குமாதலால் அதிக வட்டியும் பெற்றவர்களாவீர்கள்.

விவேகத்துடன் முதலிட்டு உங்கள் சேமிப்பைச் சேர்த்து வையுங்கள்.

நேஷனல் ஸேவிங்ஸ் ஸர்ட்டிபிகேட்டுகளில் முதலீடு செய்யுங்கள். உரிய காலத்தில் முறையே 3%, 3 1/2%, 4 1/6% வட்டி தரக்கூடிய ஐந்து, ஏழு, பன்னிரண்டு வருஷ செலாவணியுள்ள ஸர்ட்டிபிகேட்டுகள் கிடைக்கும்.

மற்ற சர்க்கார் பத்திரங்கள், தபாலாபீஸ் ஸேவிங்ஸ் பாங்க் டிபாஸிட்கள், இன்ஷூரன்ஸ், கோவாபரேடிவ் ஸொஸைடி முதலியவைகளில் முதலிடுங்கள்.

நாளைக்காக இன்றே சேமியுங்கள்

உங்கள் சேமிப்பை பயன்பெறச் சிறந்த முறையில் முதலிடுங்கள்

இந்திய சர்க்காரின் நிதி மந்திரி இலாகாவால் வெளியிடப்பட்டது.

AC-414TM




# தற்கால கட்டிட நிர்மாணம்

## தொழிலாளர் வீடு அமைப்பு

இன்று இந்தியா தேசமானது அமோகமாக தொழில் அபிவிருத்தி துறையில் ஈடுபட்டிருக்கிறது. இது விஷயத்தில் மிகவும் முக்ய பிரச்னையானது தொழிலாளிகளின் சுகவாழ்க்கை அதிலும் அவர்களின் குடியிருப்பு வசதி, இவைகளில் அதிகாரிகள் தங்கள் காலத்தைச் செலுத்திக்கொண்டிருக்கிறுர்கள் என்பதைக்காண திருப்திகரமாயிருக்கிறது. சந்தோஷகரமானதும், சுகாதாரத்துடனும் நன்கு அமைக்கப்பட்ட, வாழ்க்கை வசதிகள் தொழிலாளர்களின் திரேகாரோக்யத்தையும் அவர்களின் திறத்தையும் அதிகரிக்கும் இதன்பிரதிபலனுக அதிக உற்பத்தி ஏற்படும்.

நீடித்த உழைப்பு. சிக்கனம், அமையக்கூடிய தன்மை, தீபயமின்மை, பரிசுத்தம் இத்தன்மைகளை ஸ்வபாவத்திலேயே கொண்ட கான்கிரீட்—தொழிலாளர் வீடுகள்—சிற்றுண்டி சாலைகள்—அனுதைபோஷணை சாலைகள்—பள்ளிக்கூடங்கள்—ஆஸ்பத்திரிகள்—நிற்கும் நீர்நிலைகள்—இவைகள்கட்டுவதற்கு ஏற்றசா தனம்.

சிமென்ட் கான்கிரீட்டின் முழுபலன்களையும் உபயோகப்படுத்திக்கொள்ளும் முறையில் தி கான்கிரீட் அஸோஸியேஷன் ஆப் இந்தியாவின் (199, மவுண்டு ரோட்டு, மதருஸ்) பரிபோஷக நிபுணர்களின் இலவசபோதனை எப்பொழுதும் கிடைக்கும்.

"தொழிலாளர் வீடு அமைப்பு" என்னும் ஓர் கட்டுரையின் பிரதி, இலவசமாக அனுப்பப்படும்.

**தி ஸிமென்ட் மார்கெட்டிங் கம்பெனி ஆப் இந்தியா லி.**
**டிஸ்டரிபூடேர்ஸ் போர்**
**தி அஸோஸியேடெட் ஸிமென்ட் கம்பெனீஸ் லி.**

ADARTS CMI 147

பருத்தி நூல்களுக்கு பிரதான ஸ்தாபனம்

# மதுரை மில்ஸ் கம்பெனி

## லிமிடெட்

மதுரை — தூத்துக்குடி — அம்பாசமுத்திரம்
எங்களுடைய விசேஷமான நூல்கள்:

| | | |
|---|---|---|
| 5,00,000 நூற்கும் கதிர்கள் | ஒத்தை நூல், இரட்டை நூல், பனியன் நெசவுக்கேற்ற கோன் நூல், மில் நெசவுக்கேற்ற சீஸ் நூல், முறுக் கேற்றிய நூல். | நம்பர் 80 வரை நூல்கள் |

○

நாங்கள் சப்ளை செய்வது:

கைத்தறி, இயந்திரத் தறி, பின்னல் தறிகளுக்கு வேண்டிய காரிக்கன் நூல்கள், இயந்திர நெசவுக் கேற்ற வார்ப்பு நூல்கள், கனத்த வெப்பிங், கான் வாஸ் முதலியவைகளுக்கேற்ற மடக்கு இரட்டை நூல்கள், மற்றும் பின்னல் இயந்திர நெசவுக் கேற்ற மிருதுவான சன்ன நூல்கள்.

எங்கள் எகிப்திய பருத்தி நூல்கள் இறக்குமதியாகும் நூல்களைப்போல் எல்லா வகையிலும் கீர்த்தி பெற்றது.

நாங்கள் நூற்பதைத் தவிர நெய்வதில்லை

○

## ஏ. & எப். ஹார்வி லிமிடெட்,

மானேஜர்கள்

சர்வதாரி
மலர் 15


# சக்தி


மார்கழி
இதழ் 9


மெய்ப் பொருள் காண்பது அறிவு

## ரேடியோ நிலையங்கள்

இம்மாதம் முதல் தேதியன்று ஆந்திர நாட்டில் விஜயவாடாவில் புதிதாக ஒரு ரேடியோ நிலையம் திறந்து வைக்கப்பட்டது. இப்போது நம் மாகாணத்தில் சென்னை, திருச்சி ஆகிய ஊர்களிலுள்ள நிலையங்களைச் சேர்த்து மொத்தம் மூன்று ரேடியோ நிலையங்கள் உள்ளன. நம் மாகாணத்தின் மொத்தப் பரப்பையும், ஜனத்தொகையையும், தேவையையும் பார்த்தால் இந்த மூன்று ரேடியோ நிலையங்கள் மிக மிகக் குறைவு என்பதில் சந்தேகமில்லை. இதை சில உதாரணங்களின் மூலம் பார்ப்போம்; சோவியத் ருஷ்யாவின் ஜனத்தொகை 20 கோடிக்கும் குறைவு தான். சுமார் 20 கோடி மக்களுக்கு அங்கே மொத்தம் 500 ரேடியோ நிலையங்கள் உள்ளன; நம் சென்னை மாகாணத்தின் ஜனத்தொகையை எவ்வளவு குறைவாக மதிப்பிட்டாலும் 5 கோடிக்குக் குறையாது. அப்படியானல் ருஷ்யாவின் ஜனத்தொகையில் கால் பங்கு எண்ணிக்கையுள்ள மக்கள் நம் மாகாணத்தில் இருக்கிறார்கள். ஆகவே ரேடியோ நிலையங்கள் 500-ல் கால் பங்கு, அதாவது மொத்தம் 125 நிலையங்கள் நம் மாகாணத்தில் இருக்க வேண்டும் அல்லவா? ஆனல் இங்கு இருப்பது மூன்று நிலையங்களே. மேல் நாடுகளின் நிலையைப் பார்க்கும்போது நம் நாட்டில் ரேடியோ ஒலி பரப்பும் நிலையங்கள் பெருக வேண்டும், ரேடியோ கேட்பவர்களின் தொகை பெருக வேண்டும், ரேடியோ செட்டுகளை வாங்கி வைத்துக் கொள்ளும் சக்தியும் மக்களுக்குக் கிடைக்கப் பெறவேண்டும் என்றெல்லாம் எல்லோரும் விரும்புவது இயற்கை.

இந்திய நாட்டின் செல்வ நிலையைக் கவனிக்கும் போது, இன்று ரேடியோ நிலையங்களைப் பெருக்குவதற்காக ஏராளமான பணத்தைச் செலவு செய்வதற்கில்லை; முதலில் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு வேண்டிய காரியங்களில் இறங்கி வெற்றி பெற வேண்டும்; பிறகுதான் மக்களின் வசதிக்காக ரேடியோ போன்ற பற்பல சாதனங்களுக்காக அரசாங்கமும் பொதுமக்களும் பணம் செலவிட முடியும்; அதுதான் நியாயம்.

இந்தியாவைப் பொறுத்த வரையில், ரேடியோ ஒலிபரப்பும் ஸ்தாபனம் பணக் கஷ்டத்தைத் தாங்க மாட்டாமல், பல தடவைகளில் தத்தளித்திருக்கிறது. இந்தியாவிலேயே முதல் முதலில் சென்னை நகரத்தில்தான் ரேடியோ ஸ்தாபனம் தொடங்கப் பெற்றது. தனிப்பட்ட சிலர் சேர்ந்து 1924-ல் இந்த ஸ்தாபனத்தை தொடங்கினர். மூன்று வருஷங்களுக்குப் பிறகு பம்பாயிலும், கல்கத்தாவிலும் ரேடியோ நிலையங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. அப்போது இந்தியாவில் மொத்தம் 3500 ரேடியோ செட்டுகள் தான் இருந்தன. ரேடியோ கேட்பவர்களின் தொகை குறைவாக இருந்ததால் ஒலிபரப்பும் ஸ்தாபனத்துக்குப் போதிய பண வருவாய் கிடைக்கவில்லை. அதனால் 1930-ம் வருஷத் தொடக்கத்தில் ஒலிபரப்பும் ஸ்தாபனத்தார் அரசாங்கத்திடம் பண உதவி கோரும் நிலை ஏற்பட்டது. இரண்டு மாதங்களில் ஸ்தாபனத்தையே கலைக்கத் தொடங்கினர். கடைசியில் 1930-ம் வருஷம் எப்ரல் மாதம் முதல்தேதியன்று இந்திய அரசாங்கம் ஒலிபரப்பும் ஸ்தாபனத்தை நடத்தும் முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டது. ஒலிபரப்பும் ஸ்தாபனம் சர்க்கார் இலாகாவின் ஒரு பகுதியாக மாறிவிட்டது. அரசாங்கமும் நாளாவட்டத்தில் பணச் செலவைக் கண்டு பயந்து 1931-ம் வருஷம் அக்டோபர் 9-ம் தேதியன்று ஒலிபரப்பும் ஸ்தாபனங்களை மூடிவிட உத்தேசித் திருப்பதாக அறிவித்தது. ஆனால் நாடெங்கும் இந்த உத்தேசத்தை எதிர்த்து நிற்கவே, அரசாங்கம் தொடர்ந்து ரேடியோ ஸ்தாபனத்தை நிர்வகித்து வரலாயிற்று. அத்துடன் 'இந்திய அரசாங்க ஒலிபரப்பு சர்வீஸ்' என்ற பெயர் 1936-ம் வருஷம் ஜூன் மாதத்திலிருந்து 'அகில இந்திய ரேடியோ' என மாறி வழங்கலாயிற்று.

இப்போது, ஒலிபரப்பும் நிலையங்கள் முன்போல அவ்வளவு பணக் கஷ்டத்துடன் வேலைசெய்யவில்லை. இன்றைய நிலை ஓரளவு சுமாராகவே இருக்கிறது. ஆனால் இன்று ரேடியோ செட்டுகளை வீடுகளில் வாங்கி வைத்துக் கொள்ளுவது பணக்காரர்களுக்குத்தான் சாத்தியமான காரியமாக இருக்கிறது. டென்மார்க் தேசத்தில் 100-க்கு 75 பேர் ரேடியோ செட்டுகளை வாங்கி வைத்துக் கொள்ளக்கூடிய வசதி பெற்றிருக்கும்போது, நம் நாட்டில் 1000-க்கு ஒருவர் கூட ரேடியோ செட்டுகளை வாங்கி வைத்துக் கொள்ளும் நிலையில் இல்லை. ரேடியோ நிலையங்கள் வளர வேண்டுமானால் மக்களின் நிலை உயர்ந்தாக வேண்டும். ஆனால் அதற்கிடையில் ரேடியோ நிலையங்களை பணக்காரர்களுக்கு மட்டும் பயன்படும்படியாக நடத்துவதும் முடியாத காரியம். விஜயவாடா ஒலிபரப்பு நிலைய அங்குரார்ப்பண தினத்தன்று நம் பிரதமர் ஸ்ரீ ஓமந்தூர் ராமசாமி செட்டியார் தம் செய்தியில் தெரிவித்திருப்பது போல விவசாயிகளின் உழைப்பினால்தான் சமூகத்தின் மேல்தட்டில் இருப்பவர்கள், நகரவாசிகள் ஆகியோரின் சுபிக்ஷம் அடங்கியுள்ளது. ஆகவே, ரேடியோ செட்டுகளைப் பணக்காரர்கள் பணம் கொடுத்து வாங்கி வைத்துக் கேட்டாலும், ரேடியோ

நிகழ்ச்சிகளை பெரும்பாலும் விவசாயிகள், தொழிலாளிகள், பொது மக்கள் ஆகியோருக்குப் பயன் படக்கூடிய முறையில் தான் நடத்தி வரவேண்டும். நம் பிரதமர் கூறியபடியே, கிராமவாசிகளுக்குக் கலை அறிவு, சாஸ்திர அறிவு, கல்வி அறிவு முதலியவற்றைப் புகட்டும் முறையில் ரேடியோ நிகழ்ச்சிகளை அமைக்கவேண்டும். நம் புராதன மான கலைகளையும், கிராமியக் கலைகளையும், நவீனக் கலைகளையும் ரேடியோ நிலையங்கள் வளர்த்துவர வேண்டும். விவசாயத் தொழிலுக்கு உதவும் வகையில் விவசாய நிபுணர்கள் அவ்வப்போது தக்க ஆலோசனைகளை ரேடியோ மூலம் தெரிவித்து வரவேண்டியது அவசியம்.

உயர்ந்த உத்தியோகத்திலோ, அல்லது அந்தஸ்திலோ உள்ள பிரமுகர்களை, அவர்கள் பிரமுகர்கள் என்பதற்காக வேண்டி, அழைத்து,ரேடியோ நிலையங்களில் பேசவைக்கும் வழக்கம் இன்னும் இருந்துவருகிறது. இந்த வழக்கம் ஒழியவேண்டும். நகர வாசிகளாக இருந்தாலும், கிராம வாசிகளாக இருந்தாலும் அந்தந்தத் துறையில் திறமை உள்ளவர்களை அழைத்து ரேடியோ நிலையங்களில் பேசச் செய்வதுதான் நியாயம். மேலும் ஒரு காலத்தில் கெட்டிக்காரர்களாக இருந்தவர்கள் என்பதற்காக அவர்களையே மாறி மாறி அழைத்து, உதவாக்கரையான நிகழ்ச்சிகளை ஒலிபரப்புவதை விட, புதிதாகத் தலையெடுக்கும் வாலிப அறிஞர்களையும் வரவேற்று உற்சாகப்படுத்துவது ரேடியோ நிலையத்தாரின் முதல் கடமையாக இருக்கவேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக தேசத்தின் ஏழைப் பொது மக்களும் ரேடியோ நிகழ்ச்சிகளைக் கேட்கும் வண்ணம் பஞ்சாயத்து போர்டுக்கட்டிடங்கள், பள்ளிக்கூடங்கள், மக்கள் அதிகமாகக் கூடும் மைதானம், நந்தவனம், கடற்கரை முதலிய ஸ்தலங்கள்—முக்கியமாக எல்லாப் பொது ஸ்தலங்களிலும், ஆங்காங்குள்ளவர்களின் பண உதவியைக் கொண்டோ, அரசாங்கம் சொந்தமாகச் செலவு செய்தோ, ரேடியோ செட்டுகளை வாங்கிவைப்பது மிகவும் அவசியமான காரியமாகும். தற்போது மேற்கூறியவை போன்ற பொதுஸ்தலங்கள் சிலவற்றில் ரேடியோ செட்டுகள் இருக்கின்றன என்றாலும் அவை மிகமிகக் குறைவு. ரேடியோ கேட்கும் வசதி தேசமெங்கும் எல்லோருக்கும் கிடைக்கப் பெறவேண்டும். ரேடியோ போன்ற யந்திர சாதனங்கள் சாதாரண மக்கள் எல்லோருடைய வாழ்க்கையிலும் ஒன்று கலக்காத வரையில் அப்படிப்பட்ட சாதனங்களால் தேசத்துக்கு யாதொரு பயனும் ஏற்படாது என்று கூறவிரும்புகிறோம்.

*

# சக்தி பொங்கல் மலர்

**பொ**ங்கல் என்றதுமே விவசாயிகளுக்கும் தமிழ்ப் பெரு மக்களுக்கும் கொண்டாட்டம்தான்; கரும்பு, கிழங்கு முதலிய விருந்தைப் பற்றியும் நினைவு வரும். ஆனால் இலக்கிய ரசிகர்களோ பொங்கல் என்றதுமே **சக்தி** பொங்கல் மலரை எதிர்நோக்கும் சாதகப் பறவைகளாகிவிடுவார்கள். இந்த வருஷமும் **சக்தி** பொங்கல் மலர் வழக்கம் போலவே இலக்கிய ரசிகர்களுக்கு சிறந்ததொரு விருந்து அளிக்கப் போகிறது என்றால் ஆனந்தத்துக்கு குறைவேது? இவ்வாண்டில் பொங்கல் மலர் அருமையான வெள்ளைக் கிளேஸ் காகிதத்தில் ஏராளமான புகைப்படங்கள், வர்ணப் படங்கள் முதலிய பல சிறந்த அம்சங்களுடன் தயாராகிக் கொண்டிருக்கிறது. தமிழ்நாட்டு இலக்கியத்தின் முன்னணி எழுத்தாளர்கள் பலரும் பொங்கல் மலர் மூலமாக உங்களுக்குக் கலை விருந்து அளிக்கிறார்கள். ஸ்ரீமான்கள் எஸ். வையாபுரிப் பிள்ளை, மஞ்சேரி எஸ். ஈச்வரன், வெ. சாமிநாத சர்மா, பொ. திரிகூடசுந்தரம், அ. சீனிவாசராகவன், தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான், மு. அருணாசலம், பி. ஸ்ரீ., டி. என். ராஜரத்தினம் பிள்ளை, ரயில்வே மந்திரி க. சந்தானம், ஆ. முத்துசிவன், வ. ரா., தி. நா. சுப்பிரமணியன், யோகி சுத்தானந்த பாரதியார், "நாணல்", "காலக்கோலன்", "கலைவாணன்", "துறைவன்", சி. சு. செல்லப்பா, கா. ஸ்ரீ. ஸ்ரீ., "லக்ஷ்மி", "சுரபி", அப்துல் காதர் முதலியவர்களின் கட்டுரை கதை கவிதைகளோடு மற்றும் பல அறிஞர்களின் எழுத்தோவியங்களும் மலரில் இடம் பெறுகின்றன. இவ்வளவு சிறப்பாகத் தயாராகும் இந்த ஆண்டுப் பொங்கல் மலரின் விலை ரூபாய் **ஒன்றுதான்.** ஆகவே பொங்கல் மலர் வாசக நேயர்களுக்குத் தவறாமல் கிடைப்பதற்கு மலரின் விலையோடு தபால் செலவுக்காகவும் சேர்த்து ரூபாய் ஒன்றேகாலை சக்தி காரியாலயம்—சென்னை 14 என்ற விலாசத்துக்கு அனுப்பி உடனே தங்கள் பெயரைப் பதிவு செய்து கொள்ளவும்.

—ஆசிரியர், **சக்தி**

# உத்தியோகஸ்தரும் சம்பளமும்

கே. ஜி. மஷ்ருவாலா

*தொழிலாளிகளின் அடிப்படைச் சம்பளப் பிரச்னையைப் போலவே, உத்தியோகஸ்தர்களின் சம்பளப் பிரச்னையும் கடிது கவனத்துக் குரியது. கிராம ராஜ்யம் பத்திரிகையில் வெளிவந்ததன் சாரம். கட்டுரையாளர் ஹரிஜன் ஆசிரியர்.*

சில வருடங்களுக்கு முன்னர், 'சர்க்காரில் ஒரு பதவி எவ்வளவு தான் முக்கியமானதா யிருந்த போதிலும் அதற்குக் கொடுக்கும் சம்பளம் குறித்த ஒரு அளவுக்கு மேல் உயர்ந்துகொண்டு போகக் கூடாது' என்று காங்கிரஸ் மகா சபை தீர்மானித்தது. அப்போ திருந்த பணப்புழக்கத்தில் மாதம் ரூபாய் ஐந்நூறு தான் உயர்ந்தபட்ச அளவு என்றும் மகாசபையார் வரையறுப்புச் செய்தார்கள். இன்றைய நிலையில் அந்தத் தொகை போதவே போதாது; அதை மாற்றி, பணத்தின் இப் போதைய மதிப்பிற்கேற்றவாறு ஒரு திட்டத்தை அமைக்கவேண் டும்.

முதலாவதாக, குறிப்பிட்ட அள வுக்குமேல் பதவிக்கும் சம்பளத் திற்கும் சம்பந்தமில்லை என்பதும், இரண்டாவதாக சம்பளத்தின் அளவு நம் நாட்டின் ஏழ்மை நிலைக் கேற்றவாறு இருக்க வேண்டும் என்பதுமே அதிலுள்ள முக்கிய அம்சங்கள் என்று கருதுகிறேன்.

இப்போது காங்கிரஸ் சர்க்கார் களும், நமது அரசியலமைப்பை வகுத்தவர்களும் இந்த இரண்டு அம்சங்களையும் புறக்கணித்து விட் டார்கள் என்றே தோன்றுகிறது.

மிக முக்கியமான பதவிகளுக் குரிய சம்பளத்தின் விவரங்களை கீழே கொடுத்திருக்கிறேன்:

ஜனாதிபதி: மாதம் 1-க்கு ரூ. 5,500 (படித்தரம் வேறு)

கவர்னர்கள்: மாதம் 1-க்கு ரூ. 4,500 (படித்தரம் வேறு)

சுப்ரீம் கோர்ட் நீதிபதி: மாதம் 1-க்கு ரூ. 5,000

சுப்ரீம் கோர்ட் மற்ற நீதிபதிகள்: மாதம் 1-க்கு ரூ. 4,500

ஹைகோர்ட் நீதிபதி: மாதம் 1-க்கு ரூ. 4,000

ஹைகோர்ட் மற்ற நீதிபதிகள்: மாதம் 1-க்கு ரூ. 3,500

பிரிட்டிஷார் நம் நாட்டுக்கு வந்த பிறகு நம்மிடமுள்ள பலவீனமான ஒரு அம்சத்தைச் சீக்கிரமே தெரிந்து கொண்டார்கள்; தர்பார், ஊர்வலம், திருவிழா, மற்றும் ஜனக்கூட்டம் பெருகும்படியான விசேஷ நிகழ்ச்சிகள் மூலம் பணத் தைப் படாடோபமாகச் செலவிடு வதுபோல் வேறெதுவும் ஜனங் களை அவ்வளவாகக் கவரவில்லை. தேசம் முழுவதும் பரவியுள்ள இந்த பலவீனமான அம்சத்தை, சந்தோஷத்திலும் சரி, துக்கத்தி

னும் சரி, நாம் அப்படியே அனுசரித்து வருகிறோம். சென்ற ஆகஸ்டு மாதம் 15-ம் தேதி இந்தியா குடியேற்ற நாட்டு அந்தஸ்து அடைந்ததையும், காந்தியடிகளின் அந்தியக் கிரியை அஸ்தி கரைப்புச் சடங்கு ஆகியவற்றையும், முன்காலத்தில் முகலாயர்கள் நடத்திய தர்பார்களையும் பிறகு கர்ஸான் பிரபு நடத்திய முடிசூட்டு விழாவையும் போன்று அவ்வளவு விரிந்த அளவில் கொண்டாடினோம். காந்தியடிகள் வட்டமேஜை மகாநாட்டுக்குச் செல்லும்போது, ஒரு வறிய தேசத்தின் பிரதிநிதியென்பதற்குத் தக்க விதத்தில் நடந்துகொள்ள மிகுந்த பிரயாசையெடுத்துக் கொண்டார்; ஆனால் அவர் இறந்த பின்போ, உலகிலேயே மிக்க செல்வம் படைத்த ஒரு நாட்டின் தந்தையாக அவர் இருந்ததுபோல் அவருடைய அந்தியக் கிரியைகளை நடத்தலானோம்.

இவ்விதமான ஆடம்பரங்களைக் கருத்திற் கொண்டே, உயர்ந்த உத்தியோகஸ்தர்களுக்குச் சம்பளம் கொடுப்பதும் அவர்களுடைய காரியாலயங்களைப் பராமரிப்பதும் நடைபெறுகின்றன.

இதனால், எல்லோரும் சந்நியாசியாக வாழ வேண்டும் என்பது என் கருத்தல்ல; பொது ஜனங்களின் வாழ்க்கை நிலைக்கு அதிகமில்லாத மத்தியதர வாழ்க்கை நடத்த வேண்டுமென்பதே. குறித்த ஒரு நிலை வரையிலும், அதாவது, ஒரு சாதாரண உத்தியோகஸ்தர், மாஜிஸ்ட்ரேட்டு, நீதிபதி, கலெக்டர், போலீஸ் சூபிரண்டு ஆகிய ஜில்லா உத்தியோகஸ்தராக உயர்வதற்குத் தகுதியடையும் வரை, உத்தியோகத்துக்கும் சம்பளத்துக்கும் சம்பந்தம் இருக்கவேண்டியது அவசியமே. அதற்குப்பின் அதிக அனுபவம் என்ற காரணத்தால் மட்டும் ஒருவரைக் குறித்த ஒரு பதவிக்கு உயர்த்தலாகாது; தகுதியைக்கொண்டே அவ்வாறு செய்ய வேண்டும். அத்துடன், அவ்வாறு உயர்த்துவதனால் அவருடைய வருவாயில் மாறுதலொன்றும் இருக்கக்கூடாது. அதிகப் பொறுப்புள்ள பதவியில் அமர்த்துவதொன்றே அவருடைய தகுதிக்குக் கிடைத்த வெகுமதியாகும்.

அந்தஸ்து மிகுதி தெரிய வேண்டுமென்றால், கூட ஒரு கௌரவப் பட்டத்தைச் சேர்த்துக் கொள்ளலாம்; இதற்காக, ஒவ்வொரு மேலதிகாரிக்கும் பெரும் பெருத்த சம்பளங்களை வழங்க வேண்டும் என்பதற்குக் காரணமே இல்லை. ஜனாதிபதி, கவர்னர்கள், பிரதம அல்லது பிற நீதிபதிகள் ஆகியோருக்கும் இதுவே பொருந்தும்.

ஒரு புது பரம்பரை உதயமாக வேண்டும். அதில், சம்பளத்திற்காக வல்லாமல், தங்கள் தேசத்திற்குச் சேவை செய்வதுடன் தகுதியை உயர்த்திக் கொள்வதற்கும் கிடைத்த சந்தர்ப்பம் என்று கருதி பொறுப்பான உத்தியோகங்களிலும் பதவிகளிலும் அமர இளைஞர்கள் ஆவல்கொள்ள வேண்டும்; இதற்கு, மேலுள்ளவர்களே உதாரணமாக நடந்து கொள்ள வேண்டும்.

*

# எந்த வழி?

ஆர். ராமநாதன்

இன்று நமது நாட்டில் வாழ்க்கைச் சாதனங்களுக்குப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது.

இந்தத் துன்பத்துக்குக் காரணம் பண வீக்கம்தான் என்று "பொருளாதாரப் பண்டிதர்கள்" கூறுகிறார்கள். உற்பத்தி குறைந்திருப்பதுதான் பஞ்சத்திற்குக் காரணம் என்று முதலாளிகள் கூச்சலிடுகிறார்கள். விவசாயிகள் ஒழுங்காக வேலை செய்யாததுதான் உணவு நெருக்கடிக்குக் காரணம் என்று நிலச்சுவான்தார்கள் ஓலமிடுகிறார்கள். "கன்ட்ரோல்" தான் அவ்வளவுக்கும் காரணம் என்று வியாபாரிகள் கண்ணீர் வடிக்கிறார்கள். "கழுதையைச் சுமந்து சென்ற கிழவனைப் போன்று" சர்க்கார் காரியங்கள் செய்கிறது! பொதுவாக, எல்லோரும் சேர்ந்து "எடுப்பார் கைப்பிள்ளையாக விளங்கும்" ஜனங்கள் மீது பழியைப் போடுகிறார்கள்.

வாழ்க்கைச் சாதனங்களின் விலை விஷம்போல் ஏறுவதைத் தடுத்துத் தீரவேண்டும் என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். "கன்ட்ரோல்" தான் இதற்கு வழி என்று மெத்தப் படித்த பண்டிதர்கள் சொல்லுகிறார்கள். இன்று இந்தத் துறையில் சர்க்கார் கவனம் செலுத்தி வருகின்றது.

ஆனால், "கன்ட்ரோல்" நெருக்கடியைத் தீர்த்து விடுமா? கன்ட்ரோல் விரும்பத்தக்கது; அது அவசியமும் கூட. "கன்ட்ரோல்" முறையை அமலுக்குக் கொண்டு வருவதன் மூலம், இருக்கும் சாமான்களை எல்லோருக்கும் பகிர்ந்து கொடுக்க முடியும். ஆனால், "கன்ட்ரோல்" முறையை அமலுக்குக் கொண்டு வருவதால் மாத்திரம் நெருக்கடியைச் சமாளித்து விடமுடியும் என்று நினைப்பது பைத்தியக்காரத்தனமாகும். ஏனெனில், "கன்ட்ரோல்" முறை வெற்றிபெற வேண்டுமானால், சர்க்கார் சில முக்கியமான நடவடிக்கைகளை மேற்கொண்டுதான் தீரவேண்டும். "கன்ட்ரோல்," உற்பத்தியுடன் பின்னிப் பிணைந்து கிடக்கிறது. எனவே, உற்பத்தியை நிர்வகிக்காமல், விநியோகத்தை வெற்றிகரமாக நிர்வகிக்க முடியாது. பொருளாதாரப் பாலபாடம் படிப்பவர்களுக்குக் கூட இந்த உண்மை தெரியும்.

உற்பத்தியை நிர்வகிக்கவில்லை என்றால், உருப்படியான விநியோகத் திட்டம் வகுக்க முடியாது. ஒரு குறிப்பிட்ட பொருள் எவ்வளவு உற்பத்தியாகிறது என்பது தெரியாமல், விநியோகத் திட்டம் வகுக்கமுடியாது. உதாரணம் வேண்டுமா? அரிசி விநியோகக் கட்டுப்பாடு அமலில் இருந்த பொழுது, எட்டு அவுன்ஸ் அரிசி கொடுக்க முடியாமல் சர்க்கார் திண்டாடினபொழுது, வீதிகளில்

**பணவீக்கம் நாளுக்கு நாள் பெரிதாகிக் கொண்டு வருகிறது என்ற பிரஸ்தாபம் சில மாதங்களாக அடிபட்டு வருகிறது. இந்த அபாயகரமான நிலையைச்சமாளித்து, ஜனங்களிடம் சுபிக்ஷம் நிலவச் செய்ய அரசாங்கம் என்னென்ன காரியங்களைச் செய்ய வேண்டும்? இதற்குக் கட்டுரையாளர் இரண்டு கேள்விகளின் மூலம் பதில் கூறுகிறார்.**

பகிரங்கமாக அரிசி விற்கப்பட்டது என்பது நமக்குத் தெரியும். இன்றும் இந்த நிலை மறைந்து விடவில்லை. இந்த அரிசி எங்கிருந்து வந்தது? இது வானத்திலிருந்து உதிர்ந்துவிடவில்லை என்பது நிச்சயம். கொள்முதல் திட்டத்தையும், "கன்ட்ரோல்" திட்டத்தையும் மீறி, அரிசியைக் கள்ள மார்க்கெட்டுக்கு அனுப்ப ஒரு கூட்டம் கட்டுப்பாடாக வேலை செய்கிறது என்பதற்கு இது சான்று. விநியோகத் திட்டம் வெற்றிபெற வேண்டுமானால், இந்தக் கூட்டம் நிர்மூலம் செய்யப் படவேண்டும்.

துணியின் நிலையும் இதுதான். மொத்தம் எவ்வளவு துணி உற்பத்தியாகிறது என்பது உண்மையில், "சிதம்பர ரகசியம்." இது சம்பந்தமாக சர்க்கார் கொடுக்கும் கணக்கு ஒன்று; முதலாளிகள் கொடுக்கும் கணக்கு வேறொன்று. ஆனால், உண்மையில் மார்க்கெட்டுக்கு வரும் துணியின் கணக்கு மற்றொன்று. "கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதை" இதற்கு மிக மிகப் பொருந்தும். உற்பத்தியாகும் துணியில் பெரும்பகுதி கள்ள மார்க்கெட்டுக்குப் போகிறது என்பது நாடறிந்த உண்மை. இதைத் தடுக்காமல், துணி உற்பத்தியை நிர்வகிக்காமல், "கன்ட்ரோல்" திட்டத்தை அமலுக்குக் கொண்டுவர முடியுமா?

"தும்பை விட்டு வாலைப்பிடிப்ப"தில் பிரயோஜனமில்லை; அது ஆபத்தும் கூட. நெருக்கடி உச்ச நிலையை அடைந்திருக்கும் இந்தக் காலத்தில் சர்க்கார் முடிவான நடவடிக்கைகளை மேற்கொண்டுதான் தீரவேண்டும். இன்று சர்க்காருக்கு முன் இருக்கும் வழிகள் இரண்டு:

1. ஜனங்களின் நன்மையையே அசட்டை செய்துவிட்டு, இருக்கும் வர்க்கத்தின் நன்மையை மாத்திரம் முன் நிறுத்தி சர்க்கார் செயலாற்றலாம். உற்பத்தியை நிர்வகிக்காமல், முதலாளிகளின் லாபக் கொள்ளையைத் தடுக்காமல், ஜனங்களின் உயிருடன் விளையாடும் "திருக்கூட்ட"த்தை நிர்மூலம் செய்யாமல், "கன்ட்ரோல்" முறையை மாத்திரம் அமலுக்குக் கொண்டு வரும் திட்டம் இந்த இனத்தைச் சேர்ந்தது.

2. இருக்கும் வர்க்கத்தின் நன்மையை அசட்டை செய்துவிட்டு, ஜனங்களின் நன்மையை முன் நிறுத்தி சர்க்கார் செயலாற்ற வேண்டும். உற்பத்தியை நிர்வகிப்பதும், பஞ்சாலை போன்ற ஜீவாதாரமான தொழில்களைத் தேசியமாக்குவதும், முதலாளிகளின் லாபக் கொள்ளைக்கு முற்றுப்புள்ளி வைப்பதும், சாமான்களின் விலைகளைக் குறைத்து பணத்தின் மதிப்பை உயர்த்துவதும், ஜனங்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதும், ஜனங்களின் உயிருடன் விளையாடும் "நாசகாரக் கூட்ட"த்தை நிர்மூலம் செய்வதும், இந்த அடிப்படையில் "கன்ட்ரோல்" திட்டத்தை அமலுக்குக் கொண்டு வருவதும் இரண்டாவது இனத்தைச் சேர்ந்தது.

பொருளாதார நெருக்கடியைத் தீர்க்க சர்க்காருக்கு முன் இருக்கும் வழிகள் இவைதான். இந்த வழிகளில் சர்க்கார் எந்த வழியை மேற்கொள்ளும்?

# எழுதினாய்! செத்துவிட்டாய்!

'மணியன்'

எழுதினாய்! செத்துவிட்டாய்!
ஏகினாய்! புதுமைப்பித்தா!
எழுதினாய்! இன்னலுற்றாய்!
இங்குஏன் பிறந்துநின்றாய்?

ஏசுவின் சரித்திரத்தை
ஏன் படிக்காதிருந்தாய்?
மாசிலாக் காந்தி வாழ்வு
முடிந்ததேன் அறியவில்லை?

பழைமையேன் பேசவில்லை?
பாரினில் மேதை என்றால்
அழுதுதான் தீரவேண்டும்!
அழிந்தழிந் தழியவேண்டும்!

உடலினைத் தாள்களாக்கி
உதிரம் மைஆக்கி, என்பு
எடுத்தனை எழுதுகோலாய்,
எழுதினாய் தேய்ந்துபோனாய்!

மூச்சினைக் கைபிடித்து
மோதிடும் வறுமைதாங்கி
ஏச்சினைச் சுமந்து நின்று
எழுதினாய்! எரிந்துவிட்டாய்!

தாழ்வினை உனக்களிக்கத்
தயங்கிடா மேதினிக்கு
வாழ்வினை எழுதிவைக்க
வடித்தனை குருதி ஆறு!

வந்ததும் திரும்பிவிட்டாய்!
வழக்கமோ மணிகளுக்கு?
அந்தமே அற்றுவிட்டாய்!
அகத்தினை இங்குவிட்டாய்!

நல்லவர் வாழ்ந்திருக்க
நானிலம் பொறுப்பதில்லை!
வல்லதோர் சரித்திரத்தின்
வல்லமை கண்டுகொண்டோம்!

சிதையினில் வைத்த தீயும்
செந்தமிழ் இலக்கியத்தின்
கதைகளை எரிக்குதையா!
கருத்தை கருக்குதையா!

# ஆதாமும் ஏவாளும்

ரங்கனுசு

கிறிஸ்தவ வேதமாகிய பைபிளில் கூறியபடி ஆதாம் என்பவன் மனிதவர்க்கத்தின் தந்தை; ஏவாள் என்பவள் மனிதவர்க்கத்தின் தாய்; இருவரும் மனித ஜாதியின் முதல் தம்பதிகள். இந்த இருவரும் எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள்? என்ன ஜாதியினர்? இவர்கள் பேசிய பாஷை என்ன?

ஆதாமும் ஏவாளும் யூத ஜாதியினர் என்றும், அவர்கள் எபிரேய மொழியைப் பேசினுர்கள் என்றும் யூதர்கள் கூறினுர்கள். இதற்கு யூதர்கள் காட்டும் ஆதாரம் என்ன? யூத மொழியில் 'ஆதாம்' என்ற சொல்லுக்கு 'சிவப்பாக உள்ள ஒருவன்' அல்லது 'சிவப்பாக உள்ள ஒன்று' எனப் பொருள் இருப்பதாலும், 'ஏவாள்' என்றுல் 'மெருகில்லாமல் 'மண்'ணுகத் தோற்றும் ஒருத்தி அல்லது ஒன்று' எனப் பொருள் இருப்பதாலும் இந்த இருவரும் யூதர்களே என்பது யூதர்களின் கட்சி. மேலும், கடவுள் யூதர்களையே தம் அபிமான ஜனங்கள் எனக் கூறியதால், கடவுளும் யூதர்கள் பேசிய எபிரேய மொழியில்தானே, உலகத்தின் ஆதி தகப்பனுடன் பேசியிருக்க முடியும்!—யூதர்களின் கூற்று இது. யூதர்களில் யாரும் இந்த வாதத்தை மறுக்கவில்லை.

கிரேக்க நாட்டில் ஒரு மதவாதிகளின் கூட்டம் இருந்தது. அந்தக் கூட்டத்தினர் கிறிஸ்தவ தத்துவம், கிரேக்க தத்துவம், கீழைநாட்டுத் தத்துவம் ஆகியவற்றில் கொஞ்சம் கொஞ்சம் எடுத்து அவற்றை ஒரு தத்துவமாக ஆக்கி அனுஷ்டித்து வந்தவர்கள். அவர்கள் யூதர்களுக்கு எதிர்க் கட்சியினராகவும் இருந்தனர். ஆகவே அவர்கள் யூதர்களின் முடிவை ஏற்றுக் கொள்ளுவார்களா? அந்தக் கிரேக்க நாட்டு மதவாதிகள், ஆதாமும் ஏவாளும் கிரேக்கர்கள் என்றும், கிரேக்க மொழியில்தான் கடவுள் அவர்களோடு பேசினுர் என்றும் கூறினுர்கள்.

கி. பி. 7-ம் நூற்றுண்டில் சிரியா நாட்டில் 'பொக்கிஷக் குகை' என்ற ஒரு புத்தகம் தோன்றியது. அதில் ஆதாமும் ஏவாளும் சிரியா நாட்டினர் என்றும் சிரியா மொழியைப் பேசியவர்கள் என்றும் கூறப்பட்டிருந்தது.

இதன் பிறகு, ஆதாம் - ஏவாள் கதை வேறிடங்களுக்கும் பரவலாயிற்று.

ஈடன் தோட்டம் அரேபியப் பிரதேசத்தில் உள்ள பாபிலோன் நகரத்துக்கு அருகாமையில் இருந்தது என்று யூதர்களே கூறியிருக்

---

**பைபிளில், ஆதாம் என்பவன்தான் மனிதவர்க்கத்தையே பெற்றெடுத்த முதல் தந்தை என்று சொல்லப்படுகிறுன். மண்ணிலிருந்து கடவுள் அவனைப் படைத்தாராம். அவனுடைய இடுப்பு எலும்பைப் பெயர்த்து எடுத்துத்தான் அவனுடைய மனைவியாகிய ஏவாள் சிருஷ்டிக்கப்பட்டாளாம். இவர்களுக்கு மூன்று ஆண் குழந்தைகள். இந்த ஆதாமும் ஏவாளும் எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பது பற்றி நெடுங்காலமாக நடைபெற்று வரும் விவாதத்தைக் கூறுகிறது கட்டுரை. கட்டுரையாளர் ருஷ்யாவில பிறந்து இங்கிலாந்தின் பிரஜையாக இருக்கும் இளைஞர். லில்லிபுட் பத்திரிகையில் வெளிவந்ததன் சாரம்.**

— சக்தி

கிறார்கள். ஆகவே, ஈடன் தோட்டத்தில் தோன்றிய ஆதாம், அரபி பாஷையையே பேசியிருக்க வேண்டும் என்றனர் அரேபியர்.

பிறகு வெகு காலம் ஆதாம், ஏவாளைப்பற்றி யாரும் பிரஸ்தாபிக்கவில்லை. மறுமலர்ச்சிக் காலம் தோன்றியது. அப்போது ஸ்பெய்ன் தேசத்தின் வட பகுதியில் பாஸ்க் என்னும் பிரதேசத்தில் வாழ்ந்தவர்கள் விவகாரத்தைப் பழையபடியும் ஆரம்பித்தார்கள். அந்நாட்டில் 17-ம் நூற்றாண்டில் வாழ்ந்த இலக்கண கர்த்தாவாகிய லார்ரமெண்டி என்பவர் உலகத்தின் ஆதி இனம் பாஸ்க் இனமே என்றும், அதனால் ஆதாம் ஏவாளுடன் கடவுள் பாஸ்க் மொழியில் தவிர வேறு எம்மொழியிலும் பேசியிருக்கமுடியாது என்றும்கூறினார். பிறகு, நெப்போலியன் காலத்தில் வாழ்ந்த பாஸ்க் நாட்டினரான டைஹார்ஸ் டி பிடாஸ்ஸூட் என்பவர் லார்ரமெண்டியின் கருத்தை ஆதரித்ததுடன், மற்றும் பலவித விநோதமான காரணங்களையும் காட்டினார்.

மேற் சொன்ன லார்ரமெண்டியின் காலத்தில் ஸ்வீடன் தேசத்தில் ஒலாப் ருட்பெக் என்னும் விஞ்ஞானி ஒருவர் இருந்தார். அவர் ஆதாமும் ஏவாளும் ஸ்வீடன் தேசத்தைச் சேர்ந்தவர்கள் என்று கூறினார். இப்படிக் கூறுவதன் காரணம் என்ன? ஆதாம் ஏவாள் கதையில் வரும் சுவர்க்கம், ஸ்வீடனைப்போல சுகமான சீதோஷ்ண ஸ்திதியுள்ள நாட்டில் தான் இருந்திருக்க முடியும் என்பதுதான்! இந்த அபிப்பிராயம் சம்பந்தமாக ருட்பெக்குக்கும், அவருடைய எதிரிகளுக்கும் பலத்த சண்டை வந்துவிட்டது. கடைசியில், நார்வே நாட்டைச் சேர்ந்த ஒருவர், ஆதாமும் ஏவாளும் நார்வே மலை ஜாதியினர்தான் என்றும், அந்த சுவர்க்கம், நார்வே மலைத் தொடர்களில் ஒரு இடத்தில் இருக்கவேண்டும் என்றும் கூறவே ஸ்வீடன் தேசத்து அறிவாளிகளின் சண்டை 'கப்' என்று நின்றது.

கிளாஸ்கோ நகரத்தில் வசித்து வந்த ரோரி மக்லீன் என்பவர் 1821-ம் வருஷத்தில் ஒரு புத்தகம் எழுதினார். அவர் பிரிட்டனுக்கு வடமேற்குத் திசையில் உள்ள ஹெப்பிரிடீஸ் என்ற பெயர் கொண்ட தீவுக் கூட்டத்தில் முல் என்ற தீவில் பிறந்தவர். அவர் தம் புத்தகத்தில் ஆதாமும் ஏவாளும் ஹெப்பிரிடீஸ் தீவில் பிறந்தவர்கள் என்றும் அந்தத் தீவின் பாஷையாகிய கெயிலிக் பாஷையைப் பேசியவர்கள் என்றும் கூறினார். இதற்கு ஆதாரம் தேவை என்றால், 'இதோ ஆதாரம்' என்று ஒரு 'ஆதார'த்தைக் காட்டினார். ஹெப்பிரிடீஸ் தீவில் வாழும் கெய்லிக் மக்கள் மக் ஆதாம் என்ற பெயரையே அதிகமாகக் குழந்தைகளுக்குச் சூட்டுகிறார்களாம்; மக் ஆதாம் என்றால் ஆதாமின் மக்கள் என்று அர்த்தமாம். இந்த ஆதாரத்தைக் காட்டினார் ரோரி மக்லீன்.

1840-ம் வருஷத்தில் ஹங்கேரிக்காரரான ஸ்டீபன் ஹோர்வாத் என்பவர் ஆதாமும் ஏவாளும் ஹங்கேரி நாட்டில் பிறந்து ஹங்கேரி மொழி பேசியவர்கள்தான் என்று கூற, செக்கோஸ்லோவேக்கியா, செர்வியா, ருமேனியா முத

விய நாட்டைச் சேர்ந்தவர்களும் அவர் கூறியதை ஒப்புக்கொண்டார்கள். அதே சமயத்தில் அர்ஜென்டைனு (தென் அமெரிக்காவில் உள்ள ஒரு நாடு) வில் உள்ள அமெகினே என்னும் விஞ்ஞானி, தம் நாட்டின் மேற்குப் பகுதியில் பூமிக்கு அடியில் புதைந்து கிடக்கும் பழங்கால உயிர்ப் பிராணிகளின் நசித்த சடலங்களைத் தோண்டி எடுத்து ஆராய்ந்து கொண்டிருந்தார். அந்த நசித்த சடலங்களைப் பார்த்தால் அர்ஜென்டைனுதான் உலகத்தில் மனித வர்க்கத்தின் தொட்டில் பருவம் தொடங்கியிருக்க வேண்டும் என்றும், ஆகவே ஆதாமும் ஏவாளும் அர்ஜென்டைனுவாசிகள் என்றும் கூறினர்.

1914-ம் வருஷத்தில் சீனுவில் ஒருவர் கிளம்பினர். அவர் பெரிய பண்டிதர். அவருடைய பெயர் ட்ஸீ ட்ஸான் டாய் என்பது. ஈடன் தோட்டம், சீனுவைச் சேர்ந்த துருக்கிஸ்தானத்தில்தான் இருந்தது என்று கூறி, ஆதாம் சீனுக்காரன் என்றும் முடிவு கட்டினர். அவருக்குப் பிறகு இந்த ஆராய்ச்சியில் யாரும் இறங்கியிருக்கிருர்களா என்ற விஷயம் வெளிப்படையாகத் தெரியவில்லை.

❋

## அறிஞன் அடுத்தவீட்டில் இருப்பான்

வில்லியம் ஹேஸ்லிட் அப்ஸன் என்ற ஆங்கில எழுத்தாளர், யந்திரக் கலப்பையைப்பற்றி முதல் முதலாக ஒரு கதை எழுதியிருந்தார். அது பத்திரிகையில் வெளிவந்தது. இதைப் படித்ததும் யந்திரக் கலப்பைகள் செய்யும் ஒரு கம்பெனி முதலாளி அந்தப் பத்திரிகை ஆசிரியருக்கு ஒரு கடிதம் எழுதி, அந்தக் கதையை எழுதிய ஆசிரியர் யார் என்றும் அவருடைய உதவி யந்திரக் கலப்பை செய்யும் தொழிலுக்கு மிகவும் அனுகூலமாக இருக்கும் என்றும் எழுதியிருந்தார்.

இந்தக் கடிதத்தைப் பார்த்து ஆசிரியர் புன்னகை செய்தார். உடனே அவர் பின்வருமாறு பதில் எழுதினர்:

"உங்கள் காரியாலயத்தின் வெளிக்கூடத்தில் ஒரு கோடியில் ஆழ்ந்த சிந்தனையுடன் உட்கார்ந்து கொண்டிருப்பவரைப் பாருங்கள். அவர் மூக்குக் கண்ணாடியும் போட்டிருக்கிருர்; கன்னங்கறேலென்று கற்றையாக இருக்கும் தலைமயிர். அவர் பெயர்தான் வில்லியம் ஹேஸ்லிட் அப்ஸன். அவருக்குச் சம்பளம் கொடுத்து வேலை வாங்குபவர் நீங்கள்தான்."

—ஜேம்ஸ் ஆல்ட்ரெட்ஜ்

## லட்சியக் கணவன்

மனைவி: விருந்துக்கு வந்திருந்த எல்லா ஆண் பெண்களையும் பார்த்த பிறகுதான், தங்களைக் கல்யாணம் செய்துகொண்டதால் நான் எப்படிப்பட்ட பாக்கியசாலி ஆகிவிட்டேன் என்பதைத் தெரிந்துகொண்டேன்.

கணவன்: சந்தோஷம், அன்பே!

மனைவி: வேறு எந்தப் பெண்ணும் அபகரிக்க முயலாத ஒரு கணவனைக் கல்யாணம் செய்துகொண்டதை விட வேறு சௌகரியம் ஒன்று உண்டா?

# இந்தியாவும் காமன்வெல்த் அமைப்பும்

**காலக்கோலன்**

இன்று காமன்வெல்த் என்று கூறப்படும் அமைப்பை இதற்குச் சில நாட்களுக்கு முன்னர் 'பிரிட்டிஷ் காமன்வெல்த்' என்றும், அதற்கும் முன்னால் 'பிரிட்டிஷ் சாம்ராஜ்யம்' (British Empire) என்றும் குறிப்பிட்டு வந்தனர். இவ்வாறு காலத்துக்கு ஏற்றபடி பிரிட்டிஷாரின் சாம்ராஜ்யத்தின் பெயர் மாற்றப்பட்டு வந்தது. இதற்குக் காரணம் பிரிட்டிஷார் காலத்துக்கேற்றபடி கொஞ்சம் கொஞ்சம் வளைந்து கொடுத்துத் தங்களுடைய ஆதிக்கத்தை வெகு சாதுரியமாக நீடித்துக்கொண்டு வரும் திறமை பெற்றவர்கள் என்பதே.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் சாம்ராஜ்யம் என்ற வார்த்தை உபயோகப்படுத்தப்பட்டது. ஆங்கிலேயர் சாம்ராஜ்யத்தைக் கட்டி வளர்த்தவர்கள் என்று சொல்வதில் பெருமை கொண்டனர். அவர்களுடைய ஆட்சியிலிருந்த பிரதேசத்தில் அதிக அரசியல் விழிப்பு ஏற்படவில்லை.

இங்கிலாந்திலிருந்து குடியேறுவதற்காக ஆஸ்திரேலியா, கனடா, தென் ஆப்பிரிக்கா போன்ற பிரதேசங்களுக்குச் சென்றவர்கள் ஆங்காங்கு தங்களுடைய ஆட்சியை ஏற்படுத்திக் கொண்டனர். எனினும் இங்கிலாந்தைத் தங்களுடைய தாய்நாடு என்று கருதி அதனுடன் தொடர்பு வைத்துக் கொண்டனர். இங்கிலாந்தும் இந்தப் பிரதேசங்களைத் தன்னுடைய குடும்பத்தாரின் இல்லங்களெனப் பாவித்து, அவற்றிடம் செல்வாக்குப் பெற்று, உலக அமைப்பில் தன்னுடைய பிரதேசம் என்ற முறையில் அவை இயங்கும்படி செய்தது.

இருபதாம் நூற்றாண்டில் ஏகாதிபத்தியம் என்ற சொல் பிறந்தது. அத்துடன் ஏகாதிபத்திய எதிர்ப்பு என்ற கோஷமும் பிறந்தது. மற்ற வல்லரசுகள் சாம்ராஜ்யத்தை ஏற்படுத்திக் கொண்டன. முதல் மகாயுத்தம் வந்தது. அந்தக் காலத்தில் பிரிட்டன், தன்னுடைய சாம்ராஜ்யத்திலிருந்து, டொமினியன்களிலிருந்து, உதவி பெற்றது. ஏகாதிபத்திய எதிர்ப்பும் வளர்ந்தது. 'சூரியன் அஸ்தமனமாகாத சாம்ராஜ்யம்' என்று பெருமையாக பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தைக் குறிப்பிடுவது காலத்துக்கு உகந்தது அல்ல என்று பிரிட்டன் உணர்ந்தது. ஆங்கிலேயர்களும், இதர வெள்ளையரும் குடியேறி, டொமினியன்களென்று வளர்ந்த பிரதேசங்களின் அந்

பிரிட்டன் உள்ளிட்ட காமன்வெல்த் நாடுகளில் இந்தியாவும் ஒரு நாடாக இருக்க வேண்டுமா? அல்லது காமன்வெல்த்தை விட்டு விலகி இந்தியா சுயேச்சை நாடாக விளங்க வேண்டுமா? இந்தக் கேள்விகள் சமீபகாலத்திய பிரச்னைகளாக இருந்து வருகின்றன. கட்டுரையாளர் காமன்வெல்த்திலிருந்து விலகி இந்தியா சுயேச்சை நாடாகத் திகழ வேண்டும் என்று பல காரணங்களை வற்புறுத்துகிறார்.

தஸ்தை 'சரிசமமான அந்தஸ்து' என்று பிரகடனப்படுத்தி பிரிட்டிஷ் சாம்ராஜ்ய அமைப்பைப் பலப்படுத்திக் கொண்டது. மற்ற பிரதேசங்களும் நாளடைவில் டொமினியன் அந்தஸ்தை அடையலாம், அடைந்து விட்டால் நடைமுறையில் அவற்றிற்குச் சுதந்திரம் ஏற்பட்டுவிடும் என்ற வாதத்திற்கும் இடமேற்பட்டது.

அந்தக் காலத்தில்தான் இந்தியா பரிபூர்ண சுதந்திரம் பெற்ற சுயேச்சையை அடைய வேண்டுமா, அல்லது டொமினியன் அந்தஸ்தை அடைந்தால் போதுமா என்ற சர்ச்சை கிளம்பிற்று. பிரிட்டிஷ் ஆட்சியினால் ஏற்பட்ட நலன்களைப் பற்றிமட்டும் வானளாவப் புகழ்ந்து பேசி பிரிட்டிஷாரிடம் தூது கோஷ்டிகள் சென்று மனுக்கள் போட்டு முன்னேறலாம் என்று நம்பிக்கை கொண்ட மிதவாதிகள் டொமினியன் அந்தஸ்து வேண்டு மென்றனர். பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் ஒரு ஏகாதிபத்திய அமைப்பு. அது இந்தியாவை அடிமை நாடாக்கி வைத்துள்ளது. அதனால் இந்தியாவில் பல மாறுதல்கள் ஏற்பட்டிருந்த போதிலும், அதினின்று பரிபூர்ண விடுதலை அடையாவிட்டால் நாட்டு மக்கள் உண்மையில் வளர்ச்சி அடைவதற்கும் உய்வதற்கும் முடியாது. அந்த பரிபூர்ண சுதந்திரத்தை நமது லட்சியமாகக் கொண்டு அதற்காக எந்த அளவுக்கு வேண்டுமானாலும் போராட வேண்டும் என்று எண்ணியவர்கள் காங்கிரஸின் சுதந்திரத் தீர்மானத்தை நிறைவேற்றினர் என்பதைக் கவனத்தில் வைத்துக் கொண்டால், அது இன்று ஏற்பட்டுள்ள பிரச்னையில் சரியான முடிவுக்கு வருவதற்கு உதவும்.

முதல் மகாயுத்தத்திற்கும் இரண்டாவது உலக யுத்தத்திற்கு மிடையில் சென்ற சுமார் இருபது வருஷ காலத்தில் உலகில் பொருளாதார நெருக்கடி முற்றிற்று. அந்த நெருக்கடியைச் சமாளிப்பதற்குப் பிரிட்டனுடைய புது அமைப்பு—பிரிட்டிஷ் காமன்வெல்த் அமைப்பு—சாதகமாயிருந்தது. பிரிட்டிஷ் காமன் வெல்த் நாடுகளுக்குள்ளே பரஸ்பர வியாபாரம் பெருகுவதற்கும், பொருளாதாரத் தொடர்பு பலப்படுவதற்கும் ஆட்டோவா மகாநாடு (கனடாவில் 1932-ல் நடந்த மகாநாடு) உதவியது. டொமினியன்களுக்கு ஒரு சுதந்திர அந்தஸ்தை அளித்த வெஸ்டுமினிஸ்டர் சட்டம் (Statute of Westminister) 1931-ல் அதாவது உலகப் பொருளாதார நெருக்கடி முற்றிய காலத்தில், நிறைவேற்றப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

இரண்டாவது உலக யுத்தம் ஏற்பட்ட பின்னர் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய அமைப்பு முன்னிலும் அதிகமாக ஆட்டம் கண்டு விட்டது. தூரக் கிழக்கில் ஏற்பட்ட குழப்பங்களால் இந்தியா, பர்மா, சிலோன் ஆகிய நாடுகளின் அந்தஸ்து உயர்த்தப்பட்டது. மீண்டும் ஒரு வகையில் பிரிட்டிஷ் சாம்ராஜ்ய அமைப்பை மாற்றி அமைக்கவேண்டிய அவசியத்தை பிரிட்டன் உணர்ந்தது. புதிதாக டொமினியன் அந்தஸ்தோ, சுதந்திரமோ பெற்ற நாடுகளில் பிரிட்டிஷ் குடிகள் கிடையாது;

பிரிட்டிஷ் மூதாதையர்களின் சந்ததிகள் அரசியல் ஆதிக்கம் பெறவில்லை; பெறக்கூடிய பிரதேசங்களுமல்ல; அரசியலில் பதவி வகிக்கும் பிரமுகர்கள் 'பிரிட்டிஷ்' என்ற பதத்தையே வெறுக்கக்கூடிய மக்களிடம் வாழ வேண்டும். இருபது வருஷ கால அரசியல் விழிப்பினாலும், யுத்த கால சம்பவங்களினாலும் மன்னர் முடியாட்சி என்பதையும் வெறுத்து குடியரசு அமைப்பை விரும்பினர். ஆகவே இந்த நிலைமைக்கு ஏற்றபடி பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை அமைக்கவேண்டுமென்பதை பிரிட்டிஷார் உணர்ந்து கொண்டனர். அதனால்தான் சமீபத்தில் நடந்த காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாட்டில் பிரிட்டிஷ் காமன்வெல்த் என்ற வாக்கியத்துக்குப் பதிலாக வெறும் "காமன்வெல்த்" (Commonwealth of Nations) என்ற பதம் உபயோகப்படுத்தப்பட்டிருக்கின்றது. பிரிட்டிஷ் முதலாளித்துவ ஆட்சியை நீடிக்கவேண்டும் என்ற எகானமிஸ்ட்டு பத்திரிகை பின்வருமாறு எழுதியது: "இந்தியா போன்ற நாடுகள் தங்களுடைய அரசியல் அமைப்பில் மன்னராட்சியை ஏற்கமுடியாத நிலைமையிலிருக்கின்றன. பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில், காமன்வெல்த் அமைப்பில், குடியரசு ஆட்சியை ஏற்படுத்திக்கொள்ளும் நாடுகளும் இருக்கக்கூடிய வகையில் ஒரு வழிதேடுவதே இன்று ஆங்கிலேயரின் புத்திசாலித்தனத்தின் முக்கியமான வேலை."

"பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தைக் கரைத்துவிடுவதற்காக நான் மன்னரின் பிரதம மந்திரியாகவில்லை" என்று பேசிய சர்ச்சில் சில நாட்களுக்கு முன் தொழிற்கட்சி பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தைக் கரைத்து வருகின்றது என்றார். இதற்குப் பதிலுரைத்த அட்லி, "பிரிட்டிஷ் ஆதிக்கத்தை முற்றிலும் வெறுக்கத் தக்கதாக்கி, ஒரே நொடியில் குருட்டுத்தனமாக ஒழித்துவிடும் வழியை சர்ச்சில் பின்பற்ற வேண்டும் என்கிறார். ஆனால் நாங்கள்தான் பிரிட்டனுடைய அந்தஸ்தைக் காப்பாற்றி வருகிறோம்" என்றார். ஆம், பிரிட்டனுடைய ஆதிக்கத்தை, சாம்ராஜ்ய அந்தஸ்தைக் காப்பாற்றும் வழி இதுதான் என்று தொழிற்கட்சி உணர்ந்துகொண்டு இக் காலத்துக்கு ஏற்ற முறையில் காமன்வெல்த் அந்தஸ்தை ஏற்படுத்தியிருக்கின்றது. இந்த வகையில்தான் இந்தியா போன்ற நாடுகள் பிரிட்டிஷாருடன் சேர்ந்து வேலை செய்யும்படியான ஒரு அமைப்பில் வைத்துக்கொள்வதற்கு முடியும் என்று அவர்கள் கூறுகின்றனர்.

எந்த நாடும் பரிபூர்ண சுதந்திர அந்தஸ்தை அடைந்திருப்பதே மேலானது. அப்பொழுதுதான் அதற்கு ஒரு தனியான மரியாதையும் அந்தஸ்தும் ஏற்படும். அதன் மூலம்தான் நாட்டு மக்களுக்கு ஒரு தன்னம்பிக்கையும் கம்பீரத் தோற்றமும் ஏற்பட்டு வளரும். நாம் சுதந்திரத்துக்குப் போராடிய காலத்தில் இது ஏற்பட்டது. இந்த குணங்கள் வளர்ச்சி அடைய வேண்டும் என்றால் நம்மை இத்தனை வருஷங்களாக அடிமைகளாக நடத்திவந்த அமைப்பில்

நாம் இணைந்துவிடக்கூடாது. அந்த அமைப்பு புதிய வேஷம் போட்டுக் கொண்டிருக்கலாம். அதற்காக அந்தப் புது உருவத்தைக் கண்டு மயங்கிவிடக்கூடாது.

காமன்வெல்த்தில் நாம் சேராமல் விலகி இருப்பதால் காமன்வெல்த் நாடுகளுடனுள்ள உறவுகளை கத்தரித்துக் கொள்கிறோம் என்று அர்த்தமில்லை. வியாபார ஒப்பந்தங்களைச் செய்து கொள்வோம். குறிப்பிட்ட காலத்துக்கு குறிப்பிட்ட லட்சியத்துக்காக அரசியல் ஒப்பந்தங்களையும் எந்த நாட்டுடனும் செய்து கொள்ளலாம். அவை அனைத்தும் நாம் ஒரு சுதந்திர நாடு என்ற அந்தஸ்துடன் செய்து கொள்ளும் ஒப்பந்தங்களாக இருக்கும். பிறநாடுகளின் தொடர்பை அறுத்துக் கொண்டு தனித்து நிற்பது நமக்கு எவ்வளவு கெடுதலோ, அதே அளவுக்கு நம்முடைய உறவைக் கத்தரித்துக் கொண்டால் பிறநாடுகளுக்கும் கெடுதலே.

நாம் இப்பொழுதுதான் சுதந்திரம் அடைந்தோம். இளம் பருவத்திலிருக்கின்றோம். நமக்கு நவீன முறைகளில் பயிற்சிபெற்ற ராணுவம் கிடையாது. நம்முடைய கடல்களைப் பாதுகாக்க கப்பற் படை கிடையாது. ஆதலால் காமன்வெல்த்தில் இருப்பது நலம் என்று சிலர் எண்ணலாம். அப்படி எண்ணுவது தன்னம்பிக்கையின்மையையே காண்பிக்கிறது. நமக்குப் பலமில்லை என்று பிறருடைய ஆதரவில் வாழவேண்டுமென்றால், பிறர் நம்முடைய பலவீனத்தைக் கண்டுகொண்டு, நாம் அவர்களை நம்பி வாழும் நிலையிலே தான் வைத்துக் கொண்டிருப்பார்கள். நம் கையில் எந்த வித ஆயுதம் இல்லாத காலத்திலும் சுதந்திரப் போர் நடத்தலாம், நடத்தி வெற்றி பெறலாம் என்ற உறுதியும் ஊக்கமும் நம்முடைய தேசிய இயக்கத்தில் தோன்றியது. அதை இவ்வளவு சீக்கிரத்தில் நாம் கைவிட்டுவிட வேண்டுமா?

காமன்வெல்த்தில் இருப்பதனால் சமாதானத்திற்காக ஏதாவது விசேஷமாகப் பாடுபடுகின்றோமா? அதற்காகப் பாடுபடுவதாயிருந்தால் நாம் ஐ. நா. ஸ்தாபனத்தைப் பலப்படுத்த வேண்டும். அந்த ஸ்தாபனத்திற்குள்ளே, சமாதானத்தைக் குலைக்கும் வகையில் வேலை செய்யும் வல்லரசுகளைக் கட்டுப்படுத்த வழி தேடவேண்டும். காமன்வெல்த் என்ற அமைப்பிற்குள் நாம் இருப்பதனால் யுத்தத்தில் நாம் சிக்கிக் கொள்ளும் அபாயம் உண்டு. இந்தியா ஆசிய, ஆப்பிரிக்க மக்களுக்கு வழிகாட்டியாக விளங்க வேண்டுமானால்,எந்த தேசிய இனத்துக்கும் சுதந்திரமும் சமமான அந்தஸ்தும் இருக்க வேண்டும் என்ற கொள்கைக்காக இடைவிடாது பாடுபட வேண்டும் என்றால், எந்த வகையிலும் பழைய ஏகாதிபத்திய அமைப்பு ஏற்படுத்தப்படக் கூடாது என்பதை எடுத்துரைக்க வேண்டும். மற்ற பகுதிகளைக் கொண்டு பிரிட்டன் சாம்ராஜ்யத்தை இப்புதுவகையில் அமைத்துக் கொண்டால், அதில் சேராமலிருந்து கொண்டாவது இந்தக் கொள்கையை, ஜனநாயகத்தை நிலைநாட்ட வேண்டும்.


கமலா கோட்னிஸ்
தனது அழகிய மேனியை
லக்ஸ்
டாய்லட்
சோப்பினால்
பாதுகாத்துக்கொள்கிறார்
LUX
LUX TOILET SOAP
சுந்தரவதனி கமலா சொல்வதாவது : "என் மேனி அழகை லக்ஸ் டாய்லட் சோப்பினாலேயே காப்பாற்றிக்கொள்கிறேன். சுத்தமானதும் செளமியமானதுமான இச்சோப்பின் சுறுசுறுப்பான நுரை சருமத்தை சுத்தம் செய்வதுடன், அப்பழுக்கற்றதாகவும் சோபையுடையதாகவும் வைத்துக் கொள்கிறது. மேனி அழகை முக்கியமாகக் கருதும் ஒவ்வொரு மங்கையும் தவறாமல் லக்ஸ் 'டாய்லட் சோப் உபயோகிப்பதை ஒரு பழக்கமாகக்கொள்ளவேண்டும்."
லக்ஸ் டாய்லட் சோப்
சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப்!
LTS. 176-50 TM




# பார்லிக் கஞ்சி தயாரிக்க சுலபமான முறை

இரண்டு டீஸ்பூன் பார்லியை சிறிது ஜலத்தில் பசைபோல் கரைத்து, பின் இரண்டு டம்ளர் ஜலத்தில் போட்டு ஐந்து நிமிஷம் நன்றாகக் கொதிக்கவைக்கவும். பின்னர் இறக்கி ருசிக்கு வேண்டிய உப்பு அல்லது சர்க்கரை சேர்த்துப் பருகவும். இவ்வளவு சுலபத்தில், ஐந்தே நிமிஷத்தில், ஓர் ருசியான சிறந்த பானத்தைத்தயாரிக்கலாம். வியாதியுற்றோ குணப்படும் தருவாயிலோஉள்ள பலஹீனருக்கு இது சிறந்த உணவு. *பியூரிடி பார்லி* புஷ்டியான தானியங்களினின்றும் தயாரித்து காற்று புகாமல் தகரடப்பாக்களில் அடைக்கப்பட்டிருக்கிறது. ஒரு பங்கு பியூரிடி பார்லி எட்டு பங்கு அரிசி பார்லிக்கு ஈடாகும். இதனால் எவ்வளவு நேரம், சிரமம் மிச்சமாவது என்று நினைத்துப்பாருங்கள்.

## பியூரிடி
## இந்தியன் பார்லி

APEX LTD

**அட்லாண்டிஸ் (ஈஸ்ட்) லிமிடெட், 20/1, சிட்லா ரோடு, கல்கத்தா**

தென்னிந்தியாவிற்கு ஏஜெண்டுகள் :

**பாரி அண்ட் கோ., லிமிடெட், தபால் பெட்டி நம்பர் 12, சென்னை.**



## அவளுடைய பொக்கிஷம்

சூதக வியாதியினின்று விடுதலையளித்து, புத்திர பாக்கியத்திற்கு உதவிய அருண டானிக்கை தன் அருமைக் குழந்தையைப் போல் பொக்கிஷமாகவும், வரப்பிரசாதமாகவும் கருதுகிறாள்.

பண்டிட் டி. கோபாலாசார்லுவின்

# அருணை

கர்ப்பாசயரோக நிவாரணி

**ஆயுர்வேதாஸ்ரமம் லிமிடெட், மதராஸ் 17.**

# குட்டிக் கதைகள்

ஷேக் ஸாதி

## முட்டாள்களின் காலம்

ஹரூன்-அர்-ரஷீத் என்ற அரசனிடம் எகிப்து தேசம் சரணுகதி அடைந்துவிட்டது. ரஷீத் சொன்னுன் :

"எகிப்து தேசத்தை ஆளுகிறேம் என்ற அகந்தையினுல், அந்த தேசத்து அரசன் 'நான் தான் கடவுள்' என்று சொல்லிக்கொண்டிருந்தான். அந்தப் போக்கிரிக்குச் சரியான பதில் கொடுக்கப் போகிறேன். அவன் ஆண்ட எகிப்து தேசத்தை, என் அடிமைகளின் மகா கேவலமான ஒருவனிடம் ஒப்படைக்கப்போகிறேன்."

ரஷீத்திடம் கோசாயிப் என்ற ஒரு நீக்ரோ அடிமை இருந்தான்; அவன் ஒரு மடையன். அவனை எகிப்து தேசத்துக்குக் கவர்னராக்கிவிட்டான் ரஷீத். ஒன்றும் அறியாத முழு மூடனுகிய கோசாயிப்பிடம் ஒரு நாள் எகிப்து தேசத்தின் விவசாயிகள் வந்து "நைல் நதிக்கரையில் நாங்கள் பருத்தி விதைத்திருந்தோம். ஆனுல், பருவம் தப்பிப் பெய்த பலத்த மழையினுல் பருத்திச் செடிகளெல்லாம் சேதமாகிவிட்டன" என்று தங்கள் கஷ்டத்தை எடுத்துக் கூறினுர்கள். அதற்கு கோசாயிப் சொன்னுன் :

"அப்படியானுல் நீங்கள் மயிரை விதைத்திருக்க வேண்டும்."

இந்த விஷயத்தை ஒரு மகான் கேள்விப்பட்டார். அவர் கூறினுர் :

பாட்டு

"........உலகம் தோன்றிய நாள் முதல் புத்திகெட்ட தூங்குப் பயல்கள்தான் கற்றறிந்த அறிஞர்களைக் கீழே தள்ளிவிட்டு, உயர்ந்த ஸ்தானங்களைக் கைப்பற்றிக் கொண்டு வந்திருக்கிறர்கள். கவிஞர்கள் பட்டினியினுலும், துயரத்தினுலும், குளிரினுலும் சாகிறர்கள்; முட்டாள்கள் நாசத்தின் நடுவே தங்கத்

---

பாரசிக நாட்டில் ஷீராஸ் என்ற ஊரில் பிறந்த ஷேக்ஸாதி ஞானச் சித்தர்; கவி இவருடைய முழுப் பெயர் மஸ்லா-உல்தின் ஸாதி-அல் ஷீராஸி என்றும் ஷேக் முஸ்லிக்-எடீ-தீன் என்றும் சொல்லப்படுகிறது. கி. பி. 1184-ல் பிறந்து 108 வருஷங்கள் வாழ்ந்தவர். வாழ் நாளெல்லாம் நாடோடியாகத் திரிந்து அநேக தேசங்களையும் போய்ப் பார்த்தவர். இந்தியாவுக்கும் வந்திருக்கிறர். தம் அனுபவத்தில் பார்த்தவை, கேட்டவை, படித்தவை, கற்பனை பண்ணியவை எல்லாவற்றையும் எழுதியிருக்கிறர். 40-ம் வயதுக்குப் பின பாரசிக மொழியைப் படித்து, பிறகு அம்மொழியில் புலவராக விளங்கியவர், அவர் எழுதிய பழந்தோட்டம், ரோஜாத்தோட்டம் என்ற பிரசித்தி பெற்ற இரண்டு புத்தகங்களில் ரோஜாத்தோட்டம் என்ற நூலிலிருந்து எடுத்தவை இக்குட்டிக் கதைகள்.

தைப் பார்த்து எடுத்துச் சுருட்டிக் கொள்கிறார்கள்."

## பேசவேண்டிய சந்தர்ப்பம்

கிஸ்ரா எனப்படும் நுஷர்வான் அரண்மனையில் மந்திரி சபைக் கூட்டம் நடந்துகொண் டிருந்தது. அப்போது அங்கே பர்ஸாசுமீர் என்ற மந்திரியும் மௌனமாக உட்கார்ந்து கொண்டிருந்தார். அவரைப் பார்த்து மற்ற மந்திரிகள் "நீங்கள் ஏன் விவாதத்தில் கலந்து கொள்ளாமல் இருக்கிறீர்கள் ?" என்று கேட்டார்கள். அதற்கு பர்ஸாசுமீர் பின்வருமாறு பதில் கூறினர் :

"மந்திரிகள் வைத்தியர்களைப் போன்றவர்கள்; அவர்கள் நோயாளிகளுக்குத்தான் இன்ன மருந்து சாப்பிடவேண்டு மென்று ஆலோசனை கூறுவார்கள். உங்கள் அபிப்பிராயம் சரி என்பதை நான் உணருகிறேன். அப்படியிருக்க நான் மேற்கொண்டு சொல்ல என்ன இருக்கிறது ?"

பாட்டு

*என் ஒத்தாசையின்றி காரியம் நடந்துகொண்டு போனல், நான் முன் வந்து ஊக்குவிக்கவோ, திட்டவோ மாட்டேன். ஆனல், ஒருவருடன் அறியாமல் குழியில் விழப்போதும் போது, நான் பார்த்துக் கொண்டு பேசாமல் ஊமையாக நின்றல், நான் குற்றச்சாட்டுக்கு ஆளாவேன்.*

## இரண்டுக்கும் காரணம்

ஒரு நல்ல மனிதன்; நீதி நெறிப்படி நடப்பவன். ஒருநாள் அவன், ஒரு சுல்தான் சுவர்க்கத்திலும், ஒரு சாமியார் நரகத்திலும் இருப்பதைப்போலக் கனவு கண்டான். உடனே அவன், 'சாமியாருக்கு நரகமும் சாமியாரல்லாத ஒருவனுக்கு சுவர்க்கமும் கிடைத்த காரணம் என்ன ?' என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்டான். கனவிலேயே அவனுக்குப் பின் வருமாறு பதில் கிடைத்தது:

'இந்த சுல்தான் ஏன் சுவர்க்கத்தில் இருக்கிறுன் என்றுல், அவன் நீதி நெறிப்படி நடப்பவர்களை நேசித்தான் ; சாமியார் ஏன் நரகத்தில் இருக்கிறுர் என்றுல் அவர் சுல்தான்களின் தயவுக்காகத் தொங்கிக் கொண்டிருந்தார்.'

பாட்டு

*சரீரத்தைத் தீய காரியங்களில் ஈடுபடாதவாறு அடக்கியாளாத வரையில், ஜெபமாலையினுலும், சந்நியாச உடையினுலும் பயன் ஏதும் ஏற்படுமா ?........*

## கொடியும் திரையும்

இந்தக் கதையைக் கேளுங்கள் : பாக்தாத் நகரத்தில் ஒரு கொடிக்கும், ஒரு திரைக்கும் ஒரு தகராறு வந்துவிட்டது. போர்க்களத்திலிருந்து அப்போதுதான் கொடி திரும்பி வந்திருந்தது. அந்தக் கொடி ஒரேயடியாகப் புழுதி படிந்தும் இருந்தது. அது மிகவும் கோபத்துடன் திட்டிக் கொண்டு, திரையைப் பார்த்துப் பின் வருமாறு கூறியது :

"நீயும் நானும் ஒரே சுல்தானுடைய ராஜசபையில்தான் வேலை பார்க்கிறோம். எனக்கு ஓய்வொழிச்சல் இல்லாத வேலை; கொஞ்சம் கூட ஓய்வு கிடைப்பதில்லை. கோழி கூப்பிடும் நேரத்திலிருந்து இரவில் இராப்பாடிகள் கூவும் நேரம் வரையில் நான்

பயணம் செய்து கொண்டே இருக்க வேண்டியிருக்கிறது. உனக்கோ, முற்றுகை, யுத்தக் கஷ்டங்கள், சூறாவளி வாரியடிக்கும் மணல், காற்று, வெயில்—இப்படி ஒரு சங்கடமும் கிடையாது. ஆனால் நான் எப்போதும் பட்டாளத்துடன் நடையாக நடந்து சாக வேண்டியிருக்கிறது. நீ மாத்திரம் என்ன 'உசத்தி'? நிலாவைப் போன்று வெள்ளை வெளேர் என்றிருக்கும் பையன்கள் உன்னைப் பொன்னேபோல் போற்றிப் பேணுகிறார்கள்; மல்லிகை மணம் கமழும் கன்னிப் பெண்கள் உன்னை அணைத்து வருடிக்கொண்டே தொடுகிறார்கள். என்னையோ, பட்டாளத்திலே புதிதாகச் சேர்ந்த மூட்டுப் பயல்கள் தான் சுருட்டி வைக்கிறார்கள்; அதுவும் பல தடவைகளில் என் தலையைக் கீழ்நோக்கிக் கவிழ்த்துச் சுருட்டி வைக்கிறார்கள்."

கொடி பேசியதும், திரை பேசத் தொடங்கியது:

"ஹூம்! நான் கேவலம் வாசல் கடையில் தலைவைத்துக் கொண்டிருக்கிறேன்; நீ அப்படியா? பொற் கவசம் பூண்ட சூரியனையும் மதிக்காமல், அவனை எதிர்த்துத் தலை நிமிர்ந்து பறக்கிறாய். யார் யார் தலையை நிமிர்த்தி கர்வத்தோடு அலைகிறார்களோ, அவர்கள் வெகு சீக்கிரத்தில் கழுத்தளவு ஆழமுள்ள புழுதியில் விழுந்து விட நேரும்."

## சாப்பாட்டு விதி

ஆர்தேஷீர் பாபேகான்* என்ற அரசனுடைய சரித்திரத்தில் பின்வரும் விஷயம் சொல்லப்பட்டிருக்கிறது:

ஒரு நாள் ஒரு அரேபிய வைத்தியரிடம் அந்த அரசன், "தினம் எவ்வளவு சாப்பாடு சாப்பிட வேண்டும்?" என்று கேட்டான். வைத்தியர், "நூறு டிரம் எடையுள்ள உணவைச் சாப்பிட்டால் போதும்" என்றார். அரசன் பழையபடியும், "இந்த அளவு சாப்பிட்டால் எனக்கு எவ்வளவு பலம் கிடைக்கும்?" என்று கேட்டான். வைத்தியர் சொன்னார்:

"இந்தச் சாப்பாடு உங்களைத் தாங்கிச் சுமக்கும்; இதற்கு மேல் சாப்பிட்டால், நீங்கள் சாப்பாட்டைச் சுமப்பீர்கள்."

பாட்டு

உயிர்வாழ்வதற்காகச் சாப்பிடுங்கள்; சாப்பிடுவதற்காக வாழ்கிறோம் என்று கருதாதீர்கள்.

## வெறுத்த முத்து

நான் பாஸ்ராவில் ஒரு அரேபியனைப் பார்த்தேன். அவனைச் சுற்றியும் சில வைர வியாபாரிகள் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். அரேபியன் அவர்களுக்குக் கதைகள் சொல்லிக் கொண்டிருந்தான். அவன் சொன்னான்:

"பாலைவனத்திலே ஒரு சமயம் எனக்கு வழி தப்பிவிட்டது. என்னிடமுள்ள சாப்பாட்டையும் நான் சாப்பிட்டுத் தீர்த்து விட்டேன்.

---

* ஆர்தேஷீர் பாபேகான், கி. பி. 226—லிருந்து 240 வரையில் ஆட்சி செலுத்திய ஒரு அரசன்; ஸாஸானிய ராஜ வம்சத்தின் முதல் மன்னன்.

ஆகவே நான் செத்துப்போகும் நிலைக்கு வந்துவிட்டேன். அந்தச் சந்தர்ப்பத்தில் திடீரென்று அங்கே முத்துக்கள் நிறைந்த ஒரு பை கிடப்பதைப் பார்த்துக் கொண்டேன். அந்த முத்துக்களை, பொரி அரிசி என்று நான் நினைத்தேன். அப்போது ஆகா! எனக்கு எத்தனை பேரானந்தமாக இருந்தது! ஆனால் அவை முத்துக்கள் தான் என்பதை அறிந்துகொண்ட போது, எனக்கு ஏற்பட்ட துயரம் தான் எவ்வளவு! அந்தப் பேரானந்தத்தையும், அந்தத் துயரத்தையும் என்னால் மறக்கவே முடியாது.''

பாட்டு

சாப்பாடும் பலமும் போன பின்பு, முத்தும் வைரமும் பதித்த ஒட்டியாணத்தினால் என்ன பயன்?

## விரோதியின் உதவி

அநேக சந்தர்ப்பங்களில் நாம் பேசும்போது நல்ல வார்த்தைகளையும் பேசுகிறோம்; கெட்ட வார்த்தைகளையும் பேசிவிடுகிறோம். ஆனால், நம் விரோதிகளோ நாம் பேசும் கெட்ட வார்த்தைகளைத் தான் நன்றாகக் கவனித்துக் கேட்டு மனதில் வைத்துக் கொள்ளுகிறார்கள். இதனால் ஒன்றும் பேசாமல் மௌனமாக இருக்கவேண்டும் என்று நினைத்தேன். இந்த விஷயத்தை என் நண்பன் ஒருவனிடம் தெரிவித்தேன். அதற்கு அவன் சொன்னான்:

“நல்ல விஷயத்தைப் பார்க்காமல் இருக்கும் விரோதி, நமக்குப் பெரிய உதவியைச் செய்கிறான்.''

பாட்டு

விரோதம் கொண்ட கண்களுக்கு புண்ணியம் பாவமாகவே தோன்றும்.......

## சுதந்திரமும் அடிமைத்தனமும்

எகிப்து தேசத்தில் இரண்டு சகோதரர்கள் இருந்தார்கள். அவர்களில் ஒருவன் சுல்தானிடம் வேலை செய்து கொண்டிருந்தான்; மற்றொருவன் சொந்தமாகத் தொழில் செய்துகொண்டிருந்தான். அவன் ஏழை. ஆகவே சுல்தானிடம் வேலை பார்க்கும் பணக்காரச் சகோதரன் ஏழைச் சகோதரனைப் பார்த்து, “நீ என் சுல்தானிடம் வேலை பார்க்கக் கூடாது? தொழில் செய்து பிழைப்பதில் உள்ள அத்தனை கஷ்டங்களும் நீங்கிவிடுமே?'' என்றான்.

ஏழைச் சகோதரன் சொன்னான்:

“நீ ஏன் தொழில் செய்யக் கூடாது? உன் அடிமைத்தனம் நீங்கி சுதந்திரமாக வாழலாமே! பொன் ஒட்டியாணம் கட்டி சேவை புரிவதைவிட பார்லி ரொட்டி சாப்பிட்டுக்கொண்டு கவலையில்லாமல் வாழ்வது விசேஷம் என்று பெரியவர்கள் கூறியிருக்கிறார்கள் அல்லவா?''

பாட்டு

ராஜாவுக்கு முன்னால் கும்பிட்ட கையோடு நிற்பதைவிட, கையினால் சுண்ணாம்புச் சாந்தைக் குழைப்பது எவ்வளவோ மேல்.

## காதலர் கண்ணே உள

ஒரு அரேபிய மன்னனுக்கு லைலி—மஜ்னூன் கதையைச் சொன்னார்கள். கடைசியில் மஜ்னூனுக்குப் பைத்தியம் பிடித்து விட்டது என்றும் சொன்னார்கள். இதைக் கேட்ட அரசன் “நன்றாகப் படித்தவனும், நல்ல வாசாலகனும் ஆன மஜ்னூன் ஏன் தன்னைக் கட்டுப்

படுத்திக் கொள்ள முடியாமல், பாலைவனத்திலே அலைந்து திரிந்தான்?" என்று கேட்டான். பிறகு, மஜ்னூனைத் தன்னிடம் அழைத்து வரும்படியும் ஆணையிட்டான். மஜ்னூனை வரவழைத்தார்கள். மஜ்னூனைப் பார்த்து, "ஏய்! மனிதனிடத்தில் நீ என்ன பொல்லாத குறையைக் கண்டுவிட்டாய்? மனித வர்க்கத்தையே உதறிவிட்டுப்போய் மிருகங்கள் மாதிரி நீ ஏன் நடக்கத்தொடங்கினாய்?" என்று கேட்டான் அரசன்.

"என் ஆசையைத் தடுக்க முயன்ற என் நண்பர்கள், அவளுடைய முகத்தைப் பார்த்திருந்தால், விஷயம் புரியும்" என்றான் மஜ்னூன்.

அரசனும் லைலியின்* அழகைப் பார்க்க விரும்பினான். மஜ்னூனுக்கு இந்தமாதிரிக் கஷ்டத்தைக் கொடுத்த அந்த அழகைக் காண வேண்டும் என்ற ஆவலுடன், அவளைத் தேடிக் கண்டு பிடித்து ராஜசபைக்குக் கொண்டு வரவேண்டும் என்று உத்தரவு போட்டான் அரசன். பல இடங்களிலும் தேடி லைலியைக் கண்டுபிடித்து, அரசனிடம் அவளை அழைத்து வந்தார்கள். அரண்மனையில், முற்றத்தில் வைத்து, அவளைச் சிறிதுநேரம் அரசன் பார்த்தான்; அவளுடைய தோற்றத்தைப் பார்த்தபின் அவனுக்கு மிகவும் ஏகத்தாளமாக இருந்தது. அவனுடைய அந்தப்புரத்திலுள்ள சர்வமட்டமான அடிமைப் பெண்களும்கூட லைலியைவிட எவ்வளவோ அழகும் வசீகரமும் பொருந்தியிருப்பது போல அரசனுக்குத் தோன்றியது. அரசனுடைய இந்த மன நிலைமையைக் குறிப்பினால் அறிந்து கொண்ட மஜ்னூன பின்வருமாறு சொன்னான்:

"தாங்கள் மஜ்னூனுடைய கண்களின் வழியாக லைலியைப் பார்த்தால் லைலியின் தோற்றத்தில் உள்ள மகா அற்புதம் என்னவென்பது தங்களுக்குத் தெரியும்."

*லைலி—மஜ்னூன்: நிஜாமி என்ற பாரசீகக் கவிஞன் எழுதிய பின்னஞ்சிறு காதல் காவியம்; இது உலகப் பிரசித்தி பெற்ற நூல். மஜ்னூன் என்னும் காதலன் காதலினால் பைத்தியம்போல் மாறிவிட்டான். லைலி அவனுடைய காதலி. இருவரும் பல இடைஞ்சல்களால் காதலை அனுபவிக்க வசதி இடையாது அவதிப்பட்டு செத்துப்போய் விட்டார்கள்.

✲

ஜீவரகசியம்

105 வருஷம் வாழ்ந்துவிட்ட ஒரு கிழட்டுப் பிரெஞ்சுக்காரனிடம் அவனது ஜீவரகசியத்தை ஒரு நிருபர் கேட்டார். அதற்கு அவன் சொன்னான்: "நன்கு குடிப்பதே என்னைக் காப்பாற்றியது. அறிவுள்ள மனிதனுக்கு ஒயின்தான் அருமையான பானகம். நான் இப்படி நடகத்திரனாக ஏன் இருக்கிறேன் என்றால் ஒரு சொட்டுத் தண்ணீர் கூட என் வாயில் படாததுதான்."

"அதை நான் நம்ப முடியாது; காலையில் பல் துலக்கும்போது கூடவா?" என்றார் நிருபர்.

"அதற்கா? அதற்கும் நான் ஒயினைத்தானே உபயோகிக்கிறேன்!" என்றான் கிழவன்.

—கனேடியன் டாக்டர்




நாடோடி இலக்கியத்தில் மிகவும் சுவை மிகுந்த பாடல்கள், ஒப்பாரிப் பாடல்கள்; அந்தப் பாடல்கள் எப்படிப்பட்டவர்களையும் உருக்கும் தன்மை வாய்ந்தவை. கேட்டு அனுபவிப்பதற்கும் ஒப்பாரி சுகமாக இருக்கும். இங்கே சில பாடல்களைப் பார்க்கிறோம்.

## வழிப்போக்காள் ஆனேனே !

O

கு. ராஜாராம்

ஒரு பெண்; அவள் விதவையாய்ப் போனவள். என்ன காரணத்தினாலோ அவள் தன் உடன் பிறந்த தம்பியோடு பேச்சு வார்த்தை இல்லாமல் இருக்கிறாள். ஒருவேளை தம்பியின் மனைவி பலம் வாய்ந்தவளாக இருந்திருக்கலாம். தன்னுடைய நாத்தனாரை வீட்டை விட்டு விரட்டும் அளவிற்கு ஏதாவது செய்திருப்பாள். அவள் ஓதிய மந்திரம் தம்பியையும் அக்காளுடன் விரோதம் கொள்ளும்படி செய்திருக்கிறது. அவளுடைய பிள்ளைகள்கூட அத்தையை மதிக்காமல் இருந்திருக்கிறார்கள்.

தம்பியின் மனைவி செய்த வேலையால் அந்த ஸ்திரீக்கு, தான் பிறந்த வீட்டுக்குள் நுழைய இயலாமல் போகிறது. தன்னுடைய வயதான தாய் ஒருத்திதான் அவள் மேல் அனுதாபத்துடன் இருக்கிறாள். இருந்தபோதிலும் அக்கிழவியால் தன் பேரப் பிள்ளைகளை விட்டு மகளோடு வாழ முடியவில்லை. முணுமுணுத்துக் கொண்டே கிழவி பலமற்ற அனுதாபத்தைக் காண்பிக்கிறாள். தான் பிறந்த வீட்டுடன் அந்த ஸ்திரீக்கு உள்ள உறவு நிலைத்திருப்பது அந்தக் கிழவி ஒருத்தியால்தான்.

அந்த உறவும் ஒருநாள் அறுந்து விடுகிறது. ஆம், கிழவி இறக்கிறாள். தாய் இறந்திருக்கும் போது அங்கே செல்லாமல் இருக்க முடியுமா? இறந்த தாயைக் காண, வெகு நாட்களுக்குப்பின் பிறந்த வீட்டுக்குள் நுழைகிறாள். கண்ணீரும் கம்பலையுமாகக் காட்சியளிக்கும் தம்பியின் மனைவி அந்த நேரத்திலும் நாத்தியின் மேல் உள்ள வெறுப்பை இலேசாகக் காண்பிக்கிறாள். இதைக் கண்ணுற்ற அந்த ஸ்திரீக்கு தாய் இறந்த துயரத்தோடு, இதுவும் சேர்ந்து பெருகிக்கொள்கிறது. கண்களில் கண்ணீர் வழிந்தோட, தன்னைக் கைவிட்டுச் சென்ற தாயை நோக்கிச் சொல்லுகிறாள்:

பாக்கி ஒருத்தி யென்று
பழுதுபட்ட பெண்ணென்று
பக்கத்தில் எண்ணமில்லை
பலசிந்தை ஓடவில்லை
பாவி யென்னைக் கைவிட்டு
பரம பதம் சேர்ந்தாயே

சம்பத்தில் உட்கார்ந்து அழும் தன்னுடைய தம்பியின் மனைவிக்கு தான் ஒரு நாத்தனார் என்ற எண்ணமில்லை. தான் ஒரே மகளாக இருந்தும், ஒரே சகோதரி அதிலும் விதவையாய் போனவள் என்று தம்பி தன்னை மதிக்கவில்லை. உலகத்தில் உறுதுணையாக இருந்த தாயாகிய நீ என்னைக் கைவிட்டுச் சென்று விட்டாயே என்று அழுதுகொட்டுகிறாள் அந்த ஸ்திரீ.

பிறகு அவள் தன்னுடைய பிறந்த வீட்டில் இருந்து வந்த காலத்தைப்பற்றிச் சொல்லிக் கொண்டு வருகிறாள். அவ்வாறு வீட்டிலிருக்கும்போது தம்பியின் மனைவி சண்டை போட்டதால் தான் வீட்டை விட்டுக் கிளம்பியதைக் கூறுகிறாள்.

தென்னைமரம் சோலை
சேர்ந்திருக்கும் வேளையிலே
தென்னை மரம் சுற்றியதும்
தேளிருந்து கொட்டியதும்
தேன்மொழியாள் வாடியதும்
திசைநோக்கிப் புறப்பட்டதும்—

எல்லாவற்றையும் விஸ்தாரமாகச் சொல்லி அழுகிறாள்.

தான் பிறந்த வீட்டில் அவளுக்கு எவ்வளவு உரிமைகள் இருக்கவேண்டும்! அநேக வீடுகளில் நாத்தனார்கள் உரிமையோடு இருப்பதில்லையா? ஆனால் அவள் விஷயத்தில் இப்போது ஒன்றுமே இல்லை. பெற்ற தாய் ஒருத்தி உயிரோடு இருக்கும்போது உரிமை கொஞ்சம் ஒட்டிக்கொண்டிருப்பதுபோல இருந்தது. அந்தக் கிழவி பரமபதம் சேரப்போய் அதுவும் போயிற்று. இனி பிறந்த வீடு என்ற வகையில் அவளுக்கு அங்கே என்ன இருக்கிறது?

தான் பிறந்த வீட்டில் செல்வம் கொழிக்கத்தான் செய்கிறது. விதி வசத்தால் அவள் சீக்கிரமாக விதவையாகப் போய்விட்டாள். கணவனை இழந்து கஷ்டப்படும் பொழுது, பிறந்த வீட்டிலாவது காலத்தைக் கழித்து சற்று நிம்மதி அடைவோமென்றால் அதற்கும் வழியில்லை. தம்பியின் மனைவி மட்டுமா அவளை உள்ளே நுழைய விடாமல் செய்திருக்கிறாள்; செய்கிறாள்? இறந்துபோன கிழவி தவிர மற்ற எல்லோருமேதான்.

பாலோடு நெல்லி
பழுத்துச் சொரியுது
நான் பிறந்த லங்கையிலே—
பலகணிக்கு முன்பிறந்தாள்
பார்த்துப் பறிப்போமென்றால்,
பத்துத் தலையாரி!
பதினெட்டுச் சிப்பாயி!

தன்னுடைய பிறந்த வீட்டைத் தான் 'நான் பிறந்த லங்கை' என்று கூறுகிறாள். அவள் தான் அந்த வீட்டில் முதல் முதலாகப் பிறந்தவள். எல்லோருக்கும் மூத்தவளாகப் பிறந்தவளுக்கு ஒருவித உரிமையுமில்லை. அவளை வீட்டினுள்ளே நுழைவதற்கு ஒருவருமே விடுவதில்லை. அப்படித் தடுப்பவர்களைத்தான் 'பத்துத் தலையாரி, பதினெட்டுச் சிப்பாயி' என்று அழகாகச் சொல்லுகிறாள்.

தோட்டப் படிக்கிணறு
தொலையாத கெய்க்கிணறு
தொட்டு முகங் கழுவ—நான்
தூரத்தாள் ஆனேனே

அவள் பிறந்த வீடு செல்வம் மிகுந்தது. வற்றாத செல்வமுடைய வீட்டில் பிறந்த அவளுக்கு அங்கே உரிமை இல்லாமல் போய் விட்டதால் தூரத்தாளாகப் போய் விடுகிறாள். அதை நினைக்கும் போது அவளுக்கு நெஞ்சம் குமுறுகிறது.

வாழையிலையுண்டு
நான் பிறந்த லங்கையிலே,
வழிநெடுகத் தங்கலுண்டு;
வாழையிலைக் கட்டிறக்கி
வயிற்றுக்கு உண்ணுதற்கு
வளைவில் பிறந்தாள்
வழிப்போக்காள் ஆனேனே

அவள் பிறந்த வீட்டிலே எல்லோருக்கும் சாப்பாடு உண்டு. யார் யாரோ எல்லாம் இருந்து உண்டுவிட்டுப் போகிறார்கள். ஆனால் அவ்வீட்டிலேயே பிறந்து வளர்ந்த அவளுக்கு உண்ண உரிமையில்லை. உள்ளே நுழையவே உரிமை யில்லையே! அதனால் தான் சொல்லுகிறாள் 'வழிப் போக்காள் ஆனேனே!' என்று.

உரிமையை இழந்து அவளுடைய உள்ளம் கதறுவது மிகவும் பரிதாபகரமாகத்தான் இருக்கிறது.

*

## வரம் கேட்டான்!

ஒரு மனுஷன் செத்துக் கொண்டிருக்கும்போது தன் மனைவியை அழைத்து, "எனக்கு நீ கடைசியாக ஒரு வரம் தர வேண்டும்" என்று கேட்டான்.

மனைவியும் "நிச்சயமாய்!" என்று கையடித்துக் கொடுத்தாள்.

"நான் இறந்து ஆறு மாதம் கழித்து நீ ஜான் வில்லியம்ஸைக் கலியாணம் செய்து கொள்ள வேண்டும்!" என்றான் அவன்.

"அவனையா? நீங்கள் அவனை அடியோடு வெறுப்பதாகவல்லவா நினைத்தேன்!"

"ஆமாம் அதற்காகத்தான்!" என்று சொல்லிக் கொண்டே உயிர் நீத்தான் அவன்.

—எவரிபடீஸ்.

## ஒரு நாள் ஒரு யுகம்!

ஒரு பத்திரிகாலயத்தில் ஒரு எழுத்தாளர் இன்னொரு எழுத்தாளரின் வாழ்க்கைச் சரிதத்தை எழுதிக் கொண்டிருந்தார். அந்த ஆசிரியர் பத்திரிகை உலகத்தில் பிரவேசித்தது வரை எழுதிவிட்டு, எழுத்தாளர், "விறு விறு என்று பத்திரிகையில் காலடி எடுத்து வைத்தது வரை வந்தாயிற்று குறையையும் இனி காப்பி சாப்பிட்டுவிட்டுத்தான் எழுத உட்கார வேண்டும்" என்று பக்கத்தில் இருந்த சக ஆசிரியரிடம் சொன்னார். அதற்கு அவர் சொன்னார்: "பத்திரிகை உலகத்துக்கு வந்தாய்விட்டதல்லவா? இனிமேல் ஒரு நாள் கழிய ஒரு யுக மாகுமே!"

—எம். பி.



**டால்டாவில் வறுத்த உருளைக்கிழங்கு வடைகள்**

*எச்சமயத்திலும் சுவைமிகுந்தவை!*

உருளைக்கிழங்கை கழுவி தோலுடன் வேகவைக்கவும். கிழங்கு பதமானதும் தோலை அகற்றி சிறிது பால்விட்டு பொடி செய்யவும். ருசிக்குத்தகுந்தபடி உப்பும், மிளகுபொடியும், நறுக்கின கொத்தமல்லி இலையும்சேர்த்துக்கொள்ளவும். தட்டை வடைகளாகச் செய்து முட்டையின் வெள்ளைக்கருவிலோ அல்லது கரைத்த அரிசி மாவிலோ தோய்த்து, ரொட்டித்தூளிலோ மைதாமாவிலோ பிரட்டவும். பரந்த வாணலியில் டால்டாவை சூடாக்கி அதில் வடையின் இருபக்கங்களும் சிவக்கும்வரை வறுக்கவும். வடைகளை சூடச்சூட சாப்பிடுங்கள் — நீங்கள் அவைகளை மிகவும் விரும்புவீர்கள்! டால்டா, அதனால் செய்யப்பட்ட எல்லா பதார்த்தங்களின் சுவையையும் எடுத்துக்காட்டுகிறது.

**"சிவபெருமானின் நடனம்"**

**6 வர்ணங்கள் கொண்ட**

**கவர்ச்சிகரமான 1949 காலெண்டர்**

சில பிரதிகளே கைவசம் இருக்கின்றன. தபால் செலவுக்கு 4 அணா ஸ்டாம்பு சகிதம் உடனே எழுதுங்கள்.




**தி டால்டா அட்வைஸரி ஸர்வீஸ்**

தபால் பெட்டி நெ. 353, பம்பாய் 1

HVM. 74A-50 TM

உண்மையான நல்ல பட்டை உணருங்கள்.

உண்மையான நல்ல பட்டு எப்படி உணர்ச்சிக்கு இருக்கும் என்பதை அறிய ஆடம்பரமும் மனோகரமுமான மைசூர் சில்க் அணிவதன்மூலம் தெரிந்து கொள்ளலாம். அது சாதாரண பட்டுக்களைவிட அதிக நாள் உழைக்கும்,




மைசூர்
கவர்ன்மென்ட்
தயாரிப்பு.

கவர்ன்மென்ட் சில்க் வீவிங் பாக்டரி, மைசூர்.



மாக்ஸிம் கார்க்கி (1868-1936) என்ற ருஷ்ய எழுத்தாளர் பரம தரித்திரனாகக் கஷ்டப்பட்ட ஒரு பொதுவுடமை வாதி; லெனின், ஸ்டாலின், ரோமன்ரோலாந்து, செஹாவ் முதலியவர்களின் உயிர்த் தோழர். இன்று இவர் பிறந்த ஊருக்கு இவருடைய பெயரே சூட்டப்பெற்றுள்ளது. மாஸ்கோ நகரில் இவர் பெயரால் ஒரு உத்தியான வனமும் இருக்கிறது. உலகப் பிரசித்திபெற்ற அன்னை என்னும் நாவல் இவருடைய சிருஷ்டியே. இந்த மேதை எப்படி எழுத ஆரம்பித்தார் என்ற விபரத்தை இங்கே காண்கிறோம்.

# எப்படி எழுதினேன்?

**மாக்ஸிம் கார்க்கி**

உயிர் வாழும் போராட்டத்தில் மனித உள்ளத்தின் தற்காப்பு உணர்ச்சி இருமாபெரும் சிருஷ்டி சக்திகளை வளர்த்துவிட்டது. அறிவும் கற்பனையுமே இவ்விரு சக்திகள். முதலாவது சக்தியான அறிவு என்பது இயற்கை நியதியை, சமுதாய நியதியைக் கவனித்து, பொருத்தம் பார்த்து, தள்ளுவன தள்ளி கொள்ளுவன கொள்ளும் திறமையேயாகும்; அதாவது அறிவு என்பது சிந்திக்கும் திறனாகும். சாராம்சத்தில் கற்பனையும் சிந்தனை வழிப்பட்டதே. எனினும் கற்பிதமான உருவங்களை, கலா ரூபத்தில் சிந்திப்பதே கற்பனைக்கு பிரதானம். கற்பனை என்பது மனித குணகுண உணர்ச்சிகளை, ஆசாபாசங்களை முன்னிலைப் பொருள்களோடும், இடையறாத இயற்கை நியதியோடும் ஒட்டுறவாக்கிக்காணும் திறன் என்று சிலர் சொல்லலாம்.

காற்றின் முனகலையும், பழங்கதை சொல்லும் படித்துறையையும், வியர்வை அரும்பும் ஜன்னல் கண்ணாடிகளையும் நாம் கண்டிருக்கிறோம்; கேட்டிருக்கிறோம். இந்த மாதிரியான கற்பிதத்தால் நமக்கு இயற்கை நியதியை லகுவில் உணர்ந்து கொள்ள முடிகிறது.

இலக்கிய பாணி அதன் பாதையின் அடிப்படைத் தன்மைகள், கற்பனார்த்தமும் எதார்த்தமுமேயாகும். எதார்த்தம் என்பது வாழ்க்கைத் தரத்தின் நிலையை வெளிப்பூச்சின்றி, ஒளிவு மறைவின்றி வெளியிடுவதாகும். கற்பனார்த்தத்தைப் பற்றி திட்டவட்டமான திருப்தி தரும் பதில் இன்னும் அளிக்கப் பெறவில்லை. ஆகவே பால்ஸாக், டால்ஸ்டாய், கோகோல், செஹாவ் முதலிய எழுத்தாளர்கள் கற்பனார்த்த வாதிகளா, எதார்த்த வாதிகளா என்று சொல்ல முடியவில்லை. அநேக எழுத்தாளர்களிடம் கற்பனார்த்தமும் எதார்த்தமும் இணைந்தே இருக்கின்றன.

கற்பனார்த்தத்துக்கும் எதார்த்தத்துக்குமுள்ள தொடர்பை உணர 'எழுதும் ஆர்வம் ஏன் வரவேண்டும்?' என்ற கேள்வியைப் புரட்ட வேண்டியதுதான். இதற்கு இரண்டு விடைகள் உண்டு. ஒன்று: பதினைந்து வயதுள்ள தொழிலாளி வர்க்கப் பெண் ஒருத்தி எனக்கு எழுதினாள்: "எனக்கு பதினைந்து



மாக்ஸிம் கார்க்கி

வயது தான். இந்த வயதிலேயே எனக்கு எழுதும் சக்தி வந்து விட்டது. காரணம் எனது பஞ்சை நிலையும் சலித்துப் போன உயிர் வாழ்க்கையும் தான்.'' இன்னொரு எழுபது வயதுக் கிழத் தொழிலாளி எழுதுகிறான்: "எனக்குள்ள அனந்த கோடி அனுபவங்களைஎழுதாமலிருக்கமுடியவில்லை!''

என்னோடு கடிதம் போக்கு வரத்து வைத்துக் கொள்பவர்கள் எழுத்தாளனாக ஆசைப்படுவதன் காரணம் அவர்களுக்கு மனசில் புகைமுட்டித் தவிக்கும் அனந்த கோடி அனுபவங்கள் இருக்கப் போய்த்தான். தாங்கள் கண்டும் கேட்டும் அனுபவித்தும் வந்த இன்ப துன்பங்களை அவர்களால்

எழுதாம லிருக்க முடியவில்லை. ஆகவே எப்படி எழுதினேன் என்ற எனது கேள்விக்கு, நானும் “வறுமையில் வாடினேன்; எனக்கும் பல்வேறு அனுபவங்கள் இருக்கின்றன. அந்த உணர்ச்சிப் படங்களை என்னால் தீட்டாமல் இருக்க முடியவில்லை” என்றே சொல்வேன்.

வாழ்வின் பயங்கரத்தைப் பற்றி எனக்கு அநேக அனுபவங்கள் உண்டு. இப்போது நான் அதைக் குருட்டுப் பயம் என்கிறேன். இளமை அனுபவத்தில் நான் கண்ட அனுபவங்களைச் சொல்லப் போனால், நீங்கள் பார்த்திராத கீழ்த்தரமான அனுபவங்களாகவே இருக்கும். சில வேளைகளில் இந்தக் கைப்பான வாழ்க்கை எனது உணர்ச்சிகளை மழுங்க அடித்து என்னை ஒரு தூங்கிணியாக்க முயன்றதுண்டு. சில சமயங்களில் அவை என்னைக் கிண்டிவிட்டு எனது மான உணர்ச்சியைத் தூண்டியதுமுண்டு. ஆகவே இதற்கு ஒரு மார்க்கம் தெரியாமல், இரவில் கூரையேறித் திரிவதும், தாத்தா செய்யும் வேலையில் கரியை அள்ளித் தூவுவதுமாக இருந்தேன். இதை யெல்லாம் நான் ஏன் செய்தேன் என்றால் நான் உயிருள்ள பிராணி என்பதைக் காட்டிக் கொள்வதற்குத்தான். கண்ணைக் கட்டி காட்டில் விட்ட மாதிரி இருந்த இந்த வாழ்வை மாற்ற வேண்டுமென்று நினைத்தேன்.

சரி. இனி நான் எப்படி எழுதப் படித்தேன் என்பதற்கு வரலாம். எனக்கு ஏற்பட்ட அனுபவங்கள் புத்தககங்கள் மூலமாகவும் வாழ்க்கையின் மூலமாகவுமே கிடைத்தன. நான் வெளி நாட்டு இலக்கியங்களுக்கு—முக்கியமாக பிரெஞ்சு இலக்கியத்துக்கு—ரொம்பவும் கடமைப்பட்டவன். என் தாத்தா ஒரு கஞ்சன்; ஆனால் நான் அவரை பால்ஸாக்கின் ‘கிராண்டெட்’ என்ற கதாபாத்திரத்தின் மூலமே புரிந்து கொண்டேன். அதே மாதிரி என் தாத்தாவின் நண்பர்கள் தாக்கரேயின் ‘வானிட்டி பே’ரில் (Vanity Fair) பேசுவது போலவே பேசினார்கள். இப்படித்தான் பல அனுபவமும்.

எனது படிப்பு ஒழுங்கு முறையற்றது; கிடைத்தபோது, சமயம் வாய்த்த போது படித்தேன். வெளிநாட்டு இலக்கியம் எனக்கு ஒப்புவமை நோககுவதற்கு ஏராளமான விஷயங்களையும், விஷயத்தை எடுத்துச் சொல்வதையும், கதாபாத்திரத்தைத் தொட்டுப் பழகும் பாணிகளையும் சொல்லிக் கொடுத்தது. ஒரு தடவை பிளாபேரின் ‘சாதாரண இதயம்’ (A Simple Heart) என்ற நூலைப் படித்தேன். அதைப் படித்து கண் மூக்கு தெரியாமல் ஆடினேன். சர்வ சாதாரணமான, நாமறிந்த, வார்த்தைகளை வைத்துக் கொண்டு எப்படி ஒரு சாதாரண விஷயத்தை ரசமாகச் சொல்ல முடிகிறது என்று அதிசயித்தேன். எனக்கு அது ஒரு புதிராக இருந்தது.

நான் படித்த பிற இலக்கியங்கள் இருக்க, பிரெஞ்சு இலக்கியத்திலிருந்துதான் எழுதக் கற்றுக் கொண்டேன். இது தற்செயலாக நடந்தபோதிலும், இளம் எழுத்தாளர்கள்கட்டாயம்பிரெஞ்சு இலக்கிய மேதைகளின் நூல்களைப்

படித்து அவர்களின் சொல்லாட்சிக் கலையை உணர்ந்து கொள்ள வேண்டும் என்றே சொல்வேன்.

எனக்கு இருபது வயது ஆன போது, நான் கண்ட, கேட்ட, அனுபவித்த பல விஷயங்களை மற்றவர்களுக்கும் சொல்லித்தானாக வேண்டும் என்று கருதினேன். ஏனெனில் மற்றவர்களின் மனப் போக்குக்கு மாறாக நான் புது வழியில் சில விஷயங்களைக் கண்ணோக்குகிறேன் என்று எனக்குப் பட்டது. இதற்கிடையில் நான் வசித்த இடத்தில் உள்ள பாட்டாளிவர்க்கத்தினர் நான் கதை சொன்னால் கூர்ந்து ஆர்வத்தோடு கேட்க ஆரம்பித்தனர். புத்தகங்களைப் பற்றியும் சொல்வேன். எனது கதைகளைக் கேட்ட அறிவாளிகள் ‘எழுது! எழுதப்பா எழுது!’ என்று தூண்டினார்கள்.

அடிக்கடி எனக்குக் குடி மயக்கம் போல் நான் அனுபவித்த இன்ப துன்பங்களை வெளியிட்டுத் தீர்க்க எண்ணும் ஆர்வம் மனசைப் பிய்த்துப் பிடுங்கும். இந்த அவஸ்தையைச் சொல்லித்தான் தீர்க்க விரும்பினேன். ஆகவே தான் என் மனசில் உறைந்துபோன சித்திரங்களான என் நண்பன் அனடோலி, சந்து முனைத் தாசி மகளான தெரெஸா முதலியவர்களைப்பற்றி எழுத விரும்பினேன். அவர்களைப் பற்றிச் சில பாடல்கள் எழுதினேன்.

பாடல் எழுதுவது எனக்கு சுலபமாகக் கை வந்தது. எனினும் அவை மோசமானவை. என்னுடைய சக்தியின்மையை, திறமை இன்மையை நானே உணர்ந்தேன். புஷ்கின், லெர்மெண்டோவ், குரோச்கின் முதலிய கவிஞர்களைப் படித்தபோது நான் ஒரு உதவாக்கரை என்றேபட்டது. நானோ வசனம் எழுதுவதற்கே பயந்தேன்; பாடலைவிட வசனம் எழுதுவது சிரமம் எனக் கருதினேன். இதன் விளைவு நான் வசன கதி படைத்த பாடலாய் எழுதியதுதான். அந்த சிருஷ்டியை கோரோலெங்கோ நொறுக்கித் தள்ளிவிட்டார்.

### அதிசயமே அதிசயம்

ஜெர்மனியில் பிராங்பர்ட் என்னும் நகரத்தைச் சேர்ந்த ஒருவன் தனக்கு மணமகள் தேவை என்று விளம்பரப்படுத்தினான். அதற்குப் பலரும் தயார் என்று மனுப் போட்டிருந்தார்கள். அப்படி மனுப் போட்டவர்களில் அவனுடைய மனைவியும் ஒருத்தி!

—குளோப்

இங்கு, மொழி என்பது மக்களால் ஆக்கப்பட்டது என்பதைச் சொல்வது பிரயோஜனகரமா யிருக்கும். இலக்கிய மொழி யென்றும் கொச்சை மொழி யென்றும் பாகுபடுத்துவதென்பது, இலக்கிய மேதைகளின் கைவண்ணத்தால் மெருகு பெற்ற மொழியையும் பேச்சு மொழியையுமே குறிக்கும். இதை முதன் முதலில் உணர்ந்தவர் கவிஞர் புஷ்கினே; அவர்தான் மக்கள் பேசும்மொழியையும் மெருகிட்டுப் புதுமை பெறச் செய்ய முடியும் என்பதைக் காட்டினார்.

எழுத்தாளன் என்பவன் அவனுடைய நாட்டின், வர்க்கத்தின் உணர்ச்சி மயமான ஊது குழல்; அதன் செவி, கண், இதயம் எல்லாம் அவன்தான். அவன்தான் அவனது சகாப்தத்தின் குரல்!

அவன் பழமையைப்பற்றி எவ்வளவு தெரிந்து கொள்ள வேண்டுமோ அவ்வளவு தெரிந்துகொள்ள வேண்டும். அப்போது தான் நிகழ்காலத்தில் தனது சமுதாயத்தின் முன்னுள்ள கடமைகளை வரையறுக்கவும், நிறைவேற்றவும் முடியும். அவனுக்கு மனித சரித்திரம் தெரிய வேண்டும். மக்கள் எப்படிச் சிந்திக்கிறார்கள் என்பதை உணர அவர்களது பழமொழிகளையும், கதைகளையும் தெரிந்து கொள்ள வேண்டும். நானும் அதைத்தான் செய்தேன்.

இளைஞர்களாகிய நீங்கள், நான் ஏன் பஞ்சைப் படையினங்களைப் பற்றி எழுதவேண்டும் என்று கேட்பீர்கள். கீழ்த்தர மத்தியதர வர்க்கத்தினரோடு பழகிய தோஷத்தால் அந்த வர்க்கத்தைச் சூழ்ந்துள்ளவர்கள் அவர்களை எப்படி கொக்கியிட்டு வதைக்கிறார்கள், அவர்களது வியர்வையையும் குருதியையும் எப்படி காபெக்குகளாகவும், ரூபிள்களாகவும் (காபெக்,ரூபிள்—ருஷ்ய நாணயங்கள்) மாற்றுகிறார்கள் என்பதையும் எனது பதினைந்தாவதுவயதிலேயே நேரில் அநுபவித்தேன். ஆகவே, இந்தப் புல்லுருவி வாழ்க்கையைக் கண்டு மனம் புழுங்கினேன்.

பஞ்சைப் பரதேசிகள் என்பவர்கள் என்னைப் பொறுத்த வரை சாதாரண மனிதர்கள். ஏனெனில் அவர்கள் வர்க்கம் இழந்தவர்கள்; அவர்கள் வர்க்கத்தின் தன்மையை இழந்தவர்கள். இப்படிப் பட்டபலரை நான் வழியில் சந்தித்திருக்கிறேன். நானும் இன்னொரு மனிதனும் ஆஸ்பத்திரியில் சிக்காகக் கிடந்தபோது அவன் சொன்ன கதையைத்தான் நான் எனது 'செல்காஷ்' (Chelkash) என்ற கதைக்கு பயன் படுத்தினேன். அவன் அலெக்ஸாண்டர் டூமாவின் "மகா வீரக்" கதாநாயகர்களை நினைவூட்டினான். ஆகவே தான் இந்தப் பஞ்சைப் பரதேசிகளின் சாதாரண வாழ்வைப் பிரதிபலிப்பதில் என் மனம் நாடியது. இவர்களைவிட, குட்டி பூர்ஷ்வா மனப்பான்மை கொண்ட மக்கள் என்னை அதிகம் கவரவில்லை.

என்னைப் பொறுத்தவரையில், மனிதனை மிஞ்சிய கருத்து கிடையாது. மனிதன்தான்—மனிதன் மட்டும்தான் சகல பொருள்களுக்கும் கருத்துக்கும் சிருஷ்டி கர்த்தா. அவனே மாய ஜாலன். அவனே இயற்கையின் சகல சக்திகளுக்கும் எதிர்கால எஜமான். நமது உலகில் உள்ள அழகிய பொருள்களெல்லாம் நமது உழைப்பின் சிருஷ்டி; மனிதக் கரங்களின் படைப்பு. நமது கருத்துக்கள் எண்ணங்கள் எல்லாம் தொழில் வளர்ச்சிப் போக்கிலிருந்து உற்பத்தியானவை. பிரத்தியக்ஷ உண்மைகளிலிருந்துதான் எண்ணங்கள் பிறக்கின்றன. நான் மனிதனுக்குத் தலை வணங்குகிறேன். ஏனெனில் அவனுடைய அறிவுக்கும் கற்பனைக்கும் அமைந்துவிடாத எந்தப் பொருளையும் நான் காணவில்லை!

✲

அமெரிக்கா, தற்போது ஜப்பானில் தங்கி யிருப்பதற்கு வருஷத்துக்கு சுமார் 1800,000,000 ரூபாய் செலவாகிறது. —கல்வழி

# கலையும்
# கலாசாரமும்

டி. எஸ். எலியட்

கவிதை எழுதுவதற்கு ஆங்கிலம் தான் செழுமையான பாஷை என உரிமை கொண்டாடுவதுண்டு; இந்த உரிமை நியாயமானதே. 'செழுமையான' என்ற பதத்துக்கு ஆங்கிலத்தில்தான் மகாகவிகள் தோன்றியிருக்கிறார்கள் என்று அர்த்தமில்லை. நமது மில்டனை விட தாந்தே உயர்ந்தவன்; ஷேக்ஸ்பியருக்கும் அவன் களைத்தவனில்லை. கவிஞனுக்கு தொழில் முறையில் ஆங்கிலமே சிறந்ததொரு சாதனம் என்றே அர்த்தம். காரணம், ஆங்கிலத்தில் பல்வேறு நாட்டுக் கலவையம்சங்கள் நிறைந்திருக்கின்றன. ஒவ்வொரு அம்சமும் அதனதன் நாதத்தை ஆங்கிலத்துக்கு ஊட்டிற்று. பாஷை என்னும்போது நான் வார்த்தைகளைச் சொல்லவில்லை; தாள லயத்தைத்தான் (Rhythm) குறிப்பிடுகிறேன். ஆங்கிலத்தில் வந்து கலந்த பல்வேறு அம்சங்களால், பலப்பல சந்த வடிவங்கள் உண்டாயின. ஸாக்ஸானிய, பிரஞ்சிய, வெல்ஷிய, கிரேக்க, லத்தீன் கலப்புக்களும் ஆங்கிலத்தில் உண்டு. ஆகவேதான் ஆங்கில மொழி பல்வேறு இனத்தவராலும் அனுபவிக்கப்படுகிறது.

கதே சொன்னான்: கலை என்பது வரையறையில்தான் இருக்கிறது. மகாகவி என்பவன் தன் கைவசப்பட்ட பாஷையைச் சரியானபடி பயன் படுத்துபவனே. அவன்தான் ஒரு பாஷையை மகத்தானதாய் ஆக்க முடியும். ஒவ்வொரு நாட்டினரும் ஒவ்வொரு கலையில் சிறந்தோங்கியிருப்பதை நாம் அறிவோம். இத்தாலியும் பிரான்சும் சித்திரக் கலையில் சிறந்தவை; ஜெர்மனி சங்கீதத்தில் சிறந்தது; இங்கிலாந்து கவிதையில் சிறந்தது. எனினும் கவிதையில் இங்கிலாந்தையும் மிஞ்சி, பிரான்சு முதலிய நாடுகள் செழித்த காலமும் உண்டு.

இன்னொரு விஷயம். கலை வளர்ச்சிக்கு பல்வேறு பாஷைகளையும், கலாசாரத்தையும் ஒட்டிப் பழகுவதே முக்கியம். எனினும் தமது பாஷையைத் தவிர வேறு பாஷையறியாத கவிகள் இருந்தாலும், அந்த பாஷையில் பிறமொழியால் கலப்புற்ற அம்சங்கள் அந்தக் கவிகளையும் பாதிக்கவே செய்யும். இலக்கியம் புத்துயிரும் புதுமையும் பெறுவது இரண்டு அம்சங்களைப் பொறுத்தது. ஒன்று, வெளிநாட்டுக் கலை அம்சங்களைத் தன்னுள் ஆகர்ஷித்து ஜீரணிப்பது. இரண்டு, தனது பழைய மரபுச் சுவட்டைத் தொடர்ந்து சென்று, தன் கலைமரபை உணர்ந்தறிந்து கொள்வது. கலாசாரத் தொடர்புகள் அறுந்து போகும்போது இலக்கியமும் சீரழிகிறது. இங்கு ஐரோப்பாவுக்கு அப்பால்பட்ட

**கவிதைக்கென நோபல் பரிசு பெறப்போகும் கவிஞர் எலியட்டைப்பற்றி சென்ற இதழில் படித்திர்கள். இதில் கவிஞர் எலியட் கலாசாரத்துக்கும் கலைக்கும் உள்ள ஒற்றுமையைப் பற்றிய சில அருமையான கருத்துக்களைத் தருகிறார். மீரர் பத்திரிகையில் வெளிவந்ததன் சாரம்.**

ஆசிய இலக்கியங்கள் என்ன ஆயின என்று கேட்கலாம்.

ஆசியாவின் இலக்கியத்தில் சிறந்த கவிதை இருக்கிறது. பேரறிவும், ஓரளவு சிரமசாத்தியமான பாரமார்த்திக போதமும் அதில் நிறைந்திருக்கின்றன. ஆசிய இலக்கியக் கலப்பும் சென்ற நூற்றாண்டில் ஏற்படவே செய்தது. எஸ்ரா பவுண்டும், ஆர்தர் வாலியும் சீனத்திலிருந்து பல கவிதைகளை மொழி பெயர்த்து உதவினார்கள். ஒவ்வொரு நாட்டு இலக்கியமும் பிறநாட்டு இலக்கியத்தில் கலக்க வழியுண்டு. ஆகவே ஐரோப்பிய கலாசாரம் சுத்த சுயம்புவானது என்று கூறிவிட முடியாது. கலாசார எல்லைகளைக் கபாடமிட்டு மூடிவிடக் கூடாது. சரித்திரத் தொடர்புகளே இலக்கியத்தின் எதிர்காலத்தையும் தீர்மானிக்க வல்லது. ஆங்கிலேயருக்கும் பொதுவான கிரேக்க, ரோமானிய இலக்கியங்கள் உண்டு. அதுபோலவே விவிலிய மொழி பெயர்ப்புகளும் நமக்குப் பொதுவானவையே.

கவிதைக்கு நான் சொன்ன விஷயங்களே பிற கலைகளுக்கும் பொருந்தும். சைத்ரிகனும், பாடகனும் ஓரளவு சுதந்திரமானவர்கள்; கவிஞன் அப்படியல்ல. அவனுடைய சாதனம் தனிப்பட்ட மொழியாதலால், லோகஜன ரஞ்சகமாயிருக்க முடியாது. எல்லாக் கலைகளும் மரபு, பிறநாட்டுக் கலைகளின் தொடர்பு, கலப்பு முதலியவைகளை தன்னுட்கொண்டதே. ஆகவே, ஒரு தாந்தேயோ, வர்ஜிலோ, கதேயோ பிறந்தால், ஐரோப்பியக் கவிதை மரபும் பாதிக்கப்பட்டு மாறும்.

ஒரு நாட்டின் அரசியல் அமைப்பு கலாசாரத்தை பாதிக்கவும் செய்யும்; பாதிக்கப்படவும் செய்யும். இப்போது நாம் பிறநாட்டு அரசியலில் கவனம் செலுத்துகிறோமே தவிர, கலாசாரத்தில் கவனம் செலுத்துவதில்லை. கலாசாரத்துக்கும் அரசியலுக்கும் குழறுபடி ஏற்படுமானால், ஒன்று ஹிட்லர் நினைத்த ஆரியக் கலாசார மமதைப் பாதையில் செல்லும்; அல்லது உலகத்துக்கே பொதுவான கலாசாரத்தை வகுக்க வழி செய்யும். நாம் ஒரு மரத்தை உண்டாக்க முடியாது; நட்டுப் பயிர் செய்யலாம். வளர்ந்த பிறகே அது ஓக் மரமா, எல்ம் மரமா என்று தெரியும். கலாசாரமும் அப்படியே. அரசியலில் பாதி கட்டுக்கோப்பு; பாதிதான் வளர்ச்சி.

கலாசாரச் சீரமைப்பு ஏற்பட வேண்டுமானால் பிறருடைய கலாசாரங்களையும் புரிந்துகொள்ள வேண்டும். அதன்மூலம் ஏற்படும் கலாசாரத் தொடர்பால், கலைகளையும் உணர்ச்சிகளையும் நாம் பரிமாறிக்கொள்ள முடியும்.

ஜனநாயகத்தைப்போல் கலாசாரத்தையும் சூத்திர வடிவாகச் சொல்வதைவிட, விளக்கி விடுவதே நல்லது. ஒரு நாட்டின் சமூக அமைப்புக்கும், ஆத்மானுபூதிக்கும் உள்ள வித்தியாசத்தை முதலில் தெரிந்துகொள்ளவேண்டும். ஆத்மானுபூதி மடிந்து போனால், மிஞ்சுவது பல பாஷைகள் பேசும் மனித மந்தைதான். ஆத்ம உணர்ச்சி அற்றால், கவிதை கிடையாது. ஆகவே கலாசாரம் என்பதை ஒரு குறிப்பிட்ட ஜனங்கள் குறிப்பிட்ட நியதிகளோடு ஓரிடத்

தில் வாழ்வது என்றே குறிப்பிடலாம். இந்தக் கலாசாரம் கலை, சமுதாயப் பழக்க வழக்கங்கள், மத நம்பிக்கை முதலியனவற்றால் கட்டியமைக்கப் பெற்றது. இவற்றைப் பகுதி பகுதியாகக் கூறிட்டும் அலச முடியும்; இவை கலாசாரத்தின் பல்வேறு அங்கங்களே. ஒரு நாட்டின் கலாசாரம் சகல ஜனக் குழுவுக்கும் பொதுவா யிருந்த போதிலும், ஒரு கவிஞனின் கலாசாரமும், தொழிலாளியின் கலாசாரமும் ஓரளவு வித்தியாசம் உடையதே. வேறொரு நாட்டுக் கலாசாரத்தை ஏற்க மறுப்பதும், தம் நாட்டுக் கலாசாரத்தை வேறொரு நாட்டில் திணிக்க முயல்வதும் துன்பத்துக்காளாக்கும்.

பல பாஷைகள் பேசுகின்றவர்கள்கூட, கலாசார ஒற்றுமை கொள்ள முடியும். ஐரோப்பாவில் பல கலாசாரங்கள் ஒற்றுமைக் குணங்கள் படைத்தவை. கலாசார ஒற்றுமை ஏற்படுவதில் பிரதான சக்தியாக விளங்குவது மதமே. கிறிஸ்துவ மதம் எப்படி ஒரு கலாசார ஒற்றுமையைக் கொண்டு வந்தது என்பதைக் கவனிக்க வேண்டும். அதனால், நாளை ஆசியாக்கண்டம் முழுதும் கிறிஸ்துவத்துக்கு மாறினால், அது ஐரோப்பாவின் ஒரு அங்கமாகி விடும் என்று அர்த்தமில்லை. கிறிஸ்துவத்தில்தான் நமது கலைகள் மலர்ந்திருக்கின்றன; சட்ட திட்டங்கள் முளைத்திருக்கின்றன. கிறிஸ்துவக் கலாசாரம்தான் வால்டேரையோ நீட்ஸேயையோ பிறப்பிக்க முடியும். கிறிஸ்துவம் மறைந்தால் நமது கலாசாரமே மறைந்துவிடும். புல் முளைத்து, அதை ஆடு தின்று, வளர்ந்து, அதன்பின் கம்பளி தயாரித்துப் போர்த்த முடியுமா? புதுக் கலாசாரம் தோன்றுவதும் அப்படித்தான்.

கலாசார ஒற்றுமையை அரசியலமைப்பிலிருந்து துண்டுபடுத்திப் பார்க்கும்போது, நாமெல்லாம் ஏக தேச விசுவாசம் கொள்ள முடியாது; தேசபக்தி வெவ்வேறாயிருக்கலாம். இதை ஓரளவு விளக்கத்தான்வேண்டும்: நாட்டு மக்களால் ஆதரிக்கப் பெற்றாலும், எந்த பல்கலைக் கழகமும் தேசிய ஸ்தாபனமாக மட்டும் இருக்க முடியாது. ஐரோப்பியப் பல்கலைக் கழகங்களுக்குள் பொதுவான லட்சியங்கள் இருக்கவேண்டும். அவர்களுக்குள் கருத்துப் பரிவர்த்தனை இருக்கவேண்டும். அந்தந்த நாட்டு சர்க்காரின் ஆட்சி அதன்மேல் கவியாமல் இருக்கவேண்டும். அதாவது பிறநாட்டினரைவிட சிறந்த விஞ்ஞானிகளையும், ராஜ தந்திரிகளையும் படைக்கவேண்டும் என்ற கருத்தோடு இயங்காமல், அறிவுத் தாகத்தையும் சத்திய வேட்கையையும் தணிக்க உதவும் வகையில், மனித விடுதலையின் அடிப்படையாக சர்க்கார் இருக்கவேண்டும்.

✿

### முற்போக்கு

**வருத்தப்படுவதோ சென்றதை எண்ணி மறுகுவதோ கூடாது. எண்ணி விரதம் கொள்; வருத்தப்படுவதென்பது வீணில் சக்தியை விரயம் செய்வதாகும்; அதன் மேல் நீ எதையும் ஸ்தாபிக்கமுடியாது; அந்தச் சேற்றில் புரளத்தான் முடியும்.**

**—காதரைன் மான்ஸ்பீல்டு**

பேய்க்கு வாழ்க்கைப் பட்டால்—என்று பழமொழிதான் கேட்டிருக்கிறோம். அப்படி உண்மையில் நடந்தால்—? அந்த அதீதக் கற்பனையின் விளைவே இந்தக் கதை. பல்வேறு வகையான மோகினிக் கதைகளில் இதுவும் ஒருவகை.

# மாயை

## ரகுநாதன்

**கொ**க்கிரகுளம் சப் ஜெயில் சேகண்டி பன்னிரண்டு மணி அடித்தது.

அந்த இடமே பயங்கரமானதுதான். 'பிள்ளையைப்போட்டு பிலாப்பழம் எடுத்த ஓடை'ச் சரிவில் உள்ள அடவிப் பிராந்தியம் அது. வானுயர்ந்த பல சாதி மரவர்க்கங்களும் அர்ச்சுனன் வகுத்த சரக்கூடம்போல, பின்னி நின்றன. அந்த இடம் பேய் பிசாசுகளுக்குப் பெயர் போனது. அயலூர்க்காரன் கூட அந்த அடவியின் நெருக்கத்தைக் கண்டு அஞ்சுவான். அந்தத் தோப்பின் மேலாக ஓடும் ஐரோட்டுத் திருப்பத்தில் போக்குவரத்து விபத்துக்கள் அதிகமானதால், துர்மரணப் பைசாசங்களின் ஆதிக்கம் உண்டு என ஊரிலே பேச்சுப் பிரபலம்.

ஆகவே அவன் மனசிலும் பயம் குடியேறி யிருந்ததில் வியப்பில்லை. பயந்து பயந்து அவன் அந்த இடுகாட்டுப் பிராந்தியத்தில் அலைந்து கொண்டிருந்தான். அவன் மனசிலே ஒரே ஒரு எண்ணம்: "அவள் வந்துவிட்டால்—?"

வானமண்டலம் கலக்கிவிட்ட சேற்று நீரைப் போல, இருண்டு கிடந்தது. மேகக் கூட்டத்துக்கு மேலாக எங்கோ கிணற்று விளக்காகத் தெரியும் சோனி நிலவின் பசப்பொளியில் மேகத் திரளின் கர்ப்போட்டம் அசைவு காட்டியது. வடிகட்டப் பெற்ற நிலவொளியில் எதுவுமே தெளிவாகத் தெரியவில்லை. தூறல் வேறு பிசுபிசுத்தது.

இடுகாட்டில் சமாதிக் கற்கள் குத்துக் குத்தாக நின்றன. அந்த இருளில் வெள்ளை யடிக்கப் பெற்ற அந்தக் கற்கள் உயிர் பெற்று அவனைச் சுற்றிச் சூழ்ந்து மெது மெதுவாக நடந்து வருவதாக ஒரு பிரமை; அது வெறும் பிரமை என்ற பிரக்ஞை அவனுக்கு இருந்தாலும், பயத்தின் நாடித் துடிப்பைச் சமனப்படுத்த முடியவில்லை. ஆகவே அவை கற்கள்தான் என்று மனப் பிராந்திக்கு சூடு கொடுக்கும் தன்மையில் அவனும் அந்தக் கற்களை நோக்கி நடந்தான். நிலவொளியில் அந்தச் சமாதிக் கல் வரிகள் கண்ணில் பட்டன.

**ஸ்ரீமதி கற்பகத்தம்பாள்**

தேகவியோகம்: 1112. தைமீ 42

அவனுக்கு திக்கென்றது. அன்றைக்கும் தைமாதம் நாலாம் தேதியேதான். பெயரும் பொருந்தியிருந்தது. இந்தக் கற்பகம் வேறு- அவன் எதிர்பார்த்திருந்த கற்பகமோ மண்ணுள் கிடக்கும் கற்பகமல்ல; மணமகள் கற்பகம். அவன் காதலி! அவன் மனசைத் தேற்றிக் கொண்டு மீண்டும் உலவ ஆரம்பித்தான்.

தூறல் பிசுபிசுத்தது. தவளைகள் முனங்கின. மருத மரக் கிளையில் ஒரு கோட்டான் சிறகடித்துக் குழறிக் கூவியது. எங்கிருந்தோ ஒரு கருவண்டு கிர்ரென்று இரைந்துகொண்டு அவன் முகத்தில் மோதியடித்து விழுந்தது.

'சீ' என்று அவன் அதை உதறியடிக்கும்போது, அந்தச் சிரிப்புச் சத்தம் கேட்டது.

அவன் திரும்பினான்.

ஓடை ஓரமாக ரோட்டுச் சரிவில் பட்டுப்போய் மூளியாய்நின்றமருத மரக் கிளைகள் குரக்கு வலித்த பைசாசக்கரங்களைச் சுருக்கி நிற்பது போலத் தோற்றம் அளித்தது.

மீண்டும் சிரிப்பு. நரம்புக் குருத்துக்குள் பனிபெய்த மாதிரி ஜுரச் சிலிர்ப்பை யூட்டும் லாகிரிச் சிரிப்பு.

அவள் அந்தக் குத்துக் கல்லின் மீது அட்டணைக்கால் போட்டு உட்கார்ந்து சிரித்துக் கொண்டிருந்தாள். வெள்ளை வெளேரென்று பாலில் தோய்த்த மாதிரி ஒரு புடவை; மற்றப்படி அவளது முகராசியே போதும். ஆளை உருக்கும் கொள்ளைச் சிரிப்பு; உதட்டில் ரத்தச் சிவப்பு!

"யாரது?...யாரங்கே?"

மீண்டும் அதே சிரிப்பு. அவனுக்கு உள்ளூர பயம். பேயோ பிசாசோ என்று ஒரு அரிப்பு. மீண்டும் கேட்டான். "கற்பகமா?"

"நானே தான்."

அப்போது விழுந்த நிலவுத் துண்டத்தில் அவள் முகம் தெரிந்தது. கற்பகம்தான். அவளை நோக்கி காலடி எடுத்துவைத்தான். காலடியில் ஏதோ கடக்கென்றது. குனிந்து பார்த்தான். அது ஒரு மண்டையோடோ, நண்டுக்கூடோ?
.......

அவளும் அதற்குள் ஆற்றங்கரைப்படி வழியே அவனை நோக்கி வந்தாள். மெட்டி ஓசை கலுக் கலுக்கென்றது.

"கற்பகம், நீ எப்போது வந்தாய்?"

"இப்போது தான்."

"கிளம்பலாமல்லவா?"

"ஆமாம்."

"சரி, நீ தூங்கவே இல்லையா?"

"எனக்கா—தூக்கமா?"

அவன் அவள் கையைப் பிடித்தான். சில்லிட்டது.

"உன் கையேன் இப்படிக் குளிர்ந்திருக்கிறது?"

"என் கையா? உங்கள் கை தான் அப்படி" என்றாள். சிரித்தாள். அவன் ஏனோ நடுங்கினான்.

ஆற்றுக்கு அப்பாலுள்ள பனங்காட்டுச் சுடலையில் ஒரு பிணம் பஞ்சவர்ணக் கோலமிட்டு புகை திரித்தது. உடல் வெடித்துப் பாயும் நிண நெய் நின்று எரிந்தது. பிண மூட்டத்தைக் கிளற முடியாமல் சுற்றி சுற்றி ஒரு நரி ஊளையிட்டது.

அவன் அவள் கையை இறுகப்பற்றினான்.

சிலுசிலுத்த பனிக் காற்றில் புளியம் பூக்கள் தலைமேல் உதிர்ந்து விழுந்தன.

"நமக்கு பூமாரி பெய்கிறது, பார்த்தீர்களா?"

"பூமாரியா? புளிய மரத்தில் பிசாசு தானே குடியிருக்கும்" என்றான். பிசாசு என்னும் போதே அவன் விரல்கள் நடுங்கின.

"ஏன்? பிசாசு என்றால் உங்களுக்குப் பயமா?"

"யாருக்குத்தான் பயமில்லை."

"எல்லாப் பிசாசுகளுமா அப்படி? மோஹினிப் பிசாசுகளும் அப்படியா?"

"சரிசரி போதுமே ஆராய்ச்சி. கிளம்பு, கிளம்பம்மா தாயே"

அவர்கள் புறப்பட்டனர். ஒரு மர நாய்க் குட்டி அடிவயிற்றுக் குரலில் ஊளையிட்டுக் குறுக்கே விழுந்து ஓடியது.

## 2

செல்லப்பாவுக்கு சொந்த ஊர் அம்பாசமுத்திரத்தை அடுத்த பிரமதேசம். தீர்த்தபதிக் கலாசாலையில் பள்ளிப் படிப்பை முடித்துவிட்டு கொக்கிரகுளம் டிஸ்டிரிக் கோர்ட்டில் குமாஸ்தா வேலை பார்த்துக்கொண்டிருந்தான். கொக்கிரகுளத்தில் வேலை; வண்ணார்பேட்டையில் ஜாகை. வண்ணார்பேட்டையில் அவன் குடியிருந்த இடத்துக்கும் அவனது தாய் மாமன் வீட்டுக்கும் ஒரு பர்லாங் தூரம்கூட இல்லையென்றாலும் குடும்பப் பகை காரணமாக அவன் ஜாகை தனியாகவே இருந்தது. அவன் வீட்டுக்கும் அவர் வீட்டுக்கும்தான் பகையே ஒழிய,



அவனது கொழுந்தியாளான கற்பகத்துக்கும், அவனுக்கும் பகையே இல்லை. செல்லப்பாவோ கற்பகத்தைத்தான் கலியாணம் பண்ணுவது என்று வைராக்கிய சித்தனுயிருந்தான். அது அவன் கைக்குள்ளடங்கிய விஷயம் அல்லவே. எனினும் போரச்சியம்மன் கோயில் படித்துறை அந்தக் காதலர்களுக்கு ஒரு சந்தர்ப்பத்தைச் சிருஷ்டித்துக் கொடுத்தது. கற்பகம் விடியு முன்னரே அங்கு குளிக்க வருவாள். செல்லப்பா தற்காலக் கல்லூரிச் சரக்கேயாயினும், விடியு முன்னர் ஸ்நானபானக் கடனை முடித்து விடுவான். ஆகவே இருவரும் ஆளரவம் அற்ற குமரியிருட்டில் சந்திப்பதற்கு வசதி கிடைத்தது. சந்தித்தனர்; காதல் வளர்ந்து விட்டது! ஆனால் கலியாணம் வேறு காதல் வேறு அல்லவா? ஆகவே, கற்பகத்துக்கு வேறொரு இடத்தில் பேச்சு வார்த்தை நடந்து வெற்றிலையும் கைமாறி விட்டது. இன்னும் ஒரு வார காலத்தில் கலியாணம். ஆகவே அவர்கள் இருவருக்கும் ஒரே ஒருவழிதான் தென்பட்டது.

தை மாதம் நாலாம் தேதி இரவு இருவரும் எங்கேனும் ஓடிப்போய் விடுவது என்று தீர்மானம். அதன் படியேதான் எல்லாம் நடந்தது.

3

கற்பகம் செல்லப்பாவின் திட்டப் படியே ஸ்ரீமதி செல்லப்பா ஆகி விட்டாள்.

எனினும் செல்லப்பாவுக்கோ உள்ளூர பயம். ஊரிலே மணப் பெண்ணைக் காணவில்லை என்ற பரபரப்பில், பெண்ணைத் தேடும் வேட்டை நடக்கும்; பத்திரிகையில் செய்தி வரும்; ஒரு வேளை இருவரும் கையும் மெய்யுமாக அகப்படக் கூடும்; அப்படி அகப்பட்டால், என்ன பண்ணுவது? எப்படியும் கற்பகம் மேஜரான பெண்; அவள் இஷ்டப்படி திருமணம் புரிந்துகொள்ள உரிமை உண்டு. இருந்தாலும், அவளுக்கு மனத்திடம் குறைந்தால்— என்றெல்லாம் செல்லப்பாவுக்கு பலவாறாக சிந்தனை ஓடியது.

ஆகவே தினம் தினம் ஏதோ ஒரு ஆபத்தை எதிர்பார்ப்பது போல் விழித்தெழுவான்; காலைச் சூரிய ஒளியில் ஜன்னல் வழியே விழுந்து கிடக்கும் தினசரிப் பத்திரிகையைப் பரபரவெனப் புரட்டிப் பார்ப்பான். ஆனால், அதிலோ எந்தவிதச் செய்தியையும் காணவில்லை.

கடைசியில் கற்பகத்துக்கு அவளது பெற்றோர் குறிப்பிட்ட திருமணத் தேதியும் வந்து போயிற்று. திருமணம் நடந்தாலல்லவா செய்தி வரும்? ஒரு வேளை பெண் காணாமற்போன விஷயத்தை கமுக்கமாக மூடிவைத்திருக்கிறார்களோ என்று கருதினான். முழுப்பூசணிக் காயைச் சோற்றுக்குள் அமுக்க முடியுமா? அவன் எதுவுமே புரியாமல் திகைத்துக் கொண்டிருந்தான்.

"என்ன, எப்ப பார்த்தாலும் இப்படி பிரமஹத்தி பிடித்த மாதிரியே இருக்கியளே, என்னோடே பேசப்படாதா?" என்று கற்பகம் ஒரு கப் காப்பியை நீட்டிக் கொண்டே அவன் பக்கம் நெருங்கினாள்.

"இந்தா பாரு, கற்பகம். நம்ம விஷயமா இன்னும் ஒண்ணும் தெரிந்த பாடில்லையே என்றுதான்

கவலை" என்று ஆரம்பித்தான் செல்லப்பா.

"உங்களுக்கேன் அந்தக் கவலை? உங்களுக்கு நான் தானே வேண்டும். நானே வந்தாச்சு" என்று சொல்லி விட்டு, சிரித்துங்கொண்டே "ஒரு வேளை அதே முகூர்த்தத்திலேயே வேறு யாரையாவது பார்த்து திரு மணம் நடத்தியிருக்கலாமல்லவா?" என்றாள்.

அதைச் சொல்லிவிட்டு கற்பகம் கொல்லென்று சிரித்தாள்.

அவனுக்கு நரம்புக்கால் சிலிர்த்தது.

"கற்பகம், ஏன் இப்படி சிரிக்கிறாய்? உன் சிரிப்பு என்னை என்னவோ பண்ணுகிறதே.எங்கிருந்து வந்ததடி, இந்தப் புதிய சிரிப்பு!"

"அப்படியானால் நான் சிரிக்கக் கூடாதா? அழட்டுமா?"

அவள் மீண்டும் சிரித்தாள்.

அவனுக்கு அந்தச் சிரிப்பைத் தாங்க முடியவில்லை. அதில் மோகனலாஹிரி பொங்கியது என்பதை அவனும் உணரத்தான் செய்கிறான். எனினும், அதில் இருந்த வேதனை!

அவர்கள் இருவரும் இப்படிப் பேசிக்கொண் டிருக்கும் போதே, பத்திரிகைப் பையன் அன்றைய தினசரியை ஜன்னல் வழியே விட்டெறிந்து விட்டுப் போனான்.

செல்லப்பா பத்திரிகையைப் பாய்ந்து எடுத்து விறுவிறு என்று புரட்டினான். அவன் மனம் திடுக்கென ஒரு கணம் ஸ்தம்பித்து உலுங்கிற்று. அவன் அந்தச் செய்தியைப் படித்தான்: செல்வி கற்பகாம்பாளுக்கும், செல்வன் சீனுவாசனுக்கும் வண்ணாரப் பேட்டையில் பெண் கிரகத்தில் சகல வைபவங்களுடனும் திருமணம் சிறப்பாக நடந்தேறியது என்று இருந்தது. அது மட்டுமல்ல. மாலை சூடிய தம்பதிகள் இருவரின் புகைப்படமும் பக்கத்திலே காணப்பட்டது!

"கற்பகம்! என்ன இது?" என்று திகைத்தான்.

அவள் அதைப் பார்த்துவிட்டுச் சிரித்தாள்.

"சிரிக்காதே. இதற்கு என்ன அர்த்தம்?"

"என்னைக் கேட்டால்?"

"அப்போது இந்தச் செய்தி?"

"பொய்யாயிருக்கலாம்"

"பொய்யா? நீயா, அவளா?"

"இதோ உங்களெதிரில் கல் மாதிரி நிற்கின்றேனே. உங்களை யுகக் கணக்காய் காதலித்து கழுத்தையும் கொடுத்துவிட்டு நான் தான் பொய்யாகி விட்டேன். அப்படித்தானே!" என்று கூறிவிட்டு அவள் கேவிக்கேவி அழ ஆரம்பித்தாள்.

அவனுக்கு எதுவுமே புரியவில்லை.

"இந்தா பாரு. கற்பகம். அழாதே. நீ அழுதால் எனக்குப் பைத்தியம் பிடித்துவிடும்" என்றான். பிறகு அவளைச் சமாதானப் படுத்த முடியாமல் எழுந்து வாசல் நடைக்கு வந்தான்.

அவன் வாசலுக்கு வரவும், அந்த வீட்டு வாசல் நடைக்கு அந்தப் பரதேசிச் சாமி வருவதற்கும் சரியாக இருந்தது.

வந்தவன் பும்பூம் எனச் சங்கையும் முழக்கி, சேகண்டியையும் அடித்துக் கொண்டே, "எ சாமி உன்னை மோகினிமாயை பிடிச்சிருக்கு. ஒரு பொண்ணு ஓம்

மனசை ஆட்டு ஆட்டுன்னு ஆட்டி வைக்கிரு. அந்த மகாலெச்சுமி..." என்று ஏதேதோ சொல்ல ஆரம் பித்தான்.

செல்லப்பா "அட சரிதாம்ப்பா போ" என்று எகத்தாளமாய்ச் சொன்னுன்.

"என்னை விரட்டாதப்பா. விரட்ட வேண்டியதை விரட்டு" என்று கூறிக்கொண்டே, தனது சம்புடத்திலிருந்து கொஞ்சம் சாம் பல் எடுத்து, "இந்தா இதைப்பிடி. இது சுடுகாட்டு முண்டன் பிரசா தம். உனக்கு எதுவும் வராது" என்று நீட்டினுன்.

இந்த விவகாரத்திலெல்லாம் நம் பிக்கை யில்லாதவனுயினும் செல் லப்பாவின் கை ஏனே நீண்டது.

விபூதியை வாங்கிக்கொண்டான்.

கற்பகமும் செல்லப்பாவும் ஒன் ருய்த்தான் வாழ்ந்து வந்தார்கள்.

அன்றிரவு செல்லப்பாவுக்கு ஏனே துக்கம் படிக்கவில்லை. ரொம்ப நேரம் புரண்டு கொடுத்து விட்டு அப்போதுதான் தூங்க ஆரம்பித்தான். நல்லதூக்கம். திடீ ரென்று அவன் விலாவில் யாரோ குத்தி வாங்குவதாக ஒரு வலி; ஒரு உணர்ச்சி. திடுக்கிட்டு எழுந் தான்.

"கற்பகம் கற்பகம்" அவளை உசுப்பினுன்.

அவள் முனகிக் கொண்டே எழுந்திருந்தாள்.

"இந்தா விளக்கைப்போடு"

விளக்கேற்றப் பட்டதும் அவன் தன் விலாவைத் தொட்டுப்பார்த் தான். கையில் ஈரக்கசிவு தட்டுப் பட்டது. வெளிச்சத்தில் பார்த் தான். அது ஒரு துளி பச்சை ரத்தம்!

"என்ன இது? ரத்தம் ஏது?" என்று அவனுகவே கேட்டுக் கொண்டான்.

"ஏதாவது கொசு—இல்லை—மூட்டையாக இருக்கும்" என்றுள் அவள்.

"இருந்தாலும் இந்த வலியா வலிக்கும்?"

"சொப்பனம் கண்டிருப்பீர்கள்; படுத்துத் தூங்குங்கள்" என்று சொல்லிச் சிரித்தாள் கற்பகம்.

அவனுக்கு அந்த இரவில் அந்தச் சிரிப்புத்தான் விலாவில் குத்தி வாங்குவதாகப்பட்டது. அதைக் காணச் சகிக்காதவனுய் விளக்கை அணைத்தான்.

திறந்து வைத்த ஜன்னல் வழி யாக ஏதோ நறுமணம் மிதந்து வந்தது. சண்பகமா, மனோரஞ் சிதமா? பக்கத்தில் எந்தப் பூ மரமும் இல்லையே, ஏது இந்த வாசனை?

எங்கிருந்தோ ஒரு சுவர்க்கோழி கிரிக்கிரிக் கென்று இரவின் அமைதியைக் குலைத்தது. அறைக் குள் அகப்பட்டு திசை தெரியா மல் தவிக்கும் ஒரு வௌவால் சுவரில் மோதி மோதி விழுந்தது.

அவனுக்கு மீண்டும் துக்கம் பிடிக்கவில்லை. புரண்டு புரண்டு படுத்தான். காலையில் அவன் எழுந் திருக்கும்போது, சூரிய ஒளி அவன் முகத்தில் சுள்ளென்று உறைத்தது.

காபி சாப்பிடலாம் என்று அடுப் பங்கரைப் பக்கமாய்ப்போனுன். அங்கு அங்கு அவன் கண்ட காட்சி!

அடுப்பில் மதமதவென்று தீ எரிந்தது; சட்டியில் வெந்நீர் கொதித்தது. எனினும் அடுப்பில்

விறகு எரிய வில்லை. கற்பகம் தன் காலைத்தான் நெருப்பில் தூக்கிப் போட்டு குளிர்காய்ந்து கொண்டிருந்தாள். அவளது வலது கை நீண்டு வளர்ந்த கேசபாரத்தைச் சிக்கெடுத்துக் கொண்டிருந்தது. அந்தச் சிணுக்குவலி! அது ஓர் எலும்பு; விலாவெலும்பு!

அவன் பதறிப்போய், "கற்பகம்" என்று அலறினன். இடுப்பில் லேசாக வலி தோன்றியது.

அவள் சிரித்துக் கொண்டே திரும்பினள்.

"என்ன இது!" என்றான் அவன்.

"எது?"

"நீ ஏன் அடுப்பில் காலைப் போட்டிருந்தாய்?"

"அடுப்பிலா? தூக்கக் கலக்கத்தில் உங்களுக்கு அப்படித்தான் தோணும். ஒரு கப் காபி சாப்பிட்டு விட்டு கண்களைத் திறந்து பாருங்கள்" என்று சொல்லிச் சிரித்தாள்.

அந்தச்சிரிப்பு அவன் குடலை மீண்டும் உருவியது.

"சிரிக்காதே சிரிக்காதேன்னு எத்தனைதரம் சொல்றது?" என்று எரிந்து விழுந்து கொண்டே கூடத்துக்கு விரைந்தான்.

அவனுக்கு எதுமே புரியவில்லை. திகைத்தான். இதெல்லாம் வெறும் மனப்பிரமையா அல்லது....

அவனல் எதுவும் வெளியில் சொல்ல முடியவில்லை. தன் மானத்துக்கு ஆபத்து நேர்ந்ததாகக் கனவு கண்ட கன்னிப் பெண்ணைப் போல தனிமையாய் உள்ளுக்குள் உருகினன், நாளடைவில் அவன் உடம்பு வற்றி மெலிந்து போயிற்று. அவனுக்கு எதிலும் உற்சாகமில்லை. திகைத்தான். இரவில் திடுக்கிட்டுத் திடுக்கிட்டு விழித்தெழுந்தான்.

எனினும் கற்பகமோ கொஞ்சம் கூடக் கவலையற்று இருந்தாள் முகத்தில் அந்தக் குறுஞ் சிரிப்பு. ஆளைக்கொல்லும் மோகினிச் சிரிப்பு!

ஒருநாள் அவனே துணிந்து கேட்டு விட்டான். "நான் துன்பப் படுவதைப் பார்த்து உனக்கு ஏனே இந்தச் சிரிப்பு, தயை செய்து சிரிக்கமல் இரேன்!" என்று கூறிவிட்டு "நீயார்? என்னை ஏன் கொல்லுகிறய்? என்று கேட்டான்.

"உங்களுக் கென்ன சித்தப்பிரமையா? நானும் மனுஷிதான்!" என்றாள்.

அவனுக்கு உண்மையிலேயே சந்தேகம் உண்டாகி விட்டது. தனக்கு ஒரு வேளை பைத்தியம் தான் பிடித்திருக்கிறதோ?

அவனுக்கு அந்த ஊரில் இருக்க நிலை கொள்ளாமல், ஒருநாள் "கற்பகம், வாயேன் ஒரு தடவை ஊருக்குப் போய் விட்டு வரலாம் என்றான்.

"எந்த ஊருக்கு?"

"பிரம தேசத்துக்குத் தன்"

அவர்கள் இருவரும் மீண்டும் தெற்கு நோக்கிக் கிளம்பி, திருநெல்வேலி வந்து சேர்ந்தார்கள். அன்றிரவு திருநெல்வேலியில் தங்கி விட்டு, காலை எட்டரை மணி வண்டிக்கு அம்பாசமுத்திரத்துக்கு டிக்கெட் எடுப்பதாகத் தீர்மானித்தார்கள்.

திருநெல்வேலியில் தங்கியிருந்த அன்று, அவனுக்கு தாமிரபருணியாற்றில் குளிக்கவேண்டும் என்று

ஒரு சபலம் தட்டியது. வழக்கம் போல், காலையில் எழுந்து விடிவதற்கு முன் ஆற்றங் கரைக்குச் செல்ல முனைந்தான். கற்பகமும் உடன் கிளம்பினாள்.

இருவரும் பேராச்சியம்மன் துறைக்கு குமரியிருட்டில் வந்து சேர்ந்தார்கள். சீக்கிரமே குளித்து விட்டால், காப்பி பலகாரம் ஆனதும் ரயில் ஏற, வசதியாயிருக்கும் என்ற நினைப்பு.

இருவரும் தாமிரபருணியில் நீரில் குளித்தார்கள். தேக நிலை காரணமாக, செல்லப்பா விரைவில் கரை யேறிவிட்டான். கற்பகமோ "அப்பா! இந்த நீரில் கும்மாளம் போட்டு எத்தனை நாளாகிறது? நீங்கள் கரையிலேயே இருங்கள். நான் கூடக் கொஞ்சநேரம் குளிக்கிறேன்" என்று சொல்லிக் கொண்டே நீந்தினாள். விராலைப் போல துள்ளிப் பாய்ந்தாள்.

அவன் கரையிலிருந்தவாறே அவள் குளிப்பதைக் கவனித்துக் கொண்டிருந்தான்.

கலுக் கலுக்கென்ற மெட்டியோசை கேட்டுத் திரும்பினான். யாரோ வந்துகொண் டிருந்தார்கள். இடுப்பில் ஒரு குடம்; தோளில் துவைப்பதற்காக ஒரு சேலை. அவன் பார்த்தான்; அதற்குள் அவளே நெருங்கிவிட்டாள்.

"அத்தான்!"

மங்கிய நிலவொளியில் இருவரும் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டனர். அவள் கழுத்தில் தங்கத்தாலி மின்னியது,

"யாரது? கற்பகமா?"

அவனுக்கு திடுக்கிட்டது; உடம்பு புல்லரித்தது.

இருவரும் ஏதேதோ பேசினார்கள்.

"என்னை வரச் சொல்லிவிட்டு ஏமாற்றி விட்டீர்களே, அத்தான்! நான் வழக்கம்போல் விடியற்காலம் தான் வர முடிந்தது. தங்களைக் காணோம். எப்படியோ நமது திட்டம் பொய்த்து விட்டது. அது யார் தண்ணீருக்குள்! அக்காளா?...." என்று அவள் ஏதேதோ சொல்லுவதற்குள் அவன் கண்கள் இருண்டன. நாக்கு கட்டுவது போலிருந்தது.

"கற்பகம். ஏமாந்து விட்டேனே?" என்று சொல்லிக் கொண்டே அவளைப் பிடிக்கப் போனான்- அவள் விலகினாள். கால் வழுக்கிக் கீழே விழும்வரை அவனுக்குப் பிரக்ஞை இருந்தது.

கீழே விழும்போது படி யேறி கலுக் கலுக்கென அவள் வரும் ஓசை அவன் காதில் கடைசியாகக் கேட்டது!

## 6

மறுநாள் காலையில் வெளிறிப் போன சவம் ஒன்று ஆற்றங் கரையை அடுத்த அடவியில் காலைக் கடன் கழிக்க வந்தவர்களால் கண்டுபிடிக்கப் பட்டது. வேட்டியிலே ரத்தக்கறை; குரக்குவலித்த முகம்; பிதுங்கிய கண்கள்; ரத்தத்தைப் பிழிந்தெடுத்த சவப்பிண்டம்!

6

"சின்னஞ் சிறுசுகள் பாத்து நடமாடவேண்டாம். மோகினிப் பிசாசு தான் அடிச்சிருக்கும்" என்று கூட்டத்தில் யாரோ சொன்னார்கள்.

அந்தப் பிணத்தை துணியால் இழுத்து மூடுவ்தற்குக்கூட ஒருவனும் துணிந்து முன்வரவில்லை!


M. 5.



படம் : பத்திரிகை விளம்பர ஸ்தாபனம்

11-ம் நூற்றுண்டின் சுற்பனர்த்தம்
(ஓரிஸா புவனேசுவரர் கோயிலில்)



படம்: எ. எஸ். ஆர். மூர்த்தி, பங்களூர்

20-ம் நூற்றுண்டின் எதார்த்தம்
(பம்பாய் பொருட்காட்சியில்)



மேலே: ராஜாஜி கலைக் கண்காட்சியைப் பார்வையிடுகிறார்

கீழே: பிறந்த தினத்தன்று மாணவர்களுடன் பண்டித நேரு





மேலே: ருஷ்ய ஸ்தானிகர் நோவிகோவுடன் ராஜாஜி
கீழே: பிறந்த தினத்தன்று காஷ்மீர சங்கத்தாருடன் நேரு





தமிழ் நாட்டில் மேட்டுப்பாளையத்தில் கண்ணாடித் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது; இப்போது நாம் வெளிநாட்டுக் கண்ணாடித் தொழில் நுணுக்கங்களை அறியவேண்டியது அவசியம் அல்லவா?



இங்கிலாந்திலுள்ள தொழிற்சாலையில் இடது பக்கத்திலுள்ள படத்தில் கண்டபடி ஊதி கண்ணாடிப் பாத்திரத்துக்கு உருக் கொடுக்கிறார்கள்; கண்ணாடி செய்வதற்குரிய மணலை மேற்கண்ட விதமாகப் பண்படுத்துகிறார்கள்.



யாழ்க்கும், இன் குழற்கும் இன்பம்
அளித்தன இவையாம் என்ன
கேட்கு மென் மழலைச் சொல்லோர்
கிஞ்சுகம் கிடந்த வாயாள்
தாட்கருங் குவளை தோய்ந்த
தண் நறைச் சாடியுள், தன்
வாட்கணின் நிழலைக் கண்டாள்—கம்பர்

(கண்ணாடிப் பாத்திரங்கள் தயாராகிவிட்டன,
ஏற்றுமதி செய்ய வேண்டியதுதான்)

# எட்டயபுரம் கலைஞர்கள்

கு. அழகிரிசாமி

**கடிகை முத்துப் புலவரின் பாடல்களைப் பற்றியும், அவர் காலத்தில் வாழ்ந்த நாகூர் முத்துப் புலவரைப் பற்றியும் இந்த இதழில் கூறப்படுகின்றன.**

கடிகை முத்துப் புலவருடைய பாடல்களின் பொது அம்சங்கள், சிலேடை, யமகம், கம்பீரம், அளவுக்கு மீறிய சிருங்கார ரசம் முதலியவை. இவருடைய பாடல்கள் இரண்டொன்றைப் பார்ப்போம்.

ஒரு பெண்; எட்டயபுரத்து மன்னர் மீது அவளுக்குப் பெருங்காதல். ஆனால், காதலனை அடையப் பெறாத துயரத்தினால் காதல் - உலகத்தின் சம்பிரதாயம் போல அவளை நிலவு சுடுகிறது. இதைப் பார்த்தாள் அந்தப் பெண்ணின் செவிலித்தாய். தன் மகளின் காதலையும், காதலன் வராமல் காலம் கடத்திக்கொண்டிருப்பதையும் பார்க்கும் போது அவளுக்கு வேடிக்கையாகக்கூட இருந்தது. அவள் சொன்னாள்: 'எங்கள் எட்டயபுரத்து வெங்கடேசுர எட்டன் பேரழகன். அவன் தன்னுடைய அன்பை கடவுளின் பாதங்களுக்கு விருந்திட்டான; பகைவர்களின் ரத்தம் சுரக்கும் தசையை எல்லாம், தன்னுடைய கை வாளுக்கு விருந்திட்டான்; காதல் கொண்ட எத்தனையோ பெண்களை ஏறிட்டுக்கூடப் பார்க்காமல், அவர்களுடைய உயிரை எல்லாம் புஷ்பபாணங்களைத் தொடுக்கும் மன்மதனுக்கு விருந்திட்டு விட்டான். என் மகளின் பெண் புத்தி இருக்கிறதே, இதை சந்திரனுக்குக் கொண்டு போய் விருந்தாக வைத்துவிட்டான்.'

சந்திரனுக்கு இட்ட விருந்து என்றால் விரகதாபத்தினால் நிலவு சுடுகிறது என்று பொருள்.

**ஆளுக்கே அழகன், எங்கள்**
**இளசை வெங்கடேசு ரெட்டன்**
**அன்பை, ஈசன்**
**தாளுக்கே விருந்திட்டான்;**
**ஒன்னலர்கள் செங்குருதித்**
**தசையைச் செங்கை**
**வாளுக்கே விருந்திட்டான்;**
**மாதரார் ஆவி எல்லாம்**
**மலர்க்கை வாளி**
**வேளுக்கே விருந்திட்டான்;**
**வெண்மதிக்கென் பெண்மதியை**
**விருந்திட்டானே!**

[இளசை-எட்டயபுரம்; ஒன்னலர்கள்--பகைவர்கள்;வேள்-மன்மதன்]

வேறொரு பாட்டில் காதலியே சொல்லுகிறாள்: 'கொட்டமடித்துக்கொண்டிருந்த விரோதிகள் கட்டிய கற்கோட்டைகளை எல்லாம் தூளாக்கிவிட்ட குதிரைப் படையோனாகிய எட்டம ராஜேந்திரன் என்னிடம் வராத நாளில், மன்மதன் பாணங்களை எய்து சரீரத்தைச் சல்லடையாகத் துளைத்து விட்டான்; அந்தத் துளைகளின் வழியே, சுட்டுப் பொசுக்கும் தென்றல் வந்து நுழைந்து சரீ

ரத்தை வற்றலாகச் சுவைத்து சாரத்தைக் கொண்டு போய்விட்டது. மிஞ்சியது சரீரம் என்ற இந்தக் கூடுதான். இதை நீ வந்து சுட்டதனுல் என்ன பயன், சந்திரனே ?'

**கொட்டமிடு மருவலர்கள்**
**இட்டகற் கோட்டைகளனைத்தும்**
**கொழுந்துளாக,**
**வட்டமிடு பரிகுலன்**
**எட்டவரா சேந்த்ரன், எனை**
**மருவா நாளில்,**
**துட்டமதன் கணை துளைத்த**
**துளைவழியே தென்றல்வந்து**
**சுவைத்துத் தள்ளி**
**விட்டவெறுங் கூட்டைஇனிச்**
**சுட்டதினுல் என்ன பயன்**
**வெண்ணிலாவே !**

காதல் கொண்ட ஒரு பெண்ணின் சார்பாக முறையிடும் கீழ்க் காணும் இரண்டு வரிகளே இவருடைய சொல்லாட்சியையும், செய்யுள் இயற்றும் திறனையும் வெளியிடுகின்றன :

**காதுவளை ; மைக்கண்**
**கருங்குவளை ; சொர்ணக்**
**கழுத்து வளை**
**யாகும் ; அவளைக்**
**கமலத் திருப்பவளை**
**ஒப்பென உரைக்கலாம்**
**கைவளை கிலுங்க**
**அணைவாய் !**

[காதுவளை-வள்ளைத் தண்டை ஒத்த காதுகள் ; கழுத்துவளை-சங்கு போன்ற கழுத்து; கமலத்திருப்பவள்-லக்ஷ்மி ; கை வளை-கையில் போட்டிருக்கும் சங்கு வளையல்கள்]

**இ**ந்தப் புலவரின் நூல்களில் ஒரு சிலவே 63 வருஷங்களுக்கு முன் அச்சாகி யுள்ளன ; அவை இப்போது கிடைப்பதில்லை. அச்சாகாத நூல்கள் இருப்பதாகவும் சொல்லப்படுகின்றன. எட்டயப் புரத்தில் திவானுக இருந்த வசவப்ப நாயக்கர் மீது கடிகை முத்துப் புலவர் பாடியதாகச் சில பாடல்கள் அச்சிடப்பட் டிருக்கின்றன. கடிகை முத்துப் புலவரின் காலத்திற்குப் பிறகே வசவப்ப நாயக்கர் திவானுகி இருக்கக்கூடும் என்று பல காரணங்களால் தெரிய வருகிறது. ஆகவே அந்தப் பாடல்களை வேறொரு புலவர் பாடி யிருக்கலாம் என்று கருதுகிறோம்.

இன்றுகிடைக்கும் இரண்டொரு நூல்களும் பல தனிப் பாடல்களும் கடிகை முத்துப் புலவரின் பாண்டித்தியத்துக்குச் சான்றுகளாக இலங்குகின்றன; தவிரவும் இவருடைய பெருமைக்குச் சான்ருக ஒரு புலவரே இருந்தார். அவர் தான் இவருடைய மாணுக்கராகிய உமறுப் புலவர். இவர் சீருப் புராணம் என்னும் பெரிய நூலை இயற்றியவர்.

## நாகூர் முத்துப் புலவர்

**நா**கூர் முத்துப் புலவர், கடிகை முத்துப் புலவரின் காலத்தில் வாழ்ந்தவர் என்று கருதப் படுகிருர். இவர் நாகூரிலே பிறந்து, எட்டயபுரத்தில் வாழ்ந்தவர் என்று கூறலாம். இதுவரை இவருடைய பாடல்களில் மொத்தம் 51 அச்சிடப் பெற்றிருக்கின்றன. இவர் இயற்றியதாக வேறு தனிப் பாடல்களோ, பிரபந்தங்களோ கிடைக்கவில்லை. அச்சிடப் பெற்றுள்ள 51 பாடல்களில், ஒரு பாடல் திருமலை வேலப்பன் என்பவர்மீது பாடியதாகும். திருமலை வேலப்பன் மீது கடிகை முத்துப் புலவரும் பல பாடல்கள் பாடியுள்ளார்.



**வெண்மதிக்கென் பெண்மதியை விருந்திட்டானே!**

திருமலை வேலப்பன் மதுரையில் வாழ்ந்த ஒரு தனவந்தராகவோ குறுநில மன்னராகவோ இருந்திருக்கக்கூடும். "....மதுரையில் போய்.....திருமலை நரேந்திரன் வர.....", "அச் சங்க பாணி பதம் போற்றி, செந்தமிழ்க்கு அன்பியற்றி, அச் சங்க மேவும்

திருமலை ராயன்," "கூடலில் வாழ் திருமலை வேல் கொலுவில்", என் றெல்லாம் இவரைக் கடிகை முத்துப் புலவர் குறிப்பிடுகிருர்.

**நா**கூர் முத்துப்புலவர் என்ற பெய ரைப் பார்த்தால், அவர் முஸ்லிம் மதத்தினரோ என்று சந்தேகிக்கத் தோன்றும். ஆனல், பிற்காலத்தில் எட்டயபுரத்தில் வாழ்ந்த மற்ரெரு நாகூர் முத்துப் புலவர் இந்து மதத் தவர்; அவர், இப்போது பிரஸ் தாபிக்கப்படும் நாகூர் முத்துப் புலவரின் கொள்ளுப் பேரர் என் றும் கூறப்படுகிறது. மேலும், முஸ்லிம் மத சம்பந்தமாக ஒரு பாடல்கூடப் பாடாமல், சிவ, விஷ்ணுக் கடவுளர்களைப் பக்தி யுடன் தம் பாடல்களில் நாகூர் முத்துப்புலவர் குறிப்பிடுவதி லிருந்து, அவர் இந்து மதத்தினர் என்றே தோன்றுகிறது. உதா ரணம், "பிரகலாதன் அன் புள்ளத்து இருந்து அருள் பெருக் கும் மால்", "வேத மந்திர மெய்க் குகன்" முதலியன. நாகூர் முத்துப்புலவரின் பாடல்களில் சந்தநயமோ, சுவையோ கிடை யாது. தோழியின் கூற்ருக அமைந்துள்ள கீழ்க் காணும் பாடல்தான் அவருடைய பாடல் களிலேயே சுமாராக உள்ள ஒரு பாடல்:

"வாசக்காந்தள்
மலர்க் கையினல் அணை
வாரி வாரிப் பன்
னீரொடு சந்தனம்
பூச, காந்தல்
பொருமல் அயர்ந்து, வாய்
புலம்ப, தாமமும்
வெம்ப, மின்னர்களும்
ஏசக் காந்தம்
உரைக்இல் என் செய்குவாள்?
எய்துவாய், குற—
மாது, தெய்வானைக்(கு) ஓர்
நேசக் காந்தர்
அருள்பெற்று வாழ் மனு
நீதனே! வெங்க—
டேசுரெட் டேந்த்ரனே!

இதன் பொருள்: தாயானவள் தலைவியின் உடம்பில் மணம் கொழிக்கும் காந்தள் மலர் போன்ற தன் கையினல், குளிர்ச்சி யான பன்னீரையும் சந்தனத்தை யும் அள்ளி அள்ளிப் பூசுகிருள். ஆனல் அந்தப் பன்னீரும், சந்தன மும் தலைவியின் உடம்பைச் சுடு கின்றன. தலைவி காந்தல் பொறுக் காமல் கஷ்டப் படுகிருள்; மூர்ச்சை யாகிருள்; புலம்புகிருள். அவ ளுடைய மலர் மாலைகளும் வெம்பு கின்றன. இதெல்லாம் உன்மேல் காதல் கொண்டதன் பலன். இது எல்லாம் போதாதென்று, பெண் கள் பக்கத்திலே நின்று தலைவி யைப் பலவாருகப் பழி தூற்று கிருர்கள். இந்த நிலையில் தலைவி என்ன செய்வாள்? ஆகவே.......

வள்ளி தெய்வானை என்ற இரு பெண்களின் நாயகனுகிய முருக னின் அருள் பெற்று வாழும் மனு நீதி தவருத வெங்கடேசுர எட்டேந்த்ரனே! நீ இங்கு வர வேண்டியதுமிகமிக அவசியம்.

(தொடரும்)

ஒரு உண்மை

ஏழைகளுக்காக ஏழைகள்தான் இரக்கப்படுவார்கள்.

—எல். ஈ. லேண்டன்

# எபிகூரஸ்

**கி. மு. 343—306**

**வி. சக்கரை செட்டியார்**

**அ**வனன்றி ஓர் அணுவும் அசையாது ; எல்லாம் கடவுள் செயலென்று கூறி சோம்பேறியாய்த் திரிகிறார்களென நமது நாட்டில் சிலவகைத் துறவிகளைப் பழித்துக் கூறுவது பண்டைய காலந்தொட்டு நடந்து வருகிறது. ஸ்டோயிக்கர் இக்கூற்றினின்றும் தப்பும் வழியாகக் கீழ்க்கண்ட காரணங்களைக் கூறினர்: (1) புறம்பேயுள்ளவை. அவை நிர்ணயிக்கப்பட்டுள்ளன. அவை வந்தே தீரும். (2) ஒவ்வொரு மனிதனுடைய உள் சக்தி. இது கட்டுப்படாதது. இந்தப் புருஷ சக்தியினாலே புறம்பானவைகளை வெல்லக்கூடும். இந்த வழி ஒரு விதத்திலே ஒப்பக்கூடியதாயிருப்பினும், ஸ்டோயிக்கரின் எதிர் வாதிகள் 'இது ஒரு தந்திரமே ஒழிய உண்மையில் ஒப்ப முடிந்த தல்ல' என்று வாதித்தார்கள். இவர்கள் கூற்றிலும் உண்மையிருந்துதான் வருகிறது. இக்காலத்திலும் மனிதனுடைய சுயேச்சை - சுதந்திரத்தைப் (Freedom of the Will) பற்றி மேனாட்டில் விவாதம் முடிந்தபாடில்லை. இவ் விவாதம் சமய வாதிகளுக்குள்ளும் அமோகமாக நடந்தேறி வந்தது. ஒருவன் ஆண்டவனுடைய கிருபையினால் முக்தியடைகிறான். 'ஆனால் அவன் தானாகவே முக்தி பெறுவதற்கு ஒன்றும் செய்வதில்லையோ?' என்ற கேள்விக்குப் பல விதமான விடைகள் பிறந்தன. இதே வாதம் வைணவர்களுக்குள்ளே உண்டானது. மற்கட வாதமென்றும், மார்ஜால வாத மென்றும் சொல்லப்பட்ட வாதங்கள் கிளம்பின. மர்க்கட வாதம் என்றால் குரங்குப் பிடி-வாதம்; மார்ஜால வாதம் என்றால் பூனைப் பிடி-வாதம். குரங்குப் பிடியாவது: குரங்குக் குட்டி தாய்க் குரங்கைப் பிடித்துக்கொள்ளுவது. பூனைப்பிடி: பூனையின் குட்டி தாய்ப் பூனையால் கௌவப்பட்டு பிடித்துக் கொள்ளுவது. இவை அழகான உதாரணங்கள். இவற்றை இங்கே விளக்கில் பெருகும்.

**எபிகூரஸ் (Epicurus)**

இந்த கிரேக்க பண்டிதர் கிரேக்க நாட்டுக்குக் கீழ்த்திசையிலுள்ள தீவுகளில் ஒன்றாகிய சாமோஸ் (Samos) தீவில் கி.மு. 343-ல் பிறந்து, அதேனே பட்டணத்தில் இறந்தார். மற்ற தத்துவ ஞானிகளைப் போல அதேனேவில் குடிபோய் அங்கு ஒரு பூங்காவனத்தை வாங்கி அவ்விடத்தில், தன் தத்துவப் பாடசாலையை அமைத்தார். இங்கு தன் வாழ்நாட்களை படாடோபமற்ற முறையில் கழித்தார். அவரிடம் பல மாணவர்கூடி அவரது தத்துவக் கொள்கைகளைக் கற்றறிந்தனர். ஒரு தவறான கொள்கையை இத்தருணத்தில் காட்டி அதை நீக்க வேண்டுவது அவசியம். எபிகூரஸ்

**இன்பமும் துன்பமுமே நன்மையும் தீமையுமாகும். இதில் கொள்ளுவன கொண்டு தள்ளுவன தள்ளி வாழ்வதே தத்துவ வாழ்வாகும் என்று சொன்ன எபிகூரஸின் தத்துவம் இங்கு ஆராயப்படுகிறது.**

சிற்றின்ப, அல்லது கீழ்த்தரமான இன்பச் சுவைகளையே விரும்பி, தத்துவக் கொள்கையை அறுதியிட்டார் என்பது முற்றிலும் தப்பு. எபிகூரஸ் தம்முடைய சித்தாந்தத்தில் இன்பமே, நல்லது தீயதென்னும் பாகுபாடுகளுக்கு அடிப்படையென்று வாதித்தார். இந்த மூலக் கருத்தினின்றும் அவர் சிற்றின்ப வாதியென்றும் எபிகூரியன் என்றால், சிற்றின்ப லோலன் என்றும் உலகத்தில் பழி கூறலானார்கள். இன்பமே நன்மை தீமைக்குக் காரணமென்ற கொள்கையை ஆங்கில நாட்டில் ஹீடனிஸ்ட்ஸ் (Hedonists) என்பவர்களும், யுடிலிடேரியனஸ் (Utilitarians) என்பவர்களும் சென்ற நூற்றாண்டிலும் அதற்கு முன்னும் தங்களது அறவழிக்கு ஆதாரமாகக் கொண்டனர். அவர்களில் மிகவும் புகழ் பெற்றவர் ஜான் ஸ்டூவர்ட் மில் (John Stuart Mill). ஆனால் இவர்களது கொள்கையை சாஸ்திர முறையில் எதிரிகள் கண்டனம் செய்திருக்கிறார்கள். பன்றியும் தின்று இன்பமடைகிறது. சாக்ரட்டீஸ் போன்ற ஞானியும் துன்பமடையலாம். ஆகையால் பன்றியினுடைய மாதிரியே மக்களுக்குத் தகுதியானதா? இதை எவரும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். எபிகூரஸ் இதை மறுக்கவில்லை. அவர் மேலறிவினாலும் சில ஒழுக்கத்தினாலும் வரும் இன்பமே மேலானது என்று கூறினார். இது சரியாயின் இன்பமே, நீதி—நியாயத்திற்கு அடிப்படை; எது இன்பம் தருகிறதோ அதுவே நல்லொழுக்கம்; துன்பம் தருவது தீயது; அறமே அல்லது தர்மமே உலகத்திற்கு அடிப்படையானது. வள்ளுவனாரும், கடவுள் வாழ்த்துக்குப் பின் அறத்துப் பாலைக் கூறுகிறார். இன்ப வகைகளில் வித்தியாசங்கள் கூறவேண்டியிருக்கிறது. சிற்றின்பமென்றும், அறிவு இன்பம், பேரின்பம் என்றும் பாகுபாடுகளை எபிகூரஸ் நியாயம் காட்டித்தான் தம் கொள்கையில் சேர்ப்பார். அநேகர் தங்களது வாழ்க்கையில் இன்பமே பெரிது என்று அதை நடத்துகின்றனர். இதனால் அவர்களது வாழ்க்கை மேம்பாடடைகின்றதில்லை.

ஆயினும் எபிகூரஸின் உண்மையான கொள்கை என்ன? எதார்த்த ஞானியர் கேவலம் சிற்றின்பத்தில் புரளாமல், உயரிய ஊற்றுக்களிலிருந்து பிறப்படும் இன்பத்தைக் கிட்டவும், துன்பமில்லாத இயக்கத்தை, அமைதியைப் பெறவும் உழன்றனர். துன்பமின்மையே, நோயற்ற வாழ்வே, மேலான உண்மை அறிஞரால் விரும்பத்தக்கது. சந்தேகவாதிகள் எபிகூரஸின் இந்த மிதவாதக் கொள்கையைப் புறக்கணித்து எல்லாக் கருமத்தினின்றும் விலகி சும்மாயிருப்பதே பரம சுகமென்றனர். உண்மையை யறிந்தவன் இன்பமடைவான் என்ற கொள்கையைப் பெற்று, ஆனால் உண்மை எங்குளதென்று எளனம் பண்ணி, கருமத்தினால் மனிதன் சுகத்தையும், துக்கத்தையும் தன் வீட்டுக்குள் விருந்தாளிகளாக அழைக்கிறான். உலக காரியங்களில், அரசியல் சமுதாய இழவுகளில், இறங்காமல் மிதமாக உண்டு தன்னைத் தான் அரண் செய்து கொண்டால் போதுமென்றனர்.

# பாம்பு கடி

**ஜான் ஏ. பிரிங்கில்**

இந்தியாவிலும், தென் அமெரிக்காவில் உள்ள பிரேஜில் நாட்டிலும் பாம்பு கடி அதிகம்; ஒரு வருஷத்தில் ஆயிரக் கணக்கில் கடிக்கும். தென் ஆப்பிரிக்காவில் பாம்பு கடி மிகவும் குறைவு. பாம்பு கடிக்கு மாற்று விஷம் கண்டுபிடித்த பின் இந்தத் தொல்லை ஓரளவு நிவர்த்திக்கப்பட்டிருக்கிறது.

மாற்று விஷ வைத்தியமுறை கண்டுபிடிக்கப் படுவதற்கு முன்னால், பாம்பு கடிக்கு பலவித வைத்திய சிகிச்சைகள் செய்யப்பட்டு வந்தன. சாராயத்தை,முக்கியமாக சுயம்புவான பிராந்தியை, மூர்ச்சை யடையும் மட்டும் கொடுப்பதை பல மக்கள் ஒரு மருந்தாகக் கருதி வந்தார்கள். சேவற் கோழியை உயிரோடு பிளந்து அதன் வெது வெதுப்பான மாமிசத்தை வைத்துக் கட்டுவதையும் ஒரு மருந்தாகக் கருதினர்கள். சேவல் மாமிசத்தின் கதகதப்பு விஷத்தை உறிஞ்சிவிடும் என நினைத்தார்கள். பாம்பு கடிக்கு அமிலப் பொருள்கள், கார்பாலிக் ஆசிட், பழுக்கக் காய்ச்சிய இரும்பு, அமோனியா, கொடிய விஷம், கொயினு, மூலிகைகள், புளிக் காடி முதலியவைகளும் உபயோகப் படுத்தப் பட்டன. கரிபட்ட எலும்பும் சில மூலிகைச் சாறும் சேர்ந்து செய்யப்பட்ட நாக சர்ப்பக் கற்கள் இந்தியாவில் பிரசித்தமானவை. அவற்றைக் கடிவாயில் வைத்தால் விஷத்தை உறிஞ்சி எடுத்துவிடும் எனச் சொல்லப்பட்டது. கடித்த பாம்பின் வர்க்கத்தை அறிந்தாலன்றி மேற்சொன்னவற்ருல் குணம் காணமுடியாது. ஒரு விஷப் பாம்பு முதலில் ஒரு பொருளைக் கடித்துவிட்டால், பிறகு அதனது இரண்டாவது கடியில் அதிகப்படியான வேகம் இருக்காது.

1894-ல் பாரிஸ் பாஸ்டியர் ஸ்தாபனத்தில், கால்மீட்டி என்பவர் மாற்று விஷமார்க்கம் பற்றி ஆராய்ச்சிகள் நடத்திஞர். அவர் ஒரு குதிரைக்கு பதினெட்டு மாத காலமாக அணு அணுவாக நாக விஷத்தை ஏற்றி, கடைசியில் அதன் இரத்தத்தை எடுத்து, ரத்த சத்தை மட்டும் தனியாக வடித்தெடுத்தார்; அந்த சத்து நாகப் பாம்பு கடிக்கு அருமையான மருந்தாயிற்று. ஆனல் இந்த மருந்து நாக சர்ப்பத்துக்கு மட்டும் பயன்பட்டது. ஆகவே மற்ற பாம்புகளுக்கு வேறு வேறு மாற்று விஷம் கண்டுபிடிக்க வேண்டியதாயிற்று.

எனவே எல்லாப் பாம்பின் விஷமும் ஒரே மாதிரியானதல்ல.

பாம்பு கடிக்கும்போது இரண்டு விதமான விஷம் உடலில் ஏறுகிறது. ஒன்று: அதன் விஷப் பையிலிருந்து இறங்கும் விஷம்; மற்றது, அதன் பல்லிலிருந்து உள்ளே நுழையும் நச்சுக் கிருமிகள். எனவே பாம்பு கடிக்கு ஊசி போட்டவுடன், அதன் கடிவாய்ப்

**பாம்பு கடி உபத்திரவம் இந்தியாவில்தான் அதிகம். அதைப் பற்றிய சில ரசமான தகவல்கள் கொண்ட இக்கட்டுரை ஹெல்த் ஹொரைசனிலிருந்து எடுக்கப் பெற்றது.**

புண்ணிலும் கவனம் செலுத்த வேண்டும். பாம்பு கடித்தவுடன் அதற்கும் இருதயத்துக்கும் நடுவாக, கடிவாய்க்கு மேலாக ஒரு கட்டு கட்டவேண்டும். விஷம் இறங்குமட்டும் மணிக்கு மணி வைத்திய உதவி அளிக்கவேண்டும்.

ஒவ்வொரு பாம்பாக ஒரு பாத்திரத்தில் கடிக்கவிட்டு அப்போது பொழியும் விஷத்தைச் சேகரிக்கிறார்கள். இந்த விஷத்தைச் சேகரிப்பதில் காலக்கிரமத்தையும் ஓரளவு கவனிக்கவேண்டும். நல்ல பாம்பு விஷத்தை, மூன்று வாரங்களுக்கு ஒரு முறைதான் சேகரிக்க முடியும். குளிர்காலத்தில் பாம்பு இரை யெடுக்காததாலும், விஷம் ஊறாததாலும் அப்போது விஷம் சேகரிக்க முடியாது. கோடை காலத்தில்தான் சேகரிக்க முடியும். சாதாரணமாக ஒரு பாம்பு $\frac{1}{2}$ கிராம் விஷம், அதாவது கால் கிராம் அளவுக்குக் கொஞ்சம் குறைவாக விஷம் கொட்டும்.

பெரிதான விஷப்பை கொண்ட பாம்பின் விஷத்தை எடுப்பது சுலபம். ஆப்பிரிக்க காபூன் பாம்புகளுக்குத்தான் நீள விஷப் பைகள் உண்டு. கொடிய விஷம் படைத்த பாம்புகளுக்கு விஷப்பை சிறியதாகவே இருக்கும். சிலவற்றிற்கு வாய்க்கு முன்னும் சிலவற்றிற்குப் பின்னும் இருக்கும். வாய்க்குப் பின்னால் விஷப் பையுள்ள பாம்பு அவ்வளவு கொடியதல்ல.

ஆப்பிரிக்கப் பாம்புகள் சில (நாகசர்ப்பமும் கட்டுவிரியனும்) விஷத்தை நாலேந்தடி தூரத்துக்குத் துப்பிப் பொழியும் வண்ணம் அதன் விஷப் பை அமைந்திருக்கிறது. ஒவ்வொரு பாம்புக்கும் வாயின் இரு பக்கத்திலும் இரண்டு இரண்டு பைகள் உண்டு. ஒன்று காலியானால் அதன் ஸ்தானத்தை அதற்குப் பின்னுள்ளது ஆக்ரமித்துக்கொள்ளும். இப்படி இரண்டிரண்டு பைகளுள்ள பாம்புகள் அதிகப்படியாக விஷத்தைச் செலுத்த வேண்டும். நல்லபாம்பு ஒழுங்காகவும், விரைவாகவும் கொத்திவிடும். விரியன் பாம்புகள்தான் எல்லாப் பாம்புகளையும் விட, விரைவில் கொத்தக் கூடியது. அது கடிப்பதை உணரமுடியாது; ரத்தம் கசிவதைக் கண்டுதான் தெரிந்துகொள்ள முடியும்.

பாம்பு கடிக்கு ஒரே ஒரு மாற்றுத்தான் உண்டு; நெருப்பை நெருப்புத்தான் அணைக்கும். விஷத்தைக் கொண்டுதான் விஷத்தை மாற்றமுடியும்.

✲

**தாயைக் கண்டு பயம்**

ஒரு ராணுவச் சிப்பாய் செவிலித் தாயாக இருக்கும் ஒரு தாதியைப் பார்த்து, "நாளை இரவு என்னோடு நாட்டியமாட வருகிறாயா?" என்று கேட்டான்.

அதற்குத் தாதி சொன்னாள்:

"வர ஆசைதான். ஆனால், குழந்தையை அதனுடைய தாயாரிடத்தில் விட்டுவிட்டு வர எனக்குப் பயமாக இருக்கிறது."

—ஷிபூ காஸில் ஜர்னல்

# அழகும் அலங்காரமும்

ல. சண்முகசுந்தரம்

மொழி என்பது மனிதன் தன் எண்ணத்தை வெளிப்படுத்தித் தீர்ப்பதற்கு எடுத்துக் கொண்ட, அவனுடைய நிர்ப்பந்தமான முயற்சியில் விளைந்த ஒரு சரக்கு. அது குருட்டுப் பூனை விட்டத்தில் பாய்ந்து விட்டதைப் போல, எதிர்பாராத விதமாகவும் சந்தர்ப்பவசமாகவும் எப்படியோ பிறந்துவிட்ட விஷயம். இப்படி உண்டான மொழியைப் பின்பு வாழையடி வாழையாக வந்த சந்ததி, எப்படி எப்படி எல்லாமோ பண்படுத்தி, வளம்படுத்தி உருவாக்கி இருக்கிறது. தங்கம் என்ற வஸ்துவை எப்படியோ மனிதன் அகஸ்மாத்தாகப் பொன் என்று சொல்லிவிட்டான். பின்பு அந்த வார்த்தையை வைத்துக்கொண்டே பொன்னை உடையவனை பொன்னன், பொன்னனை என்றெல்லாம் விரித்துக்கொண்டே போனான். அதன் பின்பு இந்த மொழியை அதன் நடைமுறைத் தன்மைகளோடும் பண்புகளோடும் குறிப்பிடுவதற்கு, அதற்குரிய குணங்களை எல்லாம் அடை மொழிகளாகச் சேர்த்து அழகுபடுத்தி இருக்கிறான். உதாரணமாக அதே பொன்னை செம்பொன் என்றும் பசும்பொன் என்றும் விரிவு படுத்தி இருக்கிறான். இப்படி விரிவு படுத்த வந்த அடை மொழிகளைத்தான் **அழகு** என்று சொல்வது. இனி **அலங்கார**மாவது: நம் மனத் தன்மைகளையும், தகுதிகளையும் புலப்படுத்திய சொற்களைக் கொண்டு ஒரு பொருளின் தன்மைகளையும் தகுதிகளையும் விளங்க வைக்கிற உவமை முதலிய அணி வகைகளும், ஒரு பொருளின் தன்மையை மறைமுகமாகப் புலப்படுத்துகிற குறிப்பு நிலைகளும் என்று பலவாருக அலங்காரம் விளக்கப்படுகின்றது.

வேத்தமர் கடந்த
வென்றி நல்வேல்
குருதி ஒடு துயல்வந்
தன்ன நின்
அரிவேய் உண்கண்
அமர்த்த நோக்கே

இது, காதற் பிரிவை எண்ணி வருந்துகிற பெண்ணின் அலமருகின்ற பார்வையினையும், கண்ணீர் சூழப்பட்ட செவ்வரி படர்ந்த கருவிழிகளையும், போர்க் களத்தில் தேங்கி நிற்கும் ரத்த வெள்ளத்தில் விழுந்து அசைந்தாடுகின்ற வேலாயுதத்தோடு ஒப்பிடுகிறது. இதுபோல வருவதுதான் **உவமை.**

கொடுந்தேன் இழைத்த
கோடுயர் நெடுவரை
பழந்தூங்கு நளிப்பில்
காந்தளம் பொதும்பில்
பகல் நீ வரினும்
புணர்குவை

'தேன் கூடுகள் நிறைந்த குன்ருரங்களில் நீ பகற்காலம் வந்

**'இரண்டும் இரண்டும் நாலு' என்ற வாய்ப்பாட்டைப்போல் விஷயத்தைச்சொல்லுவதைவிட அலங்காரமாகப் புனைந்து சொல்வதிலும், அதில் உள்ளுறைபொருளை ஊட்டுவதிலும் சிறந்த கலையம்சம் ஏற்படும். எனினும் வெறும் அலங்காரம் மட்டும் கவிதையாகி விடாது; கவிஞனின் அழுத்தமான சொல்லாட்சியும் சேர்ந்தால்தான் கவிதை பிறக்க முடியும் என்ற கருத்தைச் சுருக்கமாக விளக்குகிருர் கட்டுரையாளர்.**

தால்நாயகியைக் கூடி இன்புறலாம்' என்று தோழி வெளிப்படையாகக் கூறினாலும், அக்குன்றின் நிலைமையைச் சொல்லுகையில் பழங் கனிந்த மரங்களும், காந்தள் பூ மலர்ந்த புதர்களும் அங்கே நிறைந்துள்ளன என்று ஒட்டிச் சொல்லுவதால், அப் பழங்களையும் பூக்களையும் பறித்துச் செல்லும் ஜன நடமாட்டம் எப்பொழுதும் உண்டு; ஆகவே அதுவும் நீ வருவதற்குத் தகுந்த இடம் அல்ல என்றும் குறிப்பிடுகிறது. இது திருமணம் செய்து கொள்ளாமல் இரவு தோறும் வந்து இன்பம் நுகர்ந்து செல்லும் தலைமகனை நோக்கித் தோழி சொல்லியது. இது போன்றதுதான் குறிப்பு நிலை இதை இறைச்சிப் பொருள் என்றும் சொல்லுவதுண்டு.

அவனுந்தான்—

ஏனல் இதணத்(து)
அகிற்புகை உண்டியங்கும்
வானூர் மதியம்
வரைசேரின்—அவ்வரைத்
தேனின் இறாலென
ஏணி இழைத்திருக்கும்
கானகல் நாடன்
மகன்

(இது நம் பெண்ணிடம் அன்பு கொண்டுள்ளவன் யாரென்று கேட்ட தாயிடத்துத் தோழி சொல்லியது)

அகிற் புகையால் மூடப்பட்ட சந்திரனைத் தேன்கூடு என்று கருதி அதனைப் பற்ற முயலும் வேடர் நிறைந்த மலைநாடன் என்ற பொருளைத் தந்து, பின்பு புகையைப்போல அன்பால் போர்த்து மூடப்பட்ட அவனை இவள் எண்ணி வருந்துகிறாள் என்ற பொருளையும் தந்து நிற்பதால் இதுவும் குறிப்பு நிலையே.

ஆனால் இதிலுள்ள ஒவ்வொரு சொல்லும், தன்னை ஒத்த மற்றொரு பொருளையும் நேருக்கு நேர் நின்று காட்டுவதால் இதனை உள்ளுறை உவமம் என்று சொல்லுகிறார்கள். **உள்ளுறை உவமம்:** ஒவ்வொரு சொல்லும் ஒவ்வொரு உவமையாக மாறி அந்த ஒவ்வொரு உவமையும் தன்னின் நீங்கிய மற்றொரு பொருளையும் உள்ளடக்கிக் கூறுவது.

இந்த உவமைகளும் குறிப்பு நிலைகளும் சங்க இலக்கியங்களில் மிக மிக விஸ்தாரமாகச் சொல்லப்பட்டுள்ளன.

புதுப் புது விதமான பட்டைகளையும், ஒளிகளையுமுடைய மணிகள் போல அவை பிரகாசிக்கின்றன. ஒரு பொருளினுடைய குணம், தொழில், புறவுருவம், நிறம் ஆகிய இவற்றை எல்லாம் தனித் தனியாகவோ கூட்டமாகவோ அவை விளக்கிக் காட்டுகின்றன. ஆனாலும் சங்க இலக்கியங்களில் வருகின்ற பாடல்கள், காதல், வீரம் ஆகிய ஏதாவதொரு துறையை, குறிப்பிட்ட ஒரு அம்சத்தை, ஒரு தன்மையை மட்டும் ஓரங்கமாகச் சொல்லுவதாலும், உண்மையைக் கண்டு அப்படியே புகைப் படம் எடுத்ததுபோல அப்பாடல்கள் இருப்பதாலும், விரிவு பட்ட கற்பனை ஒட்டத்திற்கு வெறும் ஊமைக் குழந்தைகளாகவே அவை காட்சி அளிக்கின்றன. இந்த நிலை பிற்காலத்தில்தான் தளர்த்தப்பட்டிருக்கவேண்டும்.

காதல் உள்ளத்தை வாட்டி வதைக்கின்ற கண்ணின் கொடுமை

யைக் கூறப் புகும் பிற் காலப் புலவராகிய ஒட்டக்கூத்தர்,

ஓலக் கடலேழும்
ஒன்ருய் உலகொடுக்கும்
காலக் கடலனைய
கட்கடையாள்

என்று அழுத்தங் கொடுத்துச் சொல்லுகிருர்.

ஒரு பெண்ணின் கூந்தலை,

மழையினை நீலம் ஊட்டி
வாசமும் புகையும் ஆட்டி
உழை உழை சுருட்டி, மென்பூக்
குவித்திடைக்(கு) இடையூறென்
பிழையுடை விதியார் செய்த [ளைப்
பெருங்குழற் கற்றைப்பாரம்

என்று கம்பர் வருணிக்கிருர்.

சிருஷ்டிகர்த்தாவானவன் விண்ணிடைத் திரியும் மேகத்தைப் பிடித்து, அதிலே மேலும் மேலும் நீலத்தைக் கரைத்துப் படிய வைத்து, வாசனைத் தைலங்களையும் புகையையும் கலந்து, வளைவோடு கூடிய மடிப்புக்களை அடுக்கடுக்காக அமைத்து, பல பூக்களைச் சிதறிப் போட்டு இந்தப் பெண்களுடைய இடைப் பாகம் நொந்து வருந்தும்படியாக இவர்களுடைய தலையிலே ஏற்றிவிட்டதைப் போன்றிருக்கிறதாம், ஒழுங்கு பட்ட கூந்தல் காடு.

இது வரைக்கும் சொற்களினுடைய அழகையும் அவற்றை வெளியிடுகின்ற அலங்கார வகைகளையும் பார்த்தோம். இனி இந்தச் சொற்களெல்லாம் இந்த அடைமொழிகளோடும், அலங்கார வரிசைகளோடும் புறப்பட்டு விட்டால் போதுமா, இந்தச் சிறகுகளை மாத்திரம் வைத்துக்கொண்டு இலக்கிய உலகத்தின் அடிமுடிகளை எல்லாம் இச் சொல் வரிசைகளால் தொட்டுத் துழாவி வட்டம் போட முடியுமா என்பதைப் பார்க்க வேண்டும். ஒரு பொருளின் அல்லது விஷயத்தின் உள்ளுணர்ச்சிகளை எல்லாம் வெளியிடுவதற்கு இந்த அடைமொழிகள் ஓரளவுதான் பயன்படுமே ஒழிய, அதாவது பொருளினுடைய (விஷயத்தினுடைய) நடைமுறை வரிசைகளை இந்த அடைமொழிகளைக் கொண்டு ஓரளவு தான் வெளிப்படுத்தலாமே ஒழிய முழுவதையும் வெளிப்படுத்த முடியாது. அப்படி முழுவதையும் வெளிப்படுத்த, விஷயங்களிலே அமுங்கிப் பதிந்துபோன கவிஞனுடைய உள்ளத் தோய்வும், மன அழுத்தமும் தேவை.

வல்விய வில்லான் போனன்
வரம்பெற்று வளர்ந்ததோளான்

இது, தோல்வியால் தாக்கப்பட்டு வருந்தி இருக்கும் ராவணனைக் கண்ட மகரக்கண்ணன், மனம் பொறுக்க முடியாமல் போர்க்களம் செல்வதை அழுத்திக் கூறுகிறது.

"வரம் பெற்று வளர்ந்த தோளான்" என்ற சொற்கட்டுகளைப் பிளந்துகொண்டு, அவனுடைய அதிவேக நிலையும் ஆவேசமும் விஸ்வரூப மெடுக்கின்றன.

தோடுண்ட சுருளும், தூங்கும்
குழைகளும், சுருளிற்ருேன்றும்
ஏடுண்ட பசும்பொற் பூவும்,
திலதமும், இலவச் செவ்வாய்
மூடுண்ட முறுவல் முத்தும்

அரக்கர்களின் மத்தியில் நடனமாடும் அழகியர்களின் அலங்கார வரிசைகளை எல்லாம் ஒவ்வொரு சொல்லும் அழுத்தங் கொடுத்தும் கமகம் கொடுத்தும் பேசுகின்றது.

அரக்கர்களின் ஆக்ரமிப்பாலோ, வேறு யாது காரணத்தாலோ தங்கள் அழகையும் தன்மையையும் விலை கூறிவிட்ட வெறும் நாட்டியப் பெண்கள்தான் இவர்கள் என்பதை அவர்களுக்குச் சொன்ன அணி அலங்காரங்களே விளக்குகின்றன. அவர்களுடைய குணங்கள் எல்லாம் திலதம், இலவச் செவ்வாய், மூடுண்ட முறுவல் முத்து என்ற சொற்களின் பின்புறமிருந்து குமுறுகின்றன.

அவர்கள் பல்லினை, குறுநகை தவழும் இலவம் பூப் போன்ற வாயினால் மூடப்பட்டுள்ள முத்து என்பதிலே விஷய அழுத்தம் பூரணம் அடைகிறது. இப்படி வெறும் வார்த்தைகளையும், அடைமொழிகளையும் கவிஞன் தன் அனுபவ அழுத்தத்திலே நடமாடவிட்டு அதன்மூலம் பல ஜால வித்தைகளைக் காட்டிவிடுகிறான். முன் சொன்ன உவமைகளும் குறிப்பு நிலைகளும், ஒரு பிரச்னையையோ பாத்திரத்தையோ விளக்கிக்காட்டுவதாக இருந்தாலும் பின்வரும் சம்பவங்களை முன்னமேயே அறிவுறுத்துகிற அடிப்படை வரிசைகள் என்று அவற்றைக் கொள்ள முடியாது. அந்த அடிப்படை வரிசைகளைப் பின்வரும் பாடல்கள் மூலமாகப் பார்க்கலாம்.

**கரியமலர் நெடுங்கண்**
**காரிகைமுன்**
**கடல்தெய்வம்**
**காட்டிக்காட்டி**
**அரியசூள் பொய்த்தாரை**
**அன்பிலர் என்(று)**
**ஏழையர்யாங்**
**கறிகோமைய**
**விரிகதிர் வெண்மதியும்**
**மீன் கணமும்**
**ஆமென்றே**
**விளங்கும் வெள்ளைப்**
**புரிவளையும் முத்துங்கண்(டு)**
**ஆம்பல் பொதி**
**அவிழ்க்கும்**
**புகாரே எம்மூர்**

கோவலனைப் பிரிந்து வருந்தப் போகிற மாதவி, அது நடக்கு முன்பே, அவனோடு இருந்து யாழ் வாசிக்கும்பொழுதே, என்னை இவ்வாறு ஏமாற்றிப் பிரிந்து போனரது தன்மையை நான் எப்படி முன்கூட்டி அறிவேன் என்று புலம்புகிறாள். புகார் நகரமே பிறரால் பல வழியாலும் ஏமாற்றப்பட்ட நகரந்தானாம். அலைகளினால் கரையோரங்களில் வாரி அடிக்கப்பட்டுச் சேர்ந்துகிடக்கும் சங்குகளையும், முத்துக்களையும் முறையே சந்திரன் என்றும், நட்சத்திரங்கள் என்றும் எண்ணி ஆம்பல் மொட்டுக்கள் ஏமாந்து மலர்ந்துவிட்டனவாம். அப்பேர்ப்பட்ட புகாராம் அவள் ஊர். இந்தப் பாட்டுத்தான் பின்வரும் நிகழ்ச்சிகளை எல்லாம் துலாம்பரப்படுத்திக் காட்டும் கைவிளக்குப்போல உதவி செய்கிறது. இந்தப் பாட்டைப் பாடித்தான் மாதவி கோவலனையே பிரிய நேர்ந்தது.

**பலபட முறுவல்வந்து**
**பயந்தன, பனித்தமெய்வேர்,**
**இல்விதழ் துடித்த, முல்லை**
**எயிறுவெண் நிலவை ஈன்ற,**
**கொலைபயில் நயனவேலின்**
**கொழுங்கடை சிவந்த, கொற்றச்**
**சிலை நிகர் புருவம் நெற்றிக்**
**குனித்தன, விளர்த்த செவ்வாய்.**

களியாட்டத்தில் உள்ள கோலாகலங்கள், அரக்கர்களின் வரன்முறை கெட்ட செய்கைகள், அவர்கள் நாட்டியத்தை அனுபவிக்கும் கோர விகாரங்கள் ஆகிய இவை

எல்லாம் பாட்டினுள்ள ஒவ்வொரு சொல்லிலும், ஈரப் பசை அற்ற தன்மையை சுட்டிக் காட்டும் ஒவ்வொரு சொல்லிலும், சுழன்றுடி வருகின்றன.

நாட்டியச் சதங்கையின் ஒலிகளேயும், உருமாறி உருமாறி வருகின்ற போலித்தனமான புன்முறுவல்களேயும், அரக்கர்களின் வெறிபிடித்த பார்வைகளேத் தாங்க மாட்டாமல் நெளிந்து சுளிக்கின்ற அங்கத் துடிப்புக்களேயும், நடன ஜதியிலே வந்து போகின்ற அசைவுகளேயும் கவிஞனுடைய ஆவேசமும், அழுத்தமும் ஒன்று சேர்ந்து, இழுத்து இழுத்து, வெளியில் கொண்டுவந்து வீசுகின்றன. பின்பு, அப் பெண்களிடத்து அனுதாபப்பட்டு, இளகிக் கரைந்துபோன உள்ளுணர்ச்சி,

> கொலேபயில் நயனவேலின்
> கொழுங்கடை சிவந்த, கொற்றச்
> சிலேநிகர் புருவம் நெற்றிக்
> குனித்தன, விளர்த்த செவ்வாய்

என்ற சப்த ஜாலங்களிலே ரீங்காரம் பண்ணுகின்றன. ஒவ்வொரு உவமையும் அந்தக் களியாட்டத்திலே, கேவலம், போலித்தனம், நாசத் தன்மை ஆகிய இவை எல லாம் உண்டு உண்டு என்று அழுத்திக் கூறுகின்றது. கருவிழிகளின் கடை யோரங்கள் சிவந்துவிட்டதும், வாயிதழின் செந்நிறமானது வெளுத்து வருவதும் இனிமேல் இங்கு (இக் களியாட்டத்திற்கு மாறுபாடான) அழுகை நிறைந்த அழிவுதான் என்பதை ஒரு பக்கமாக நின்று உணர்த்தி வருகின்றன. பாட்டின் ஒவ்வொரு சொல்லும் கருவரங்கமாக இருந்து கொண்டு, அந்தச் சபையில் நடக்கும், நடக்கப்போகும் நீசத்தன்மைகளே உற்பத்தி பண்ணிக்கொண்டே இருக்கின்றன. பதப் பிரயோகங்களும், அதைத் தீட்டி விளக்கும் அலங்காரங்களும் இந்த விதமாகக் கற்பனே வசப்பட்டு ஜொலித்தால் தான், அவை பின்வரும் சம்பவங்களே முன்னமே அறிவிக்கக்கூடிய அடிப்படை வரிசைகளாகவும், கட்டுக்கோப்புகளாகவும் அமைய முடியும். இந்தக் கட்டுக்கோப்புக்கள்தான் இலக்கியத்தின் அந்தரங்கமான, அபூர்வமான உயிர்நாடி. இதன் வளத்தைப் பொறுத்துத்தான் இலக்கியத்தின் வளர்ச்சி இருக்கிறது.

## தேநீர்ப் பைத்தியங்கள்

ட்ஸை ஹ்ஸியாங் என்ற பேரறிஞர் தம் முதுமைப் பிராயத்தில் தேநீரைக் குடிக்கக் கூட முடியாத நிலேக்கு வந்துவிட்டார். தேநீரைக் குடிக்க முடியாவிட்டாலும், தேநீர் தயார் செய்வதில் அவருக்கு ஒரே குஷி. அவர் தினமும் ஒழுங்காய்த் தேநீர் தயார் செய்வார். சோன் வென் சூ என்னும் மற்றொரு அறிஞர் ஒரு நாளேக்கு உதயத்திலிருந்து அஸ்தமனம் வரை ஆறு தடவைகள் தேநீர் குடிப்பார்—அதாவது குறிப்பிட்ட நேரங்களில். தேநீர் தயாரிக்கும் தம் மண் பாத்திரத்தின்மீது அவருக்கு ஒரே காதல். சாகும்போது தம்முடன் அந்தப் பாத்திரத்தைக் கூட வைத்துப் புதைக்கவேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார். அப்படியே செய்தார்கள்.

—லின் யூடாங்

# பாவைக் கூத்து

தோல் பொம்மலாட்டம்தான் இந்தோனேஷ்ய மக்களின் நாடகக்கலையின் சின்னமாக விளங்குகிறது. சூத்திரதாரியாகவும் கதை சொல்லுபவனாகவும் இருந்துகொண்டு பொம்மலாட்டத்தைச் சிறப்புற நடத்திக் காண்பிப்பவனை இந்தோனேஷ்ய பாஷையில் 'டலாங்' என்றழைக்கின்றனர்.

டலாங்கின் வேலை பலதிறப்பட்டது. அவன்தான் சமயத்திற்குத் தகுந்தமாதிரி, நாடக பாத்திரங்களாக வரும் பொம்மைகளுக்குத் தகுந்தமாதிரி, தன் குரலை மாற்றிக்கொண்டு பேசுகிறான். கதாநாயகன், கதாநாயகி பாடும் கட்டம் வந்தால் டலாங்தான் பாட வேண்டும். அதுமட்டுமா? நாடகத்தில் பக்க வாத்தியம் வாசிக்கிறவர்களை மேற்பார்வையிடுகிறவனும் அவன்தான். ஆகவே டலாங் ஒரே சமயத்தில், சூத்திரதாரியாகவும், குரல் இரவல் கொடுக்கிறவனாகவும், பக்கவாத்தியக் கோஷ்டியின் கண்காணிப்பாளனாகவும் பாடகனாகவும் இருந்து பொம்மலாட்டத்தை நடத்துகிறான்.

திரைக்கும் சூத்திரதாரனுக்கும் நடுவில் ஒரு எண்ணெய் விளக்கு தொங்கிக் கொண்டிருக்கும். திரைக்கும் விளக்குக்கும் இடையில்தான் டலாங் பாவைகளை நடிக்கச் செய்வான். திரையின் மறுபக்கம்தான் வேடிக்கை பார்ப்பவர்கள் உட்கார்ந்திருப்பார்கள்.

இந்திய இதிகாசங்களாகிய இராமாயணம், மகாபாரதம் முதலியவற்றிலிருந்தும், அரேபிய, பாரசீகக் கதைகளிலிருந்தும்தான் பாவைக் கூத்துக்கு வேண்டிய கதைகளை எடுக்கிறார்கள்.

பாவைக் கூத்து (வயாங்) நான்கு வகைப்படும்: போர்வா, க்ரோட்ஜில், கெடாக், கோலக் முதலியன. இந்த நான்கில் பல வருஷங்களாக மக்களால் பெரிதும் ரசிக்கப்படுவது போர்வா கூத்துதான்.

பாவைக் கூத்துப் படங்கள் முதன் முதலில் பனை ஓலைகளில் எழுதப்பட்டிருந்தது. பிறகு மரப் பட்டைகளிலும் எழுதிவைத்திருந்தார்கள்.

இந்தோனேஷ்யாவில் இஸ்லாமிய மதம் பரவ ஆரம்பித்தவுடன் இந்தப் பாவைக் கூத்துகளில் பலமாற்றங்கள் உண்டாயின. மனிதனைக் கதாநாயகனாகக் கொண்ட கூத்துக்களையோ, மனித குணங்களைச் சித்திரிக்கும் கதைகளையோ இஸ்லாமிய மதம் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆகவே, பாவைக் கூத்துகளில் நேரடியாக மனிதர்களைப்பற்றி அல்லாமல் மறைமுகமாக மனித குணங்களை விளக்கிக் காட்டினர். மனிதனின் உருவங்களைக் கொண்டதாக இல்லாமல், மனிதனின் அகக்கண்முன் தோன்றும் அமானுஷ்ய உருவங்களை மனத்திரையில் எழுதி

**பாவைக்கூத்து, பொம்மலாட்டம் முதலிய கைக்கரண ஜாலக் கலைகள் நமது நாட்டில் க்ஷீணித்து வருகின்றன. அவற்றைப் புதுப்பிப்பது நமது கடமை. இவ்விஷயத்தில் இந்தோனேஷ்யர்கள் நமக்கு ஒரு முன்மாதிரியாக விளங்குகிறார்கள். இந்தக் கட்டுரை மெர்டேகா என்ற இந்தோனேஷ்யப் பத்திரிகையிலிருந்து எடுத்தது.**

அவ்வுருவங்களின் போக்கு, நடை உடை பாவனை முதலியவற்றின் மூலம் மனிதனை மறைமுகமாகச் சுட்டிக் காட்டும்படியான கதாபாத்திரங்களைச் சிருஷ்டித்தார்கள்.

முகமதிய சுல்தான் கலம் அக்பர் காலத்தில் பாவைக் கூத்தில் ஆட்டப்படும் பாவைகள் எருமைத்தோலினால் செய்யப்பட்டவையாக இருந்தன. எருமைத் தோலை அழகாகக் கத்தரித்து வர்ணம் தீட்டி பாவைகளை அழகு பெற அமைத்தார்கள். அநேகமாக அந்தப் பாவைகள் பக்கவாட்டில் திரும்பி இருப்பதைப் போலத்தான் இருக்கும். இந்த முறையிலேயே 1480-ம் ஆண்டு வரையில் அநேக சீர்திருத்தங்கள் செய்யப்பட்டு வந்தன. அந்தக் காலத்தில்தான் அது குறித்த அளவுக்கு பரிபூரணத்துவத்தை அடைந்திருந்தது என்று சொல்லலாம். இப்பொழுது அது பழம் பெருமை கொண்ட இலக்கியமாகிவிட்டது.



இந்தோனேஷ்யப் பாவை

இந்தத் தோல் பொம்மைகளேயன்றி மரக்கட்டையால் செதுக்கிய பொம்மைகளும் உண்டு. அவை பக்கவாட்டில் பார்ப்பதைப் போலவோ அல்லது கல்லில் வடிக்கப்பட்டிருக்கும் சிற்பங்களைப் போலவோ இருக்கின்றன. மூக்கும் முழியுமாகச் செதுக்கப்பட்டிருக்கும் பொம்மைகள் இருக்கும்பொழுது திரை வேண்டிய அவசியம் இல்லை. 'மரப்பாச்சி' போல் உள்ள பொம்மைகளுக்கு உடை உடுத்தி அழகு செய்கின்றனர். அந்தந்த பாத்திரங்களுக்கு ஏற்ற மாதிரி வேஷம் கட்டுகிறார்கள். இம்மாதிரியான பாவைக் கூத்தை ஐரோப்பாவில் உள்ள பொம்மலாட்டத்தோடு ஒப்பிடலாம். இது பொம்மலாட்டத்தின்கீழ் வந்தாலும் இதற்குத் திரையும் திரைக்குப் பின்னே விளக்கும் தேவை இல்லை. பட்டப் பகலிலேயே காண்பிக்கலாம். இப்பொழுது நவநாகரிக ஆட்டம் ஒன்று தோன்றியுள்ளது. அதில் பாவைகளுக்குப் பதில் ஆட்களே நடிக்கிறார்கள். இந்தோனேஷ்ய நாட்டியக் கலையின் உதயம் என்றே இதைச் சொல்லலாம்.

பாவைக்கூத்தின் வழியாகத்தான் இந்தோனேஷ்ய நாடகக்

கலை அபிவிருத்தி யடைந்து வருகிறது என்று சொல்லலாம்.

கதைப்போக்கு, சங்கீதம், பாட்டு முதலியன ஒருங்கே சுருதி லயப்பட்டு இன்பங் கூட்டுவதாக அமைக்கப்பட்டிருக்கின்றன. இதிகாச வர்ணனைகள் கொண்ட கதைகளில் இடை இடையே தத்துவ விசாரங்களும், தத்துவார்த்த சம்பாஷணைகளும் இடம்பெற்றிருக்கின்றன. யுத்தக் காட்சிகளும் ஹாஸ்யரசமான சம்பவங்களும் பக்கவாத்திய அமைப்பினால் நன்றாக எடுத்துக் காட்டப் பெறுகின்றன. இந்த நாடகக் காட்சிகளைக் காண மக்கள் அனைவரும் திரண்டு வருகின்றனர். நாடகத்தில் கதாநாயகர்கள் விரோதிகளைப் போரில் வெற்றி கொள்ளுவதையும் அவர்களுடைய வெற்றியை அங்கீகரித்து தேவர்கள் பூமாரி பெய்வதையும் கண்டு ஆனந்திக்கிறார்கள்.

இந்தப் பாவைக் கூத்தின் பிறப்பிடம் இந்தியாதான் என்று கருதுகிறார்கள். ஆதிகால இந்தோனேஷ்யர்கள் இந்தியாவைத்தான் தங்களுடைய தாய்நாடாகக் கருதி வந்தார்கள். இந்திய இதிகாச, புராணங்களின் கதாநாயகர்களைத் தங்களுடைய மூதாதையர்களாகக் கருதினார்கள். இந்தியாவுடன் அவர்கள் கொண்டிருந்த தொடர்பு அறுபட்டுப் போனபிறகும் கூட இந்திய நாகரிகம், இந்தியப் பண்பாடு, கலை, சித்திரம், கோயில், சித்திரங்கள் முதலியன இந்தோனேஷ்ய நாகரிகத்தில் ஊறிப் போய்விட்டன.

பாவைக் கூத்துகளுக்குக் கதைகள், மகாபாரதம், இராமயணம் போன்ற இந்திய நூல்களிலிருந்து எடுக்கப்பட்டாலுமே அந்தக் கதைகளுக்கு இந்தோனேஷ்ய சுற்றுச் சார்பின் வர்ணம் தீட்டி, பார்க்கிறவர்கள் அம்மாதிரி கதைகள் ஆதியில் அங்கேதான் உண்மையில் நிகழ்ந்தனவோ என்று சந்தேகிக்கும்படி செய்திருக்கிறார்கள். இந்தோனேஷ்யர்கள் கற்பனா சக்தியின் மூலம் பிறநாட்டுப் பண்பாட்டையும் கலைகளையும் தங்களுடையதாக்கிக் கொள்ளும் திறமை பெற்றவர்கள் என்பதைத் துலாம்பரப் படுத்தியுள்ளார்கள்.

ஆனால் திரைக்கு அப்பால் காட்டப்படும் நிழற் பாவைக் கூத்துகள் இந்தோனேஷ்யாவுக்கே உரியது என்று சொல்லலாம். இந்தியா, சீனா போன்ற நாடுகளில் பாவைக் கூத்துகள் வழக்கில் இருந்தபோதிலும், இந்தோனேஷ்யக் கூத்துகள் தனித்தன்மை பெற்றவையாகத்தான் தோன்றுகின்றன. பக்க வாத்தியங்களும், காட்சிகளை விளக்கும் பாடல்களும் இந்தோனேஷ்யப்

### ஏற்ற பரிசு

சில மாதங்களுக்கு முன் டென்மார்க்கின் தலைநகரான கோபன்ஹேகனில் ஒரு டிராம் வண்டியில் ஒரு குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தைக்கு பீட்டர் லார்ஸன் என்று பெயர். டிராம்வே கம்பெனியார் அந்தக் குழந்தைக்கு ஒரு பரிசு அனுப்பியிருக்கிறார்கள். என்ன பரிசு தெரியுமா? ஒரு டிராம் டிக்கட்தான். அந்த டிக்கட்டைக் கொண்டு ஆயுள் பூராவும் டிராம் வண்டியில் காசு கொடுக்காமல் இனமாகப் பிரயாணம் செய்யலாம்!

## உ வருமானத்தைக் கொண்டு நிர்மாணிக்கப்பட்ட நகரங்கள்.

டீ-வருஷமொன்றுக்கு 54 கோடி பவுண்டு-சர்க்கார் கஜானவுக்கு வருஷமொன்றுக்கு ரூ. 13 கோடி யளிக்கிறது. உங்கள் டீ அளிக்கும் வருமானத்தைக்கொண்டு அநேக நிர்மாண திட்டங்களுக்கு பண உதவி செய்யலாம். உதாரணமாக தாமோதர் பள்ளத்தாக்கு திட்டத்தை 10 வருஷங்களில் பூர்த்தி செய்ய ரூ. 55 கோடி செலவாகுமென்று கணக்கிட்டிருக்கிறார்கள். அதே பத்து வருஷங்களில் டீயிலிருந்து மட்டும் சர்க்காருக்குக் கிடைக்கும் வருமானம் அத்திட்டத்திற்கான செலவைப் போல இரண்டத்தனைக்கு மேலாகும். ஆகவே டீ உங்களகத்தில் சுகமும் சந்தோஷமுமளிக்கும் பானம் மட்டுமல்ல, நாட்டின் ஐசுவரியத்தை விருத்திசெய்யும் ஓர் சாதனமுமாகும்.

டீயைப்பற்றிய சில உண்மை விவரங்கள்,

- 1945-47ம் வருஷங்களில் மொது டீ ஏற்றுமதி ரூ. 120 கோடி பெறுமானமுள்ள அயல்நாட்டு நாணயச் செலாவணி யளித்திருக்கிறது.
- இத்தொழிலில் 10லக்ஷம் ஆண்களும்பெண்களும் ஈடுபட்டிருக்கின்றனர்.
- உள்நாட்டில் அருந்தும் டீயிலிருந்து பவுண்டு ஒன்றுக்கு 3 அணு வரியும் ஏற்றுமதி செய்யப்படும் டீயிலிருந்து பவுண்டு ஒன்றுக்கு 4 அணு வரியும் சர்க்காருக்கு கிடைக்கிறது. நாட்டு கஜானவுக்கு வருஷ மொன்றுக்கு கிட்டத்தட்ட ரூ. 13 கோடி வரும்படி கிடைக்கிறது.
- மேலும் டீ கம்பெனிகள் செலுத்தும் வருமான வரி மூலமாக சர்க்காருக்கு கணிசமான தொகை கிடைக்கிறது.



# டீ

ஒரு மகத்தான இந்திய கைத்தொழில்

இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது.

# புத்தகங்கள்

## வ. ரா. நூல்கள்

| | ரூ அ |
|---|---|
| சுந்தரி (நாவல்) | 5-0 |
| வாழ்க்கைச் சித்திரம் | 2-8 |
| கலையும் கலைவளர்ச்சியும் | 2-0 |
| புண்ணியமும் பலவீனமும் | 0-12 |
| வாழ்க்கை விநோதங்கள் | 2-0 |
| மகாகவி பாரதியார் | (அச்சில்) |

---

## ராஜாஜி நூல்கள்

| | |
|---|---|
| வியாசர் விருந்து | 10-0 |
| அபேதவாதம் | 1-0 |
| கட்டுரைகள் | 5-0 |
| அற நூல்கள் | 5-0 |
| உலக நிலை | 2-0 |
| ஸோக்ரதர் | 1-8 |
| தாவரங்களின் இல்லறம் | 2-0 |
| சிசு பாலனம் | 0-8 |

தபால் செலவு தனி

**சக்தி காரியாலயம்**
சென்னை 14


**ஆஸ்த்மாவை குணப்படுத்துவது**



**ஸ்வாஸஹாரி தான்.**

ஐந்து நிமிஷத்திலோ, ஒரே இராவிலோ ஆஸ்த்மாவை குணப்படுத்தி விடுமென்று விளம்பரம் செய்யும் மருந்துகளை உட்கொண்டால் நோய் அதிகரிக்குமேயொழிய குறையாது. "புரோஹித் ஸ்வாஸஹாரி" ஒன்றுதான் உட்கொண்ட ஆரம்பத்திலிருந்தே கபத்தைக் கரைத்து அஜீரணத்தை குணப்படுத்தி நுரை ஈரல்களை பலப்படுத்தி ஆஸ்த்மாவினின்றும் பூரண சௌக்கியத்தை நிச்சயமாக அளிக்கிறது. ரூ 3-8, ரூ 6-, ரூ 10- பாக்கிங்களில் எல்லா இடங்களிலும் கிடைக்கும். அல்லது "டாக்டர் புரோஹித் பார்மஸி" கோலாப்பூர் விலாசத்திற்கெழுதி பெற்றுக்கொள்ளலாம்.



ஆஸ்த்மா, சுவாஸாசய நோய்களுக்கு டாக்டர்கள் விதிப்பது

**புரோஹித ஸ்வாஸஹாரி**

DR. PUROHIT PHARMACY, KOLHAPUR

பண்பாட்டையே நினைவுறுத்துகின்றன.

பழங்கால வீரர்களையும், சரித்திர புருஷர்களையும் ஞாபகப்படுத்திக் கொள்ளுவதற்கு ஏற்ற சாதனமாகத்தான் பாவைக்கூத்தை இந்தோனேஷ்யர்கள் மேற்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய வீரர்கள் புரியும் தீரச் செயல்களையும், அவர்கள் நாட்டுக்கும், அரசனுக்கும் பணிபுரிந்து மக்களின் நன்மதிப்பைப் பெறும் காட்சிகளையும் கண்டு திருப்தி அடைகிறார்கள்.

வயாங் கூத்தில் தோல் பாவைகளால் சரித்திரம் நடித்துக் காட்டப்படுகிறது என்றே சொல்ல வேண்டும். சரித்திர புருஷர்களுடன், அமானுஷ்ய உருவங்களும், பௌராணிக புருஷர்களும் தோன்றி நடிக்கும்படி செய்கிறார்கள். சரித்திரத்தையும் மதத்தையும் கொண்ட ஒரு அபூர்வக் கலைதான் வயாங் என்னும் பொம்மலாட்டக் கலை.

வயாங் பழைய நாகரிகத்தில் தோன்றிய கலை. மூதாதையர்களைப் போற்றிப் புகழும் பண்புடையவர்கள் இந்தோனேஷ்யர்கள் என்பது அவர்கள் வயாங் பாவைக்கூத்தைப் பல நூற்றாண்டுகளாகப் போற்றி வந்திருப்பதிலிருந்தே தெரிகிறது.

✲

## சீதோஷ்ணமும் ஒலியும்

குளிர்ந்த நேரத்தில் சப்தம் வெகு தூரத்திலிருப்பவர்களுக்கும் கூட கேட்கிறது. காலை நேரத்தில் ஒரு கிராமத்தில் சேவல் கூவுவது இரண்டு மைல் தூரத்திற்கப்பால் உள்ள மற்றொரு கிராமத்தில் கேட்பது நமக்குத் தெரியும். இது சம்பந்தமான ஒரு அதிசய உதாரணத்தை 'வீடர்' என்ற பத்திரிகையில் "இரா" என்பவர் கூறுகிறார் :

"பனி படர்ந்த குளிர்ந்த பிரதேசமாகிய ஆர்க்டிக் பிரதேசத்தில் மனிதக் குரல் இருபது மைல் தூரம் வரைக்கும் கேட்கிறது. ஆனால் புழுதி பறக்கும் உஷ்ணப் பிரதேசமாகிய சஹாரா பாலைவனத்தில ஒருவர் பேசுவது 100 கஜ தூரத்துக்குள்ளாக இருக்கும் ஒருவருக்குத்தான் கேட்கும்."

இது நிற்க.

ஒரு கவிப் பாடலைப் பாருங்கள். இங்கே சீதோஷ்ண பேதங்கள் எதுவும் செய்ய முடியாது.

பெண்ணொருத்தி பேசில் பெரும்பூமி தானதிரும்
பெண்ணிருவர் பேசில் விழும் விண் மீன்கள் —பெண் மூவர்
பேசிடிலோ வானம் பிளந்து விடும் ; பெண் நால்வர்
பேசிடில் என்னாகுமோ பின் ?

## 16 அங்குல சுருட்டு

சமீபத்தில் வின்ஸ்டன் சர்ச்சிலுக்கு பரிசாக ஒரு பதினாறு அங்குல சுருட்டு வந்து சேர்ந்தது. உலகத்திலேயே இதுதான் பெரிய சுருட்டு. இதை அனுப்பியவர் பிரிஸ்டல் நகரத்தைச் சேர்ந்த ஒருவர். சுருட்டு யுத்த சமயத்தில, பெல்ஜியத்தில தயார் செய்யப்பட்டது. இந்தச் சுருட்டை புகைத்து முடிக்க மொத்தம் ஆறு மணி நேரம் பிடிக்கும்.

—குளோப்

**ஆணும் பெண்ணும் தனித்து வாழமுடியுமா? இயற்கை நியதியை முறிக்க முடியுமா? அப்படி முறிக்க முயன்ற பரேஷ் என்ன கதியானன்!......இந்த இந்திக் கதையை மொழி பெயர்த்துத் தருபவர் ஸ்ரீ எ. அஜீஸ்கான்.**

# நிலைத்த உண்மை

**சசிநந்தன் ஸின்ஹா**

டில்லி எக்ஸ்பிரஸ் நிறைந்திருந்தது. ஒரு ஆள் ஏறக்கூட முடியாத கூட்டம். எப்படியோ ஒரு பெட்டியில் ஏறிவிட்டேன். பெட்டியைக் காலடியில் வைத்துக் கொண்டு பலகையில் சாய்ந்து நின்றேன். ரயில் புறப்பட்டது. எரிந்து கொண்டிருந்த விளக்குகளெல்லாம் அணைந்து விட்டன. ரயில்வே நிர்வாகத்தின் திறமையைத் திட்டினர் பலர். சிகரெட்டை உறிஞ்சிப் புகையை அந்தப் பெட்டிக்குள் பரவ விட்டேன். அருகிலிருந்தவர் 'சற்றுப்பார்த்து' என்று எச்சரித்தார். அவருக்குப் புகைப் பழக்கமில்லை போலிருக்கிறது!

நல்ல பனி பெய்யும் நள்ளிரவு தான். இருந்துமென்ன? பெட்டிக்குள் புழுக்கம் தாங்க முடியவில்லை.

“நான் இடம் தருகிறேன், இங்கே வாருங்கள்” என்ற சப்தம் கேட்டது. அந்த எதிர்ப் பெஞ்சில் நடுத்தர வயதுள்ளவரும் அவர் மகளும் தூங்குவதை ஏறும்போதே பார்த்தேன். இருட்டில் தட்டுத் தடுமாறி அவர்கள் பக்கமாக நகர்ந்தேன். யாருடைய காலையோ மிதித்துவிட்ட உணர்ச்சி யுண்டாயிற்று. அதைத் தொடர்ந்து 'உஸ்' என்ற மெல்லிய சப்தமும் கேட்டது. அது அந்தப் பெண்ணின் குரல் என்பதை அறிந்ததும் நான் தடுமாறிவிட்டேன். அவர் 'டார்ச்' விளக்கை யடித்து விஷயத்தைப் புரிந்துகொண்டார். அவள் காலில் சிறிது இரத்தம் கசிந்தது. 'மன்னியுங்கள்' என்று மன வேதனையுடன் கேட்டுக்கொண்டேன்.

அவர் நல்ல அறிவாளி. “இருட்டில் தெரியாமல் மிதித்ததற்கு மன்னிப்பெதற்கு?” என்றார். பெண்ணை அருகிலழைத்துக்கொண்டு “இப்படி உட்காருங்கள்” என்றார் அவர்.

அவளருகில் உட்கார எனக்கு வெட்கமாக இருந்தது. சிகரெட்டை உறிஞ்சும்போது உண்டாகும் கனல் ஒளியில் அவளை ஒருதடவை பார்த்தேன். உவமையற்ற அழகு ராணியாக அவள் உட்கார்ந்திருந்தாள். “தூங்கி விழும் அழகிய பெண்ணின் பாதி மூடிய கண்கள் பார்க்கத்தக்கவை” என்ற ஹார்டியின் வாக்கியம் நினைவு வந்தது, அவளது அழகில் மயங்கி என்னையே மறந்தேன்.

வண்டி ஓடிக்கொண்டிருந்தது. என் தடுமாற்ற நிலையை அவள் புரிந்து கொண்டாள் போலிருக்கிறது. தந்தையிருந்த இடத்தில் அவளும் அவளிருந்த இடத்தில் தந்தையுமாக இடம் மாறிக்கொண்டனர்.

நான் அதிகமாகப் பேசும் வழக்கமுள்ளவனல்ல. கிழவர்களுக்கும் யுவதிகளுக்கும் இது பிடிக்காதென்பது எனக்குத் தெரியும். என் நண்பன சுரேஷ் ஹாஸ்டல் அறைச் சுவரில் "ஆண்களைப் பலஹீனப் படுத்தும் கருவி பெண்தான்" என்று எழுதி வைத்திருந்தான். எங்கள் வாழ்க்கையைப் பிறர் போற்றும் வகையில் அமைக்க உறுதி கொண்டிருந்தோம். "பெருமை மிக்க ஆண்களின் வாழ்வு பெண்மையென்ற மோக வலையில் சிக்கிப் பாழ்படக்கூடாது" என்று அவன் அடிக்கடி சொல்லிக் கொள்ளுவான். மனோ வாக்கு காயங்களால் அதை நான் ஆமோதிப்பேன்.

"நீங்கள் என்ன செய்கிறீர்கள்?" என்று ஆரம்பித்தார் அந்தப் பிரயாணி.

"நான் தத்துவ ஆராய்ச்சி மாணவன்."

"என்ன தத்துவம்?"

"மனோதத்துவம். ஆண்கள் தங்கள் காரியங்களில் பெண்களையும் சம்பந்தப்படுத்தி ஏன் அல்லலுறுகிறார்களென்பதை ஆராய்ந்து கொண்டிருக்கிறேன்" என்றா ஆங்கிலத்தில் சொன்னேன். இதைக் கேட்ட அவள் குறுநகை புரிந்தாள். இருட்டில் அந்த முத்துப் பற்கள் ஒளிவீசின!

"நீங்கள் பெண்களின் விரோதி போலிருக்கிறது!"

"அப்படியல்ல, ஆண்களின் பலஹீனத்துக்கு அவர்கள்தான் காரணம் என்று நினைப்பவன். நம் காரியங்களில் அவர்கள் தலையிடவில்லையானால் ஆணினம் நட்சத்திரத்தையும் பறித்து வரும் புதுமையைக் காணலாம்."

"விஷயம் ரசிக்கத்தக்கதாகவே இருக்கிறது. இந்தக் கொள்கையை உங்கள் வாழ்வில் கடைப்பிடிக்க முடியுமா? இதை என்னால் நம்ப முடியவில்லை" என்று சொல்லிக்கொண்டே சிரித்தார் அவர்.

அந்தப் பெண் தந்தையோடு சேர்ந்து சிரித்தாள்; இது என் மதிப்புக்கு உலை வைப்பதாக இருந்தது. இதை என்னால் சகிக்க முடியவில்லை.

"நான் லட்சியவாதி. என்னைக் கவர்ந்துவிடும் அசாதாரண சக்தி எந்தப் பெண்ணிடம் என்னவாகத்தான், இருக்க முடியும்? இதை நான் என் வாழ்வில் நிரூபிப்பேன்" என்றேன்.

அவள் மேலும் சிரித்தாள். எனக்கு அது வேதனையைக் கொடுத்தது.

நண்பர் சிகரெட்டைப் பற்ற வைத்தார். "தீக்குச்சியின் வெளிச்சத்திலும் உங்கள் சிறந்த அழகு வெளிப்படுகிறது. சந்திரனின் மங்கிய இன்ப ஒளியில் எத்தகையவராகக் காணப்படுவீர்கள்! நான் சொல்வதற்காக என்னை மன்னியுங்கள்; நீங்கள் படித்த அறிவாளி, அழகுள்ளவர்; அதற்கு மேலாக ஆத்ம நம்பிக்கையும் சுயமரியாதையும் கொண்டிருக்கிறீர்கள்; இவ்வள

விருந்தும் ஏதாவதொரு பெண் உங்களை ஆகர்ஷித்து விடுவாள். அப்போது உங்கள் கொள்கை காற்றிலே பறந்துவிடும். இதில் சந்தேகமே இல்லை'' என்று சொல்லிச் சிரித்தார்.

அவர் வார்த்தை கோபத்தையும் கவலையையும் கொடுத்தது.

"மன்னியுங்கள். என்னையும் மறந்து உலக உண்மையை உங்களிடம் சொல்லிவிட்டேன்" என்றார் மறுபடியும்.

அவருடைய அடக்கமும் மன்னிப்புக் கோரும் தன்மையும் என்னை அலைக்கழிக்க "மன்னிப்பு வேண்டியதில்லையே" என்றேன்.

"நீங்கள் மிக நல்லவராகக் காணப்படுகிறீர்கள். நான் சொன்னவை கற்பனையோ அறியாமையோ அல்ல; அனுபவ பூர்வமானவை. கவலை கலந்த இனிமையால் தோன்றுவதுதான் வாழ்க்கை. சித்தாந்தங்களைப் படித்து லட்சிய வாழ்வின் கனவு காண்பவர்களுக்கு அது வீணாகிறது. நிம்மதியான மனமகிழ்ச்சி, மனைவியோடுகூடிய இல்லத்தில்தான் நிலை நிற்கிறது. உங்கள் வாழ்வில் இன்ப ஊற்றுத் தோன்றும் சந்தர்ப்பம் வந்தால் அதை நாசப்படுத்திக் கொள்ள வேண்டாம். சித்தாந்திகள் தம் சிறு தவறால் வாழ் நாளெல்லாம் வருந்துவார்களென்பதை நினைவு வைத்துக்கொள்ளுங்கள்."

போரிலே ஒரு முறை தோல்வியடைந்த வீரன் தன் அனுபவத்தை நண்பர்களுக்குக் கூறுவதுபோலிருந்தது நண்பரின் உபதேசம்.

ரயிலின் நெருக்கமும் மூட்டைப் பூச்சிக் கடியும் தொந்தரவு கொடுத்துக்கொண்டிருந்தன. ரேகா பிடிவாதமாக என்னைக் கூப்பிடவில்லை யானால் இன்று எனக்கு இந்தக் கஷ்டமில்லையே என்று நினைத்துக் கொண்டே சாய்ந்து தூங்கிக் கொண்டிருந்தேன்.

ரயில் அவிகாரைக் கடந்துவிட்டது. எழுந்து உட்கார்ந்தேன். நண்பரும் அவர் மகளும் தூங்கிக் கொண்டிருந்தனர். சூரிய கிரணங்கள் பாவி பயிர் செடி கொடிகளில் பசுமையைப் பரப்பிக் கொண்டிருந்தன. மந்த ஒளியில் அவளது அழகு என்னைப் பிரமிக்கச் செய்தது. எத்தனையோ அழகிகளின் அங்கங்களையும் எழில் நலத்தையும் கூர்ந்து கவனித்திருக்கிறேன். இது போன்ற அழகுக் களஞ்சியத்தை நான் பார்த்ததே இல்லை. செந்தாமரை இதழ்போன்ற இமைகள் சற்று ஆடின. அவற்றைப் பார்த்துக்கொண்டிருக்கும்போதே அவள் எழுந்து உட்கார்ந்தாள்.

சோம்பலை முறித்துக்கொண்ட அவள் என்னைக் கவனித்தாள். என் மனதில் வெறுப்புணர்ச்சியுண்டாயிற்று. நான் காணும் அழகுப் பரீட்சை எனக்குத் துணை செய்தும் எனது கொள்கையும் ஆராய்ச்சியும் வீண் எனத் தோன்றின! ஏனோ அடிக்கடி பெருமூச்செறிந்தேன். கைகள் சற்றே பதறின.

ரயில் தன்போக்கில் ஓடிக்கொண்டிருந்தது.

"கண்ணிலே கரி விழுந்து விட்டது" என்றாள் அவள்.

அவள் தந்தையும் மற்ற பிரயாணிகளும் தூங்கிக்கொண்டிருந்தனர். ஒரு கண்ணை மூடி மற்றொன்றால் என்னைப் பார்த்தாள்.

நான் சிரித்தேன். அது அவளுக்கு நெருப்பாக இருந்தது.

"மேல் இமையைக் கீழ் இமை மேல் தூக்கிவிடுங்கள்; கரி விழுந்து விடும்" என்றேன்.

அவளால் அதைச் செய்யமுடியவில்லை. நான் அவள் இமையைப் பிடித்து மெதுவாக ஊதிக் கரியை எடுத்து விட்டேன். இருவரும் நாணித் தலை குனிந்து கொண்டோம்!

வண்டி டில்லியை அடைந்து விட்டது. நான் இறங்கத்தயாரானேன். அவள் தந்தையும் எழுந்து உட்கார்ந்து,

"அமலா! ஏன் என்னை நீ எழுப்பவில்லை?" என்றார்.

நான் பிளாட் பாரத்தில் இறங்கி நடந்தேன். அந்தப் பெயர் ஏனோ என் காதுகளில் மறுபடியும் மறுபடியும் ஒலித்துக் கொண்டிருந்தது.

## 2

குழந்தைஅகில்நாத்தை இடுப்பிலே வைத்துக் கொண்டு எனக்காக பிளாட்பாரத்தில் காத்திருந்தாள் ரேகா. எனக்கு அறிமுகமில்லாத ஒரு யுவதி அவளுடன் நின்றிருந்தாள். என்னை மகிழ்ச்சியுடன் வரவேற்ற அவள் "அண்ணா இவள் என் தோழி அலகா" என்று அறிமுகப் படுத்திவைத்தாள்.

எனது பார்வையின் ஒரு வீச்சிலேயே அபூர்வ அழகு படைத்த நாகரிக நாரீமணி அவள் என்பது விளங்கிவிட்டது. ரயிலில் அமலா; பிளாட்பாரத்தில் அலகா! இருவர் கண்களிலும் ஒருவித கவர்ச்சி என்னைக் கவர்ந்துகொள்ளத் துடிப்பதாக உணர்ந்தேன். என் உள்ளம் உணர்ந்தது. பெண்களின் கண்கள் ஆண்களின் உள்ளத்தைக் கவர்ந்து காரியத்தைக்கெடுக்காமலிருக்கவே, எச்சரிக்கையாக நம் முன்னோர்கள்,பெண்கள் முக்காடிட்டுக்கொள்ளவேண்டுமென்ற வழக்கத்தை ஏற்படுத்தினார்கள் போலிருக்கிறது!

"என்ன அண்ணா! பெரிய யோசனை?" என்று ரேகா சிரித்துக் கொண்டே கேட்டாள்.

மாலையில் ரேகாவின் கணவன் கமல் பாபுவின் பிடிவாதத்தால் அலகா உள்ளிட்ட சில பெண்களெதிரில் நான் வீணை வாசித்தேன். எல்லோரும் புகழ்ந்தார்கள். அலகா ஒன்றுமே சொல்லவில்லை. என் வாசிப்பு அவளுக்குப் பிடிக்கவில்லையா அல்லது பெரிய கர்வியா என்று எனக்கு விளங்கவில்லை.

நான் அறைக்கு வந்தபோது அங்கே அலகா காத்திருந்தாள். என்னைப் பார்த்ததும் "நீங்கள் வெகு நன்றாக வீணை வாசிக்கிறீர்கள்" என்றாள்.

"அப்படி யொன்றுமில்லையே" என்று வேறு பக்கம் திரும்பிக் கொண்டு சொன்னேன். வெகு நேரத்திற்குப்பின் திரும்பிப் பார்த்தேன். அலகாவின் பூப்போன்ற மெல்லிய செவ்விதழ்கள் முறுவலித்தன. இதுபோன்ற சமயங்களில் ஏன் உள்ளம் தத்தளிக்கிறது!

அடுத்த நாள் காலை சிற்றுண்டி சாப்பிட்டுக் கொண்டிருந்தேன். ரேகா சிதாரைக் கொண்டுவந்து அருகில் வைத்தாள்.

"என்ன ரேகா! நீ வாசிப்பாய் போலிருக்கிறது!" என்றேன்.

என்னைவிட அலகா நன்றாக வாசிக்கிறாள். அவள்தான் இப்போது வாசிக்கப்போகிறாள்.

அழகும் முறுவலும் குலுங்கி ஒளிவீச அலகா அங்கே வந்தாள். சிதார் வாசிக்க ரேகா வேண்டிக் கொண்டதை முதலில் அவள் மறுத்தாள். பின்பு சிதாரை மீட்டு தனது கோகிலக் குரலை இணைத்துப் பொழிந்து தள்ளி விட்டாள். வட்டமிட்டெழுந்த இன்ப அலையில் நான் மூழ்கினேன். அவளது சங்கீத ஞானம், சுர சுத்தம், சாதகமேன்மை—இவற்றிலே மயங்கி அலகாவின் அங்க அசைவு களில் உள்ளத்தைக் கொள்ளை கொடுத்துத் தேன்குடித்த நரி போல பல்லைக்காட்டிக் கொண் டிருந்தேன். "பெண்ணின் மோக வலையில் சிக்கிப் பாழ்படாதே" என்ற சுரேஷின் எச்சரிக்கை நினைவு வந்தது. உடனே எழுந்து குளிக்கும் அறைக்குச் சென்று விட்டேன்.

குழாய்த் தண்ணீர் என் உடலின் உஷ்ணத்தைக் குறைக்க மடமடவென்று கொட்டிக்கொண் டிருந்தது. உள்ளே அலகா, இனயத்கானின் கஜலை பைரவி ராகத்தில் இழைத்துக்கொண்டிருந்தாள். குரலும் சிதாரும் இணைந்து இன்ப நாதத்தை எழுப்பின. அவளது நீண்ட மெல்லியவிரல்கள் என்னுடன் பேசுவதாகஉணர்ந்தேன்.

உடம்பில் வெப்பம் மிகுந்தது!

கமல், "ஐயா பெரியவரே! இது பனிகாலம்; அதிக நேரம் நனையவேண்டாம்" என்று எச்சரித்தான். உடம்பைத் துடைத்துக் கொண்டு அறைக்குப்போய் உடையை மாற்றி பத்திரிகை படிக்க சாய்வு நாற்காலியில் படுத்தேன். அடுத்த அறையில் யாரோ பேசுவது கேட்டது. மெதுவாகக் கதவருகில் போய் நின்று பேச்சைக் கேட்கத் தொடங்கினேன்.

ரேகா, "அலகா! பார்த்தாயா, பரேஷ் ஒரு விசித்திரப் பிறவி தானே? பெண்களைப் பார்த்து அவர் ஏன் இப்படி பயப்படுகிறார் என்பது தெரியவில்லை. குழந்தைப் பருவம் தொட்டு நான் அவருடன் சேர்ந்து விளையாடி ஒன்றாக உண்டு உடுத்து மகிழ்ந்திருக் கிறேன். எங்கள் இருவருக்கும் சொந்த வீடு எது என்பதுகூடத் தெரியாமல் எங்கள் வீட்டிலும் அவர் வீட்டிலுமாக வளர்ந்தோம். நான் பருவமடைந்தபோது என்னைப் பரேஷுக்குக் கொடுக்க என் தந்தை விரும்பினார்; அதை அவர் பெற்றோர் வரவேற்றனர். ஆனால் பரேஷ் வெறுத்தொதுக்கி விட்டார்! நான் மகிழ்வதைக் கண்டு குதூகலிக்கும் அவர் அப்போது நான் வருந்தியதைக் கண்டு கலங்காத கல்நெஞ்சராகி விட்டார்."

நான் கதவிடுக்கில் இருவரையும் பார்த்தேன். அலகா பேசாது நின்றிருந்தாள். ரேகாவின் கண்ணங்கள் சிவந்து வெட்கத்தை வெளிப்படுத்தின.

"அலகா! நீ பரேஷை மணந்து கொண்டால், எல்லோருக்கும் நன்மையுண்டு." மேலே ரேகாவால் பேசமுடியவில்லை. சிறிது கழித்து "பரேஷின் பிடிவாத வாழ்வும் ஒரு வாழ்வா? மாமி அழுதழுது ஓய்ந்துவிட்டாள். இப்போது அவளைப் பார்க்கவே சகிக்கவில்லை, பாவம்!" என்றாள்.

அலகா ஸ்தம்பித்து நின்றிருந்தாள்.

என்றால் ஒதுக்கப்பட்ட ஒருத்தி என்னிடம் எவ்வளவு அன்பு கொண்டிருக்கிறாள் என்பது என்னை மயிர்க்கூச்செறியச் செய்தது. நான் செய்த தவறுக்காக அவளிடம் போய் மன்னிப்புக் கேட்கவும் துணிவுண்டாயிற்று. ஆனால், கால்கள் அங்கிருந்து நகரச் சம்மதிக்கவில்லை!

"கிடைக்காத ஒன்றை எப்படியும் பெற்றுவிடுவது என்று பயங்கரத் தியாகத்திற்கும் நாம் தயாராகி விடுகிறோம். ஒருவனிடம் நமக்கு அன்புண்டாகி விட்டால் அவனுக்காக எவ்வளவு இன்னல்களைப் பொறுக்கிறோம்! இது தான் பெண்களுக்கிருக்கும் பலஹீனம்" என்றாள் ரேகா.

"ஆம் ரேகா! அதுதான் நம் துக்கங்களுக்குத் தூண்டுகோல். நம்மால் அன்பு செலுத்தாமலிருக்க முடிவதில்லை. ஆலையின் புகைப் போக்கிபோல வெளிக்கு நாம் சாந்தியாக இருந்தாலும் உள்ளம் நம் அன்பனுக்காக அலைமோதுகிறது. அவன் நம்மை நேசிக்கிறானா இல்லையா என்பதைக்கூட நினைப்பதில்லை. 'பாத்திர மறிந்து பிச்சையிடு' என்பதையும் மறந்து கெட்டொழிகிறோம்."

அவர்களது பேச்சு என் மன ஆழத்தில் பெரிய வடுவையுண்டாக்கி விட்டது. அவர்களிடம் மன்னிப்புக் கேட்க இரண்டடிகூட நகர்ந்துவிட்டேன். "ஆண்களைப் பலஹீனப் படுத்தும் கருவி பெண் தான்" என்ற சுரேஷின் வாக்கியம் எதிரே நின்றது. பேசாது படுக்கையில் விழுந்துவிட்டேன்.

## 3

மூன்றாம் நாள் குதுப்மினாரின் மீது நின்று இயற்கைக் காட்சிகளைக் காணப் போட்டியிட்டு ஏறிக்கொண்டிருந்தோம். முதலில் நானும் அடுத்தபடி ரேகாவும் பின்பு அலகாவும் கடைசியில் கமல் பாபுவுமிருந்தோம்.

கமல், "பரேஷ்! நொண்டி குதுப்தீன் தன் உயர்ந்த லட்சியத்தின் சின்னமாக இந்த மினாராவைக் கட்டி முடிக்கச் செய்த நிகழ்ச்சி என்ன?" என்றான். இது என்னைக் கேலி செய்வதற்காகக் கேட்ட கேள்வி. பெண்கள் இருவரும் என்னைப் பார்த்துச் சிரித்தனர்.

மூன்றாம் அடுக்கில் ஏறிக்கொண்டிருந்தேன். பெயர்ந்து நின்ற சுவரின் சிறு கல்லில் என் அங்கவஸ்திரத்தின் தலைப்பு மாட்டிக்கொண்டு என்னைப் பின்னால் இழுத்துவிட்டது. நிலை தவறி விழுந்த நான் நான்கைந்து படிகள் உருண்டுவிட்டேன். பின்னால் வந்த அலகா பயந்து என்னைத் தாவிப் பிடித்துக் கொண்டாள். நான் அவள் ஆலிங்கனத்தில் இருந்தேன். இருவர் உதடுகளும் ஒன்றையொன்று தீண்டிக்கொண்டிருந்தன. என் கண்களின் வழியாக இருதயத்தின் ஆழத்தை அளந்து கொண்டிருந்தாள் அலகா. ரேகாவும் கமலும் வேகமாக வந்து சேர்ந்தனர். கமல் என் கால்களைத் தடவி விட்டாள். "எங்காவது அடிபட்டுவிட்டதா?" என்று கவலையோடு கேட்டாள் ரேகா.

ஒரு வினாடியில் இதெல்லாம் நடந்துவிட்டது. காலில் சிறு காயம் பட்டிருந்தது. காலை வீசி நடக்க முடியவில்லை. கமலைப் பிடித்

துக்கொண்டு கீழே இறங்கினேன். எல்லோரும் வீட்டுக்குத் திரும்பினோம்.

அலகா மாலையில் வந்தாள். நான் நன்றி தெரிவித்துக் கொண்டேன். அவளால் பேசமுடியவில்லை. நெற்றியில் வியர்வைத்துளிகள் அரும்பின.

நான்கைந்து நாட்களுக்குப்பின் அலகா என்னுடன் பேசிக்கொண்டிருந்தாள். உள்ளேயிருந்து ரேகா கூப்பிட்டதால் அவள் அங்கு போனாள். அவளது பை அறையிலேயே இருந்தது. அதில் சிறு டைரியொன்றிருந்தது. அதை எடுத்துத் திறந்து பார்த்தேன். டிசம்பர் 11-ம் தேதி என்ற பக்கத்தில் "இன்று அவர் என் ஆலிங்கனத்திலிருந்தார். முகம் ஒன்றையொன்று தீண்டிக்கொண்டன. என்றும் இதுபோல என் ஆலிங்கனத்தில் அவர் இருந்தால்?......."

என்னால் மேற்கொண்டு படிக்க முடியவில்லை. கைகள் நடுங்கி கண் இருண்டு வந்தது. டைரியைப் பையில் வைத்துவிட்டேன்.

அன்று மாலை நான் ஊருக்குப் புறப்பட்டேன். கமலும் ரேகாவும் எவ்வளவோ தடுத்தனர்; மேலும் அங்கு தங்குவது என் விரதத்தைக் கெடுத்துவிடும் என்ற பயத்தில் அங்கிருந்து புறப்பட்டுவிட்டேன்.

எத்தனையோ அழைப்புக் கடிதங்கள் ரேகாவிடமிருந்து வந்தன. சாக்குப்போக்குக் கூறி ஒவ்வொன்றையும் தட்டிக் கழித்தேன். ஒரு நாள் என்னைத் தந்தை அழைத்து, "பரேஷ்! டில்லி முனிசிபாலிடி கல்வியதிகாரியின் மகளை உனக்கு மணம் முடிக்க கமலும் ரேகாவும் விரும்புகின்றனர். பெண் படித்த நல்ல அழகி என்று எழுதியிருக்கின்றனர்" என்றார்.

'கல்யாணம் வேண்டாம்' என்று மறுத்துவிட்டேன். தந்தை மனம் நொந்து வருந்தினார். துக்கம் தாங்காமல் தாயார் அழுதார். சுருக்கு விழுந்த கிழக் கன்னங்களில் உருண்டு விழும் கண்ணீரும் என் உறுதியைக் கரைக்கும் சக்திபெறவில்லை. குலவிளக்கை அணையாமல் காக்க இருக்கும் ஒரே பிள்ளை மணக்க மறுத்தால் பெற்றோர் சிரித்து மகிழ்ந்து அவனைப் போற்றவா செய்வார்கள்?

நாட்களோடின. அன்று பட்டமளிப்பு விழா. நான் "டாக்டர்" பட்டத்துடன் குதூகலமாக வீட்டையடைந்தேன். ரேகாவின் தந்தி எனக்காகக் காத்திருந்தது. "உடனே பவானி சானிடோரியத்திற்கு (ஆரோக்கிய ஸ்தலத்திற்கு) வரவும்" என்றிருந்தது அதில். உடனே புறப்பட்டுவிட்டேன்.

ரேகா சானிடோரியத்தின் வாசலில் எனக்காகக் காத்திருந்தாள். உடல் வெளுத்து மெலிந்திருந்த அவளைப் பார்த்து திடுக்கிட்டேன். பிரைவேட் வார்டுக்கு அவளைப் பின் தொடர்ந்து போனேன். அங்கு அலகா ஜீரண நிலையில் படுத்திருந்தாள். ஒன்றரை ஆண்டுக்கு முன்பார்த்த அழகி அலகாவை நினைவுபடுத்தினேன். என் மனதில் இருள் கப்பிக்கொண்டது.

அலகா இருகைகளையும் கூப்பி என்னை வரவேற்று "பரேஷ்பாபு! ஏன் இவ்வளவு சிரமம் எடுத்துக் கொண்டீர்கள்?" என்றாள்.

அந்த நிலையிலும் இனிமைகலந்த அவள் குரல் தேனை அள்ளிச்

# தமிழிலே அரிய நூல்கள்

○

கலையும் கலைவளர்ச்சியும்
வ. ரா. 2 0

வாழ்க்கைச் சித்திரம்
வ. ரா. 2 8

தமிழ் உணர்ச்சி
சுவாமி சுத்தாநந்த
பாரதியார் (சாதா) 3 0
(காலிகோ) 3 8

எழுத்தும் எழுத்தாளரும்
தி. ஜ. ர. 1 0

பகழ்ச் செல்வர்
தி. ஜ. ர. 3 0

சைனு எங்கே போகிறது?
ஆர். ராமனுதன் 1 12

மனிதன்
ஆர். ராமனுதன் 3 0

விஞ்ஞானமும் சமூகமும்
ப. கோதண்டராமன் 3 8

ரஸிகமணியின் கடிதங்கள்
பாஸ்கர் (சாதா) 5 0
(காலிகோ) 6 0

புரட்சித்தலைவர் ஜெயப்
பிரகாஷ் நாராயணன்
K. ராஜகோபாலன் 3 0

வாழப் பிறந்தோம்
சுப. நாராயணன் 3 0

கவிதையும் வாழ்க்கையும்
ஆ. முத்துசிவம் 3 0

1944 முதல் இன்றுவரை
ந. ராமரத்னம் 1 4

○

## கார்த்திகேயினி பிரசுரம்

இராமச்சந்திரபுரம்

P. O. திருச்சி ஜில்லா

---

## அடுத்த விளையாட்டுப் பந்தயத்தில்



# அம்ருதா

ரத்த சுத்தி திராவகம்.



கலக்கம், ஆயாசமில்லாமல் நன்கு விளையாடி வெற்றி பெறச் செய்கின்றது.

நரம்புகளை முறுக்கேற்றுகிறது

கேசரி குடீரம் லிட் மதராஸ்

ஒரிஸ்ஸா, நைஜாம் சமஸ்தானம், ஆந்திர ஜில்லாக்கள், தமிழ்நாட்டுக்கு ஏஜண்டுகள்

## சீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ்

பெர்ஹாம்பூர், செகந்திராபாத்
பெஜவாடா, மதுரை.


கற்பனைக்கோட்டையில்
அற்புத ஓவியம்!
மாடர்ன் தியேட்டர்ஸ்
ஆதித்தன் கனவு
டைரக்ஷன்
T.R.சுந்தரம்
B.A.B.Sc(LEEDS)
வெற்றிகரமாகச் சென்னையிலும் மற்ற நகரங்களிலும் நடைபெற்று வருகிறது.
பாட்டு:
பாபநாசம் சிவன்
சங்கீதம்:
ஜி.ராமநாதன்....
ஸினேரியோ:
எம்.எல்.டாண்டன்.,
நடனம்:
லலிதா - பத்மினி, தாரா சௌத்ரி
மாடர்ன் தியேட்டர்ஸ் லிமிடெட், சேலம் - மதுரை

சொரிந்தது போலொலித்தது. முன்பு வெட்கத்தால் சிவந்திருக்கும் கன்னங்கள் வெளுத்திருந்தன.

"அலகா!" என்று வாய் அழைத்தது. மேற்கொண்டு நாவெழவில்லை. திரும்பிப் பார்த்தேன். ரேகா அங்கில்லை. வேண்டுமென்றே அவள் போய் விட்டாள்!

"பரேஷ் பாபு, உங்களிடம் ஒரு விஷயத்தைச் சொல்லாமலிருக்க முடியவில்லை. என்னை மன்னியுங்கள். நீங்கள் அறியாமையில் ஆழ்ந்திருக்கும் குழந்தைபோலிருக்கிறீர்கள்." மேலே அவளால் பேச முடியவில்லை.

வெகு நாட்களாக மனத்திலே அழுந்திக்கிடந்த அந்த வாக்கியம் வெளிவந்து விட்டது! பிள்ளைப் பருவம் முதலே நான் ஆராய்ச்சிக்காரன். இதனால் யாரும் என்னை இப்படிக் குற்றம் சாட்டியதில்லை. அலகாவின் குற்றச்சாட்டுக்கு என்ன பதில் சொல்வதென்றே புரியவில்லை.

"இறைவன் படைப்பிலே தவிர்க்க முடியாது ஒன்றுபட்டு வாழ வேண்டிய இருகூறுதான் ஆண் பெண்கள். உலகம் இதை உணர்ந்து நடக்கிறது; நீங்கள் மட்டும் இந்த நித்திய உண்மைக்கு விலக்குப் பெற முயலுவது ஏனென்று புரியவில்லை! இதனால் தான் சிறுபிள்ளைத்தனம் படைத்தவர் என்று சொன்னேன்" என்று சொல்லி வாழ்வில் பெரிய வெற்றியைக் கண்டவள்போலச் சிரித்தாள்.

என்னால் பேச முடியவில்லை; நீ குற்றவாளி என்று எதுவோ என் உள்ளத்தில் இடித்துக் கூறியது!

"உங்களுக்கு அந்த நிகழ்ச்சி நினைவிருக்கிறதா? நீங்கள் வீணை வாசித்ததை நானைப் புகழவில்லை. என்னையே மறந்து உங்களின் கவர்ச்சியில் லயித்திருந்த என் னுள்ளிருந்து எதுவோ ஒன்று பேசிற்று. அதற்காக எவ்வளவு வெட்கப்பட்டீர்கள். நான் சிதார் வாசித்தபோது எவ்வளவு கலக்கமடைந்தீர்கள். இதையெல்லாம் சிறு பிள்ளைத் தனம் என்று சொல்லாம லிருக்க முடிகிறதா?"

அவளது சாமர்த்தியமான இந்தப் பேச்சைக் கண்டு அதிசயித்தேன். ஏனோ அவள் தலை குனிந்து கொண்டாள். அவளது வெளிறிய கன்னங்கள் வெட்கத்தால் சற்றே சிவந்தன.

"ஒரு லட்சியமென்ற நிழலைப் பிடிப்பதற்காக இயற்கையின் போக்கை மாற்ற முயலுகிறீர்கள். ஆசையை அடக்கலாம்; அதை உள்ளத்திலிருந்து ஓட்டவிட முடியாது. உள்ளத் துடிப்பை பலவந்தமாக அடக்கிய நீங்கள் லட்சியத்தில் வெற்றிபெற்றதாக நினைக்கிறீர்கள். அது கனவுதான். அது தற்புகழ்ச்சி தோய்ந்த துரோகமென்றுதான் கூறுவேன். மலையைப் புரட்ட நினைக்கும் சுண்டெலி போல நீங்கள் இயற்கையின் போக்கை மாற்ற முயலுகிறீர்கள்."

பல பெருமூச்சுகளுக்கும் சில விசிப்புகளுக்குமிடையே அவள் இதைக் கூறி முடித்தாள். அவள் கண்களில் நீர் வடிந்தது. என் உடம்பு வசமிழந்து ஏனோ 'வெடவெட'வென்று ஆடிற்று!

"உங்கள் வழிதவறிய கொள்கைக்காக இனி எந்தப் பெண்ணின் உயிருடனும் விளையாடாதீர்கள்.

மனதிலே அன்பு மலர்ந்தால் வெட்கப்படாமல் அதை வெளியிடுவது தோல்வியாகாது; அது வெற்றி யென்பதை உணருங்கள். இந்த உண்மையை நீங்கள் உணர்ந்துவிட்டால் பெண்மையை நீங்கள் வெறுத்த பழி பஸ்மீகரமாகி இன்பச் சோலையும் இனிய நீரூற்றும் உங்கள் வாழ்வில் நிரந்தரமாகும். 'புனித பிரேமையை வளர்ப்பது உங்கள் கடமை' என்று உங்களுக்கு நான்சாபமிடுகிறேன்."

கொந்தளித்து வரும் பெருமூச்சுக்களுக்கிடையே அவள் என்னை உற்றுப்பார்த்தாள். "பிரேமையை வளர்ப்பதும் உங்கள் கடமை." இது என் சாபம். "இனி நீங்கள் போகலாம்" என்று விடை கொடுத்தாள். அப்போது ரேகா என்னருகில் வந்து நின்றாள்.

அறையின் வெளியே காலெடுத்துவைத்த நான் திரும்பி இரு கைகளையும் கூப்பி அலகாவை வணங்கினேன். அவள் புன்முறுவல் பூத்தாள். என்னால் அதன் மயக்கத்தைத் தாங்க முடியவில்லை. காரில் உட்கார்ந்ததும் திரும்பிப் பார்த்தேன். அன்று நான் ரயிலில் சந்தித்த அமலா ரேகாவுடன் நின்றிருந்தாள்!

## 4

நான் திரும்பிவந்த மூன்றும் நாள் ரேகாவிடமிருந்து கடிதம் வந்தது: "நீங்கள் இங்கிருந்து, போன அன்றிரவு அலகா இறந்துவிட்டாள். அவள் கடைசியாக என்னிடம் சொன்னது உங்களுக்கிட்ட சாபத்தைப் பற்றித்தான்." இதைப் படித்த நான் த...மை பிடித்து உட்கார்ந்திருந்தேன்...

அலகா சீக்கிரம் இறந்து விடுவாள் என்று நான் எதிர் பார்த்தேன். இதன் காரணம் ஒன்றும் விளங்கவில்லை. எதிர் பார்த்தபடியே நடந்துவிட்டது. என்னையறியாமல் மனம் களைப்பும் சலிப்பும் அடைந்தது.

ரேகாவுக்கும் எனக்குமிடையே கடிதப் போக்கு வரவு நின்று இரண்டு ஆண்டுகளாகி விட்டன. நான் மகிழ்வுட னிருப்பதாகப் பிறர் நம்பினர். என்னையும் மீறி மனம் வருந்துவதை அவர்கள் எப்படி அறிவார்கள்? என் மணத்திற்காக எவ்வளவோ முயன்ற தந்தை தோல்வியடைந்து வாழ்வில் விருப்பு வெறுப்பற்ற யோகியைப்போலிருந்தார். மருமகளைப் பார்க்க வேண்டுமென்று சதா ஆசைப்பட்டுக்கொண்டிருந்த தாய் அவளைப் பார்க்காமலேயே சென்று மறைந்துவிட்டாள்!

எதிர்பாராதபடி கமல் பாபுவின் கடிதம் கிடைத்தது. "என் வீட்டில் கல்யாணம் நடக்கவிருக்கிறது. நீ இங்கு இருப்பது எனக்குப் பெரிய உதவியாக இருக்கும்" என்று எழுதியிருந்தான்.

முகூர்த்தத்திற்கு இன்னும் இரண்டு நாட்களிருந்தும் உடனே புறப்பட்டு டில்லியை யடைந்தேன்.

கமல் பங்களாவின் வெளி வராந்தாவில் உட்கார்ந்திருந்தான். நான் அவனை வணங்கினேன். அழகும் குறுநகையும் குதூகலிக்கும் அவன் முகம் வாடி யிருந்தது. கைகளை கூப்பி இயந்திரம்போல் என்னை வரவேற்றான். நகை மொழிகளை அள்ளிச் சொரியும் வாய் ஏனோ திறக்கவில்லை! உடல் வெளுத்து பலம் குன்றியிருந்த அவன் சிரம...

துடன் முகத்திலே குறுநகையைக் கொண்டுவந்தான்.

வாசலில் பந்தல், மணவறை வேலை சிறப்பாக நடந்துகொண்டிருந்தது. ரேகாவைக் காணாததால், 'ரேகா' என்று கூப்பிட்டேன். கமலின் கண்களில் கண்ணீர் பெருகிற்று. துக்கத்தைத் துச்சமாகத் தள்ளும் இயல்பு படைத்த கமல் பாபு அழுவது என் தலையில் இடி விழுந்தது போலிருந்தது.

“பரேஷ்! ரேகா இறந்து ஒன்றரை ஆண்டுகளாகின்றன” என்று தேம்பிக்கொண்டே சொன்னான்.

என்னால் ஒன்றுமே புரிந்துகொள்ள முடியவில்லை. கால்கள் தள்ளாடின. கீழே உட்கார்ந்துவிட்டேன்.

“தான் இறந்துவிட்டால் அதை உனக்குத் தெரிவிக்கக் கூடாது என்று ரேகா கேட்டுக்கொண்டாள். நான் அதற்குக் கட்டுப்பட்டுவிட்டேன். பரேஷ்! நீ மனிதத் தன்மை படைத்தவனல்ல; விலங்கினத்தைச் சேர்ந்தவன். ரேகாவின் சாம்பலைக் கரைத்த அன்று ஊருக்கு வந்து உன்னைச் சுட்டுக்கொல்ல நினைத்தேன். அலகாவும் ரேகாவும் தங்கள் உயிரினும் மேலாக நேசித்த உன்னைக் கொல்வதால் அவர்களது ஆத்மா சாந்தியுறாது என்பதற்காகவே அப்படிச் செய்யவில்லை.” மேற்கொண்டு பேச முடியாமல் தத்தளித்தான் கமல்.

நெடுமரத்தைப்போல அவனெதிரில் நின்றிருந்தேன்.

“மரணப் படுக்கையில் ரேகா தன் ஆசையெல்லாம் சொல்லித் தன்னை மன்னிக்கும்படி வேண்டினாள். அப் புனிதவதியை மன்னிக்கும் தகுதி எனக்கு ஏது? உன் பன்னிரண்டாம் வயதில் நீ திருட்டுத்தனமாக அறையினுள் சிகரெட் குடிக்கும்போது அவள் வெளியே காவலிருப்பாளாம். அன்று முதல் உன்னைக் காதலிப்பதாகச் சொன்னாள். நடந்தை யெல்லாம் மறந்து நீ பெரிய தத்துவ ஞானியாகப் பார்க்கிறாய்! நீ ஒரு அன்பற்ற சுயநலக்காரன். உன் விஷ ஹிருதயத்தை வெட்டி வீழ்த்தவேண்டும்.”

கலியுகத்தில் பூமி பிளந்து மனிதனை விழுங்குவதில்லை. பூகம்பமோ மாரடைப்போ வந்து என்னை அழித்துவிடாதா என்று எதிர்பார்த்தேன். வேறுயாரோ அங்கு வந்த அரவம் கேட்டுத் திரும்பிப் பார்த்தேன். அமலா நின்றிருந்தாள். அன்பு, அழகு, அவலம் எல்லாம் என்னைச் சுற்றிச் சுற்றி வந்து சிதைப்பதாக உணர்ந்தேன்.

“பரேஷ்! இதோ பார் சின்ன அலகாவை. இவள் பெயர் அமலா. இவளது திருமணத்தை நாளை நடத்திவைக்கப் போகிறேன்” என்றான் கமல்.

வளைகள் ஒலிக்கத் தனது தளிர்க் கரத்தால் என்னை அமலா வணங்கினாள். எங்கள் கண்கள் சந்தித்தன. விடுவிடென்று அவள் அறைக்குள் ஓடிவிட்டாள்.

கமல் செக்ரடேரியட்டில் ஒரு இலாகாவின் தலைவனாகிவிட்டான். நிறையச் சம்பளமும் பெருமையும் வந்துவிட்டன. அமலாவைத் தனது சொந்த சகோதரியாகப் பாவித்து கல்யாணத்தை தடபுடலாக நடத்தத் திட்டமிட்டிருந்தான். அன்று பகலெல்லாம் அவன் அந்தக் காரியங்களைப் பார்த்

துக்கொண் டிருந்ததால் நாங்கள் மேற்கொண்டு பேசவில்லை.

விடியற் காலை. மாப்பிள்ளை ஊர்வலம் புறப்பட வேண்டிய வேளை. யாரோ பந்தலில் நின்று கத்துவது கேட்டு வெளியே வந்து பார்த்தேன். மாப்பிள்ளை நிரஞ்சனின் மாமா கத்திக் கொண்டிருந்தார். கமல் விஷயம் விளங்காமல் திகைப்புடன் ஓடிவந்தான்.

மாப்பிள்ளையின் மாமா, "எங்களை இப்படி அவமானப் படுத்த எத்தனை நாள் காத்திருந்தீர்கள்? பெண்ணின் தகப்பனர் வெள்ளைக்காரியை மணந்து வீட்டில் அழைத்து வைத்திருந்தாராம்! குலத்தையும் ஆசாரத்தையும் குட்டிச்சுவராக்க நாங்கள் தானு கிடைத்தோம்?" என்று இரைந்தார்.

பேசாமடந்தைபோல நின்றிருந்தான் கமல். எனக்கு அடங்காத கோபம் வந்தது. கோத்திரத்தையும் குலத்தையும் பேச்சிலும் பெண் பார்த்ததிலும் கொட்டிக் கலந்து ஆராய்வதா? ஆனல் தங்கள் நித்திய வாழ்வில் நீசத்தனத்தின் எல்லையிலிருப்பது தான் இந்த ஆஷாடபூதிகளின் உண்மை உருவம் என்பதை வெளிப்படுத்தி அவமானப்படுத்த நினைத்தேன். சமயம் சரியாக இல்லை; தாழ்ந்து போகவேண்டிய நேரம்.

"ஐயா! பெண்ணின் தந்தை அப்படிச் செய்தவரல்ல. தன் பெண்ணை வளர்க்க வீட்டிலே ஒரு நர்ஸை வைத்திருந்தார். உங்களிடம் யாரோ கதைகட்டி விட்டிருக்கிறார்கள்" என்றேன்.

அமலா மூர்ச்சித்து வாழைத் தண்டெனத் துவண்டுவிட்டாள்.

பேயறைந்தவனைப் போல கமல் நின்றிருந்தான். பைத்தியம் பிடித்து விடுமோ என்று நான் பயந்தேன். என் கையைப் பிடித்து பரபர வென்று ஒரு மூலைக்கு இழுத்துப்போய், "என் மானமும் அமலாவின் உயிரும் உன் கையில் இருக்கின்றன" என்று சொல்லிக் கொண்டே என் கால்களைப் பிடித்துக் கொண்டான்.

நான் அவனைத் தூக்கித் தழுவிக் கொண்டு "கமல்! கோபிக்காதே; என் லட்சிய வாழ்வின் சித்தாந்தத்தை விட்டுவிடச் சொல்லுகிறாயா?" என்று என்னையுமறியாமல் கேட்டுவிட்டேன்.

கமலின் மூர்ச்சித்த உடம்பு என் மேல் சாய்ந்தது.

டாக்டர்களின் முயற்சியையும் நர்ஸுகளின் சேவையையும் மீறி இரண்டு மணி நேரத்தில் அமலா போய் விட்டாள். மூர்ச்சை தெளிவதும் இரண்டொரு நிமிஷங்களில் மறுபடி மூர்ச்சிப்பதுமாகக் கிளித்தட்டு விளையாடிக் கொண்டிருந்தது கமல் பாபுவின் நிலைமை.

கதிரவன் கரங்களைப் பரப்பினன். புள்ளினம் பாடிப் பறந்து சென்றது. மக்கள் பணத்திற்காகப் பல வழிகளில் உடலை வளைக்கத் தொடங்கினர். கமல் தெளிவு பெற்றுக் கண் திறந்து என்னை அழைத்தான். அவன் அகத்தின் வெறுப்பு முகத்திலே காணப்பட்டது.

"பரேஷ்! உன் சித்தாந்தமும் நீயும் வாழுங்கள். இயற்கையோடு ஒன்றிச் செல்லும் உலகம் அழிந்து விடாது! என் உடம்பில் பலமில்லாததால் உன்னை ஒன்று கேட்டுக்

...ற்றன்; தங்கை அமலா ...றுதிச் சடங்குகளைச் ...விட்டு அங்கிருந்தே போய் விடு. திரும்பி இந்த வீட்டிற்கு வராதே. இனி எந்த நிலையிலும் என் முகத்தில் விழிக்காதே'' என்றான்.

அவன் கண்கள் கண்ணீரைச் சிந்தின. அது என் வாழ்வைப் பொசுக்கும் தீயில் கொட்டும் எண்ணெய் போல என் உள்ளத்தைத் தைத்தது. அவன் கண்களில் காணப்பட்ட வேதனைக் குறிபோல நான் எங்கும் கண்டதே இல்லை. அவனெதிரில் நிற்கும் சக்தியை இழந்து விட்டேன்.

## 5

அலகாவின் இறுதிச் சடங்கை முடித்த நான் அங்கிருந்து புறப்பட்டு விட்டேன். புயலிலும் நிலை கலங்காத மலைபோல லட்சியத்தைக் காப்பாற்றிவிட்டதாகப் பெருமைப் பட்டேன். ஆனால் மக்கள் என்னை எள்ளி நகையாடுவதாகவும் இயற்கைப் பொருள் ஒவ்வொன்றும் எதையோ இடித்துக் கூறுவதாகவும் உணர்வுண்டாயிற்று.

தேசத்தைச் சுற்றிப்பார்க்க போவதாகத் தந்தைக்கு எழுதி விட்டு வங்காளத்திற்குப் புறப்பட்டேன். நான் அங்கு போன சில நாட்களில் நவகாளியிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் வகுப்புவாதப் பேய்க்கு மக்கள் பலியாயினர் என்று பத்திரிகைகள் கொடுத்த தகவல் என்னை அங்கு சேவைக்காக இழுத்துச் சென்றது.

செஞ்சிலுவைச் சங்கத்தில் சேர்ந்துவிட்டேன். எங்கள் முகாம் சாந்த்பூருக் கருகில் வேலை தொடங்கிவிட்டது.

கலவர நிலைமை உச்சத்தை எட்டிப் பிடித்துவிட்டது. எங்கள் சேவைக்கு எல்லையோ எங்களுக்கு ஓய்வோ கிடைக்கவில்லை. என் மீது எனக்கே வெறுப்புண்டாகி விட்டது. அதன் காரணம் எது என்று நிச்சயிக்க முடியவில்லை. இதனால் பிறர் போகப் பயந்த கலவரப் பிரதேசங்களில் நான் கூசாமல் சென்று சேவை செய்தேன். உயிரைத் திரணமாய் மதித்தேன்.

"நீங்கள் படித்த பட்டதாரி. அதிலும் பணக்காரர். உயிரைப் பற்றிக் கொஞ்சம் எச்சரிக்கையாக இருங்கள்'' என்று பலர் வேண்டிக்கொண்டனர். நான் காட்டும் துணிவு எனக்கே ஆச்சரியமாக இருந்தது.

சாப்பிடுமிடத்தில் ஒருநாள் அடுத்த யூனிட்டின் நர்ஸ் என்னைச் சந்தித்தாள். "உங்களைப்போலவே எங்கள் யூனிட்டில் ஒரு நர்ஸ் ஊழியம் செய்கிறாள். உங்களிருவரின் சேவையை உலகமே போற்றக் கடமைப்பட்டிருக்கிறது. உங்களின் உற்றார் உறவினர் ஊரிலிருப்பார்கள். ஆனால் பாவம் அவளுக்கு யாருமே கிடையாது.''

"என்னை வீணாகப் புகழாதீர்கள்'' என்றேன். அந்த நர்ஸைக் காணவேண்டுமென்ற ஆவல் எழுந்தது.

அடுத்தநாள் அந்த யூனிட்டுக்கு ஒரு வேலையாகப் போயிருந்தேன். முதல்நாள் பேசிய நர்ஸ் என்னை ஆரதிக்கு அறிமுகப்படுத்தி வைத்து "பரேஷ் பாபு! ஆண்ட

வன் உங்களிருவருக்கும் ஒரே வகையான சேவா உள்ளங்களைக் கொடுத்திருக்கிறார்'' என்றாள்.

அழகிய கட்டுமஸ்தான தேகம் படைத்த அந்த வங்காள நாகரிக மங்கை வெட்கத்தால் தலைகுனிந்தாள். வெண்மையான செஞ்சிலுவை உடையிலும் அவள் ஒரு அபூர்வ அழகி என்பதை நான் கண்டுகொண்டேன்.

"என் தந்தை ஜாட்நகரின் பிரபல வியாபாரி. இந்தக் கலவரத்தில் என் உறவினர் யாவரும் பலியாகி விட்டனர். என் கற்பையும் தடியர்கள் விளையாட்டுப் பொருளாக்க நினைத்தபோது இராணுவம் என்னைக் காப்பாற்றிற்று'' என்று சுருக்கமாகத் தன் கதையைச் சொல்லி முடித்தாள்.

"உற்றார், உறவினர், செல்வம், சிறப்பு யாவையும் இழந்த நீ துக்கத்தை மறந்து சிரிக்கவும் கற்றுக்கொண்டிருக்கிறாயே.''

"பரந்த உலகம், கோடானு கோடி மக்கள், எண்ணித் தொலையாத செல்வம் இவை இருக்கும் போது நானேன் கவலைப்பட்டு வருந்தவேண்டும்!''

"நீ நன்றாகப் பேசக்கூடக் கற்றிருக்கிறாய்'' என்றேன். மேலே அவள் பேசவில்லை.

அடுத்த நாள் ஒரு பெரும் தீ விபத்தேற்பட்டது. இரு யூனிட்டுகளும் சேர்ந்து சேவை செய்தன. நூற்றுக்கணக்கான வீடுகள் சாம்பலாயின. எத்தனையோ ஆண்கள் பெண்கள் குழந்தைகள் அபயக்குரலிட்டுக் கூவினர். பயந்து ஓடுபவர்களை முதுகில் குத்திச் சாய்த்தார்கள் குண்டர்கள்!

இராணுவம் அவர்களை விரட்டிப் பிடித்தும் சுட்டுத்தள்ளியும் கலவரத்தை அடக்கிற்று. எங்கள் வேலை தொடர்ந்து நடந்தது. ஆரதியின் சேவை என்னை ஸ்தம்பிக்கச் செய்துவிட்டது. பாதி பொசுங்கிக் குற்றுயிராகக் கிடந்த மக்களுக்கு அவள் உதவிசெய்து கொண்டிருந்தாள். பிற ஊழியர் அவர்களைத் தொட அசிங்கப்பட்டு ஒதுங்கி நின்றனர்.

"இவை எந்த ஜாதிப் பிணமோ, இவற்றைத் தொட உனக்கு வெறுப்பாக இல்லையா?'' என்று கேட்டேன்.

"ஜாதி மதப் பாகுபாடா? அது உயிருள்ள கர்விகளிடம்தானிருக்கிறது. அவர்கள் இறந்துவிட்டால் அதுவும் மறைகிறது. இந்தப் பிணங்களில் எத்தனைபேர் மதத்திமிர் பிடித்தவர்களோ? இன்று இறந்தபின் இவர்களிடம் அந்தத் திமிரைக் காணோம். இதை உணர்ந்து நடக்கிறேன்'' என்றாள்.

நான் அவள் கால்களைத் தொட்டுக் கண்களில் ஒத்திக்கொண்டேன்.

"என்னை நரகத்தில் தள்ளிவிட்டீர்களே'' என்று கோபித்துக் கொண்டாள்.

எங்கள் வேலை தொடர்ந்து நடந்தது. நான் தீயணைக்கும் மோட்டாரில் நின்று எரியும் வீட்டில் தண்ணீர் ஊற்றிக்கொண்டிருந்தேன். உள்ளே ஒரு குழந்தை அலறுவதுபோன்ற சப்தம் கேட்டது. முன்பின் யோசியாமல் அந்த வீட்டுக்குள் புகுந்து குழந்தையை எடுத்து 'ஓவர்' கோட்டில் மறைத்துக் கொண்டு ஜாக்கிரதையாக வெளியே புறப்பட்டேன். எப்

படியோ கோட்டின் ஒரு மூலையில் தீப்பிடித்து வேகமாகப் பரவியது. வெளியே வந்த நான் மூர்ச்சித்து விட்டேன்.

மூர்ச்சை தெளிந்தபோது உடலெல்லாம் கட்டுக்க ளிருந்தன. வலி பொறுக்க முடியவில்லை; எதிரே கவலையோடு ஆரதி உட்கார்ந்திருந்தாள். "நான் இப்போது எங்கே இருக்கிறேன்?" என்று கேட்டேன்.

"என் அறையி லிருக்கிறீர்கள். உங்களுக்குப் பட்டிருக்கும் தீக் காயங்களுக்கு விசேஷ கவனம் செலுத்தியாக வேண்டும்......"

அவள் குரலில் துக்கத்தின் ரேகை கலந்திருந்தது. "என்னால் உங்களுக்கு எவ்வளவு சிரமம்?" என்றேன்.

"இவ்வள விருக்குமா?" என்று இருகைகளையும் விரித்துக் காட்டினாள். 'இன்றுபோலக் கவலை எனக்கு இதுவரை வந்ததே இல்லை' என்று முனகினாள்.

மலர்ந்து பொலியும் அவள் கண்களில் நீர் மல்கியதைப் பார்க்காமலிருக்க முடியவில்லை. "உங்கள் கண்களில் கண்ணீரா! சொந்த கஷ்டங்களையும் பிறர் துக்கங்களையும் கண்டு அஞ்சாத உங்கள் கண் கலங்குவதேன்?"

"என் கண்களிலா கண்ணீர்! உங்களுக்கு அப்படித் தெரிந்திருக்கும்" என்று சொல்லிக்கொண்டே கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

வலிபொறுக்க முடியாமல் முனகினேன். தன் மடியில் என் தலையைத் தூக்கி வைத்துக்கொண்டு விசிறினாள். முதுகிலும் உடம்பின் பல இடங்களிலும் ஆபரேஷன் நடந்தது. நரக வேதனை என்பார்களே அதை அனுபவித்தேன். கலங்கித் துடித்த ஆரதி 'மார்பியா' இஞ்செக்ஷன் கொடுத்தாள். நான் அசந்து தூங்கிவிட்டேன்.

மாலையில் ஆரதி அன்றைய பத்திரிகையைப் படித்துக் காட்டினாள். "நவகாளி போன்ற கலவரப் பிரதேசங்களில் பாதிக்கப்பட்ட பெண்களை மணக்க வாலிபர் முன் வரவேண்டும்" என்று வேண்டிக் கொள்ளும் காந்திஜியின் வேண்டுகோளை அவள் படிக்கத் தவறிவிடவில்லை! என் சிந்தனைக் கடலில் அலைகளெழுந்து மோதத் தொடங்கி விட்டன.

"இங்கு வசதிக் குறைவாக இருப்பதால் உங்கள் உடம்பு தேற அதிக நாள் ஆகும். கல்கத்தாவுக்குப் போய்விடுவது நல்லது என எல்லோரும் சொல்லுகிறார்கள்" என்று அவள் அன்பு பொழியப் பேசினாள்.

கல்கத்தா போகவேண்டுமென்ற ஆசையை மனதில் அடக்கிக் கொண்டு "இல்லை, நான் இங்கிருந்து போகமாட்டேன்" என்றேன்.

"அதெல்லாம் முடியாது, நீங்கள் போய்த்தான் ஆகவேண்டும். விடியற்காலம் விமானத்தில் நாம் புறப்படவேண்டும். நான் ஏற்பாடுகளை யெல்லாம் செய்து விட்டேன்" என்றாள்.

என் வாழ்வின் ஆபத்தான இந்தக் கட்டத்தில் விசித்திரப் போக்கமைந்த அந்த வங்க யுவதியின் அன்பை என்னால் தள்ள முடியவில்லை. நிமிஷத்திற்கு நிமிஷம் அவளிடம் அன்பு வளர்ந்

தது. இந்த அனுபவம் சங்கோஜத்தையும் மனச் சாந்தியையும் கொடுத்தது.

டகோடா விமானத்தில் படுத்திருந்தேன். விமானம் பறந்தது. அடக்க முடியாத ஒரு புத்துணர்ச்சியால் "ஆரதி! என் உள்ளத்தில் அன்பு மறுபடியும் மலர்ந்து விட்டது. நான் உயிர் வாழ விரும்புகிறேன். நீ என்னைக் காப்பாற்றி விடு. நீ என்னைக்காப்பாற்றி விட்டால் நான் என்னை உனக்குக் காணிக்கையாகக் கொடுத்துவிடுவேன். நீ எற்றுக்கொள்ளுவாயல்லவா ?"

ஒன்றுமே பேசாமல் நின்றிருந்தாள். மேலும் நான் கேட்டவைகளுக்கெல்லாம் அவள் பதில் சொல்லவில்லை.

"நீ பேசாமலிருந்தால் இந்தக் கட்டுக்களால் என்ன பயன் ? இவற்றை இப்போதே அவிழ்த்தெறிந்து விடுகிறேன்."

"ஐயோ அப்படிச் செய்துவிடாதீர்கள். உங்கள் கட்டளைகளுக்குப் பணிந்து ஊழியம் செய்யக் காத்திருக்கிறேன். அதற்காகவே வந்திருக்கும் என் ஜாதியைப்பற்றி நீங்கள் இன்னும் தெரிந்துகொள்ளவில்லை. அதை மறைக்கத்தக்க சிறந்த குணமோ அல்லது திரண்ட செல்வமோ என்னிடம் கிடையாது."

"உலகுக்கு ஒரு மதத்தை உண்டாக்கித் தந்த சேவாகிராமத்து முனிவர் காந்திஜி கொடுத்த வரப்பிரசாதம் நீ. ஆரதி! அவருடைய ஆசிக்குமேல் ஒருவனுக்கு வேறு என்ன வேண்டும் ?"

என் கால்களைத் தொட்டு அவள் கண்களில் ஒத்திக்கொண்டாள் "நீங்கள் என்னை நேசிப்பது உங்கள் பெருந் தன்மையால்தான். என்னிடம் ஒரு விசேஷ குணமும் இல்லை' என்று சொல்லிய அவள் இமைகள் உவகை நீரால் நனைந்தன.

அவளது நடுங்கும் கைகளைப் பிடித்துக் கொண்டு "ஆரதி! என் வாழ்வின் தொடக்கத்திலிருந்து உன்னை அறிவேன். குழந்தைப் பருவத்திலிருந்து உன்னிடம் அன்பு செலுத்துகிறேன். இப்போதும் நேசிக்கிறேன். இனிமேலும் இப்படியே. நீ இதுவரை வெவ்வேறு உருவங்களில் என்னிடம் உறவு கொண்டாடினய்" என்றேன்.

என் வார்த்தைகளைப் புரிந்து கொள்ளாமல் உட்கார்ந்திருந்தாள் ஆரதி. விமானத்தின் மங்கிய ஒளியிலும் அவளது இனிய முகம் என்னை ஆகர்ஷித்தது. அவளது உள்ளத்தின் சாந்தியை முகத்திலே தெளிவாக என்னுல் படிக்க முடிந்தது. அவள் பூவிதழ்கள் சற்றே அசைந்தன. அவை எனக்காக இறைவனை வேண்டுவதாக உணர்ந்தேன்.

விமானம் உயர உயரப் பறந்து கொண்டிருந்தது. ஆதவனின் பொற் கிரணங்கள் ஆகாயமெங்கும் பறந்து மோனப் புன்னகை பூத்தது. அக்காட்சி எங்களை வரவேற்பதாகத் தோன்றிற்று.

அலகாவின் சாபத்தையும் சேவாகிராம முனிவரின் கட்டளையையும் நிறைவேற்ற முனைந்த என் வாழ்வில் புதிய வசந்தம் வந்து பொலிந்தது!

# சுதந்திர இந்தியாவில் குழந்தைக் கல்வி

லக்ஷ்மி அம்மாள்

**புரட்சி வேண்டும் புரட்டு வேண்டாம்**

இரத்தம் சிந்தாத ஒருவகைப் புரட்சி முறையில் காந்தியடிகளைப் பின்பற்றி ஒழுகி இந்தியா இன்று சுதந்திர நாடாகிவிட்டது. அஹிம்சை முறையில் காந்தியடிகள் பொதுமக்களைத் தூண்டி அரசினரோடு விளைத்த போராட்டமே நம் மக்களுக்கு ஒருவகையில் அரசியல் கல்விப் பயிற்சியாகவும் அமைந்தது; எனினும் அந்தப் பயிற்சியின் முழுப் பயனையும் நாம் பெற்றுவிட்டோம் என்று சொல்வதற்கில்லை.

**ஆதாரக் கல்வி முறை**

காந்தியடிகளின் வாழ்க்கைத் தத்துவத்தைப் பொதுவாகச் **சத்தியாக்கிரகம்** அல்லது **சத்திய சோதனை** என்று குறிப்பிடுகிறோம். இந்தத் தத்துவத்திற்குச் சத்தியமும் அஹிம்சையும் மூச்சுப் பைகள். இத்தத்துவத்தின் ஓர் அம்சம்தான் ஒத்துழையாமை. இதன் முக்கியமான பகுதி ஆக்க வேலையாகிய நிர்மாண வேலை. இதில், கிராமப் புனருத்தாரணத்திற்கும், ஆதாரக் கல்வி என்ற புதுமுறைக் கல்விக்கும் முக்கியமான ஸ்தானம் உண்டு.

**சேவாக்கிராமக் கல்வித் திட்டம்** என்றும், **வர்தாக் கல்வித் திட்டம்** என்றும் சொல்லப்பெறும் புது முறைக் கல்வித் திட்டத்தைக் காந்தியடிகள் சுமார் பத்து ஆண்டுகளுக்குமுன் முதன் முதலாக வெளியிட்டார். நாட்டில் ஆங்கில அரசாங்கத்தின் ஆதரவிலே நடைபெற்று வந்து இன்றும் அமலில் இருக்கும் கல்விமுறை தேசியக் கல்விமுறையன்று என்பது மட்டுமில்லை, அது வாழ்க்கைக் கல்வியுமில்லை என்பதையும் காந்தியடிகளுக்கு முன்பே தேசபக்தர்கள் தெரிந்துகொண்டிருந்தனர். வாழ்க்கைத் தொடர்பு இல்லாத இக்கல்வியைக் குறித்து, 'ஏட்டுச் சுரைக்காய் கறிக்காகுமா?' என்று சாதாரணமாய்ப் பரிகசிப்பதுண்டு. பாலகங்காதர திலகர், விபினசந்திர பாலர், அரவிந்தகோஷ், டாக்டர் அனிபெஸன்ட் முதலானவர்கள் 'தேசியக் கல்வித் திட்ட'த்தை உருவாக்குவது குறித்துச் சில ஆலோசனைகளை வெளியிட்டதுண்டு; சிற்சில முயற்சிகளும் செய்து பார்த்ததுண்டு. ஆனால் காந்தியடிகளின் கல்வித் திட்டம் போல் ஏழை மக்களின் ஜீவாதாரத் தேவைக்கு உதவக்கூடிய ஒரு தொழிலை நிலைக்களமாய்க் கொண்டு தேசியக் கல்வித் திட்டம் ஒன்று இதற்கு முன் உருவானதில்லை.

காந்தியடிகளின் திட்டம், கிராமவாசிகளிலும் 'தரித்திர நாராயணர்'களின் ஜீவாதாரத் தேவைக்கு இசைந்த தொழிலை ஆதாரமாகக்

காந்திஜியின் வர்தாக் கல்வித் திட்டத்தையும்போலவே, மாண்டிஸோரியின் கல்வித் திட்டமும் முக்கியமானதே. ஆதாரக் கல்வி முறை விஷயமாக எழுதியுள்ள இக் கட்டுரை ஆசிரியர் மாண்டிஸோரிக் கல்வி முறையில் அனுபவஸ்தர். அந்த அனுபவத்தின் பிரதிபலிப்பாக விளங்கும் இந்த சிறந்த கட்டுரை சிந்தனைக்குரியதாகும். ஆசிரியர் இது விஷயமாக சக்தியில் தொடர்ந்து எழுதுவார்.

கொண்டு இயங்குவதாகும். 'கிராமமே இந்தியாவின் ஜீவநாடி; கோடிக்கணக்கான ஏழை மக்கள் இந்தியாவின் உண்மைச் செல்வம்' என்ற அபிப்பிராயம் இரத்தத்தோடு ஊறிக்கிடந்த இதயத்திலே உருவாகிய கல்வித் திட்டமல்லவா? அத்தகைய ஒரு தொழில் மூலமாகவும், சூழல் அல்லது சூழ்நிலை மூலமாகவும் வாழ்க்கைக்குத் தேவையான அறிவை ஊட்டுவது இக்கல்வித் திட்டத்தின் தனிப்பெரு நோக்கம்.

**இயற்கைச் சூழல்** என்றும், **சமுதாயச் சூழல்** என்றும் சூழல் இருவகைப்படும். இந்த இருவகைச் சூழல் வாயிலாகவும், ஒரு ஜீவாதாரத் தொழில் வாயிலாகவும் வாழ்க்கைக்கு இன்றியமையாத அறிவுத் தேவையைப் பூர்த்தி செய்துகொள்ளும்போது, அத்தகைய கல்வியால் உள்ளம் மட்டுமல்ல, உடம்பும் பயிற்சிபெறும் அல்லவா? கை மூலமாய் மூளைக்கும் உடலுக்கும் ஒருங்கே பயிற்சி தரும் இக்கல்வி முறை புரட்சிகரமானதுதான். அரசியல் துறையில் இரத்தம் சிந்தாமல் 'அஹிம்ஸையால் பிறருள்ளத்தைத் திருத்திவிடலாம்' என்று கூறி ஒரு தனிப்பெரும் புரட்சியைக் கொண்டுவந்தவர், 'அறிவுத் துறையிலும் படாடோபங்கள் இல்லாமல் கையால் மூளைக்குப் பயிற்சி அளிக்கலாம்' என்று சொல்லி உள்ளபடியே ஒரு பெரும் புரட்சியை உண்டாக்க முயன்றார். இதில் சிறிதும் சந்தேகமில்லை.

**கையும் மூளையும்**

பரிணாமவணியில் மனித வர்க்கத்தின் சாதனைகளுக்கெல்லாம் முக்கிய காரணம் கைத்திறன் என்பது அறிஞர்களெல்லாம் நன்கறிந்ததே. சூழலுடன் மனித உள்ளத்தை உறவாக்குவது கைதானே? உள்ளத்திற்கு இசைந்தபடியாகச் சூழலை மாற்றியமைப்பதும் கைதான்.

கலியாணத்தை **பாணிக்கிரகணம்** அல்லது 'கையைப்பற்றுதல்' என்று சொல்கிறோம் அல்லவா? மேலை நாட்டினரும் இப்படியே குறிப்பிடுவதுண்டு. ஒரு காரியத்திலுள்ள தொடர்பை அறவே விட்டதாகச் சொல்லுகிறவன், 'கைகழுவி விட்டேன்' என்கிறான். மேலை நாட்டிலும் கீழை நாட்டிலும் இப்படிச் சொல்வதுண்டு. மனித வர்க்கத்தின் உள்மனம் கைத்திறனுக்கு அளித்திருக்கும் பெருமதிப்பு இது.

பொருள்களைப் பிடிக்கக் குழந்தை முதன் முதல் தன் சின்னஞ்சிறு தளிர்க் கைகளை நீட்டுகிறதே, அது ஆலோசித்துப் பார்க்கிறவர்களுக்கு, ஓர் அதிசய நிகழ்ச்சி. உலகத்தை ஊடுருவிப் பார்க்க ஆன்மா மேற்கொள்ளும் முயற்சியின் அறிகுறி இது என்றும் தோன்றக் கூடும், பக்திக் கண்ணால் பார்க்கிறவர்களுக்கு.

குழந்தை சாமானைப் பிடிக்கக் கை நீட்டும் போது, 'தொடாதே, தொடாதே' என்று குழந்தையை நோக்கிக் கூச்சலிடுவது, சகோதர மனிதன் ஒருவனை நோக்கித் 'தீண்டாதே, தீண்டாதே' என்று கூச்சலிடுவதுபோல் கேடு விளைக்கத் தக்கதே.

நாளதுவரை மனித அறிவு செய்து வந்திருக்கும் அதிசயங்களெல்லாம், விஞ்ஞானம் கண்டு

பிடித்திருக்கும் கருவிகளெல்லாம் மனிதனுடைய கைத்திறனுக்கே சான்று தருகின்றன. அத்தகைய அதிசய வேலைகளோடு, சாதாரண வேலைகளையும் கை செய்து வருகிறது. ஒரு சிறுவன் குறிபார்த்து ள் மரத்தில் கல்லெறிந்து ஒரு மாங்காயை வீழ்த்துகிறான். தச்சன் தன கைத்திறனால் மரம் அறுக்கிறான். சிற்பி கல்லிலும் பளிங்கிலும் அழகிய சிலைகள் அமைக்கிறான். மகாபலிபுரத்துச் சிற்பங்களைப் போன்ற அதிசயங்களைப் படைத்துவிட்டதும் கைதான். டக்கா மஸ்லின் போன்ற நெசவுத் தொழில்—அதிசயங்களை நெய்து கொடுத்ததும் கைதான். இன்னும் எதிர்காலத்தில் எத்தனையோ விஞ்ஞான அற்புதங்களை நிகழ்த்தப் போவதும் கையே. யந்திரங்களெல்லாம் கைக்கு அடங்கிய குட்டிச் சாத்தான்களே!

தாம் கவிஞராய்ப் பிறந்திருந்தால் கைவிரல்களின் சாதனைகளைக் குறித்துக் கவிதை பொழிந்திருக்கக் கூடும் என்று காந்தியடிகள் கூறியுள்ளார். சில கவிகள் கைத்திறனைக் குறித்தும் கவிதை பொழிந்திருக்கிறார்கள். தமிழிலும் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை கைத்திறன் குறித்துச் சில அழகான பாடல்கள் பாடியிருக்கிறார்.

**வெயில்வரினும் மழைவரினும்**
**விரிகுடையாம் கையே!**

என்று தொடங்கும் செய்யுள்களைப் பள்ளிச் சிறுவர்களும் அறிவர். இப் பாடல்களினிடையே கவிமணி வெகு ரஸமாக,

**நாடியசீர் நாட்டையராட்டுருட்டும் கையே!**
**நல்லகதர் நெய்யமிகு வல்லமைகொள் கையே!**
**பாடியவாய் தேனூறும் பாரதியார் பாடல்**
**பண்ணமையப் படுதற்குப் பாணிகொட்டும் கையே!**

என்று பாடியிருப்பது குறித்துப் பெருமை கொள்ளாத தேச பக்தரும் தமிழ் ரசிகரும் உண்டோ?

கைத்திறனைப் பயன் படுத்திக் கொள்ளும் நூல் நூற்றல், நெசவு போன்ற ஜீவாதாரத் தொழிலை நிலைக்களனாகக்கொண்டு உடல், உள்ளம், உயிர் ஆகிய மூன்றிலும் உள்ள சிறந்த அம்சங்கள் மலர்ச்சி பெற்று விளங்குமாறு கல்விப் பயிற்சி அளிக்கவேண்டும் என்று காந்தியடிகள் கூறும்போது, கைக்கும் மூளைக்கும் உள்ள தொடர்பினை அவர் நன்றாக அறிந்திருக்கிறார் என்று கருதலாம். கைத்தொழில் கற்பிக்கும்போது அறிவுப் பயிற்சி அளிக்காமல் யந்திரம் போலக் கற்பிப்பது போதாதென்றும், அறிவியலை ஒட்டியே கைத்தொழிலைக் கற்பிக்கவேண்டும் என்றும், அப்போதுதான் சிறந்த நற்பயன் ஏற்படுமென்றும் காந்தியடிகள் வற்புறுத்துவதில் விசேஷ உண்மை இருக்கிறது.

### வாய்மொழிக் கல்வியும் தாய்மொழிக் கல்வியும்

காந்தியடிகள் வேறு இரண்டு உண்மைகளையும் வற்புறுத்துகிறார். பாடப் புத்தகங்களையும் நோட்டுப் புத்தகங்களையும் சுமக்க முடியாமல் சுமந்துபோய், விஷயங்களை எப்படியாவது மனப்பாடம் செய்து பரீட்சையில் ஒப்புவித்து விடவேண்டும் என்ற தற்காலக் கல்விமுறை மாற

வேண்டியது மிகவும் அவசிய மாகும். சரித்திரம், பூகோளம் முதலான பொது அறிவுச் செய்திகளைப் பாடப் புத்தக வாயிலாகக் கற்பிப்பதைக் காட்டிலும் வாய்மொழி வாயிலாகக் கற்பிப்பதே நலமாகும் என்று காந்தியடிகள் பத்து ஆண்டுகளுக்கு முன்பே தம் அபிப்பிராயத்தை வெளியிட்டிருக்கிறார். இதே கருத்தை மாண்டிஸோரி அம்மையார் நீண்டகாலமாக வெளியிட்டு வந்திருக்கிறார். தாய்மொழி மூலமாகத்தான் மாணக்கர்கள் அறிவைச் சொந்தமாக்கிக்கொள்ள இயலும், சுலபமாக்கிக் கொள்ள இயலும் என்பதை இரண்டு போறிஞர்களும் வற்புறுத்தி வந்திருக்கிறார்கள்.

**காந்தியடிகளும் மாண்டிஸோரியும்**

பத்து ஆண்டுகளுக்கு முன்பே காந்தியடிகள் வெளியிடத் தொடங்கிய கருத்துக்களும் கொள்கைகளும் 'ஆதாரக் கல்வி முறை' என்ற பெயரால் இன்று சில இடங்களிலாவது அனுஷ்டிக்கப் படுகின்றன. இக் கல்வி முறை சென்றபலஆண்டுகளாகச் சில மாறுதல்கள் பெற்றிருந்தாலும் மூலாதாரக் கோட்பாடுகளில் விசேஷ மாறுதல் ஒன்றும் ஏற்படவில்லை. இதே கல்வி முறையில் குழந்தைகளுக்குப் பயிற்சி அளிக்க முயல்வோர், குழந்தைக் கல்விக்காகவே தம் வாழ்க்கை முழுமையும் அர்ப்பணம் செய்திருக்கும் டாக்டர் மாண்டிஸோரி அம்மையாரின் அனுபவங்களையும் சோதித்துப் பார்த்து இந்திய நிலைமைகளுக்கு இயன்ற அளவில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். காந்தியடிகளின் கல்வி முறையைத் **தொழிலை நிலைக்களனுய்க் கொண்ட கல்வி** என்றால், மாண்டிஸோரி அம்மையாரின் கல்விமுறையை **வாழ்க்கையை நிலைக்களனுய்க் கொண்ட கல்வி** என்று சொல்லவேண்டும். நமது நாட்டில் இரண்டு முறைகளையும் நன்கு பரிசீலனை செய்து பார்த்துக் குழந்தைக் கல்வித் திட்டத்தை உறுதியான அடிப்படையில் அமைப்பதே நலமாகும்.

குழந்தைக் கல்வி முறையில் புரட்சிகரமான மாறுதல்கள் வேண்டும் என்ற அபிப்பிராயம் இந்நாளில் உலகமெங்கும் பரவி வருகிறது. பழைய கல்வி முறையில் குழந்தையின் சுபாவத்தைத் தெரிந்துகொள்ள ஒரு முயற்சியும் செய்யப்படவில்லை. பெற்றோர்களின் சுயநல விருப்பங்களுக்கும், ஆசிரியர்களின் மாமூல் திட்டங்களுக்கும் குழந்தைகளை இணங்கச் செய்யவேண்டும் என்பதே பழைய ஏற்பாடு. குழந்தைகளின் பிரதிநிதியே உண்மையான ஆசிரியன் என்ற மகத்தான உண்மையை உணர்ந்துகொண்டதாகவே தெரியவில்லை.

அரசனுக்குச் செங்கோலோ கொடுங்கோலோ உதவியதுபோல் ஆசிரியருக்குப் பிரம்பு உதவிய 'பள்ளிக்கூட ராஜ்யங்க'ளில் குழந்தைப் பிரஜைக்கு என்ன உரிமை இருக்க முடியும்? உபாத்தியாயருக்கும் பெற்றோருக்கும் கீழ்ப்படியும் கடமைதானே இருக்க முடியும்? நல்ல பிள்ளையாகக் கீழ்ப்படிந்து, துள்ளித் திரிகின்ற துடுக்கையெல்லாம் அடக்கிக் கொண்டு, நன்றாக வாசித்துப் பரீட்சைகளில் தேர்ந்தால் பரிசு கிடைக்கும்; இல்லாவிட்டால்

'பிரப்பம் பழம்' தான்! 'எல்லாம் குழந்தைகளின் நன்மைக்குத் தான்' என்று தங்கள் மனச்சாட்சிகளை ஆசிரியரும் பெற்றோரும் ஏமாற்றிக்கொண்டார்கள். அவர்கள் குழந்தைகளின் மனச்சாட்சியைக் கெடுத்ததுடன் தங்களையும் கெடுத்துக்கொண்டார்கள். ஏதோ களிமண்ணைப் பிசைந்து இஷ்டப்படியெல்லாம் உருவாக்கிக் கொள்வதுபோல் குழந்தைகளையும் உருவாக்க முயன்ற கல்விமுறை மோசமானது என்று தெரிந்துகொள்வதையே உண்மையான குழந்தைக் கல்வியின் முதற்படியென்று சொல்லலாம்.

**அடுத்தபடியாக,** முதியவருக்கு உரிமைகள் இருப்பதுபோல் குழந்தைகளுக்கும் உரிமைகள் உண்டு என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும். **மூன்றாவதாக,** குழந்தையின் உடம்பைப்போல் உள்ளமும் மிகவும் நுண்ணியது என்பதை அறிந்துகொள்ள வேண்டும். அறிந்துகொண்டு குழந்தையின் உள்ளப்போக்கிற்கும் வளர்ச்சிக்கும் ஏற்றவாறு கல்வி கற்பிக்க வேண்டும்.

**நான்காவது** விஷயம்: குழந்தையை விஷயங்களால் நிரப்பி வைக்கவேண்டிய கூடை என்றோ, நம் இஷ்டப்படி எழுதித் தள்ளக் கூடிய வெறும் காகிதம் என்றோ எண்ணிவிடக்கூடாது. பிறவியிலேயே அமையப்பெற்ற சில பண்பு—விதைகளோடு குழந்தை தோன்றுகிறது. பிறந்த சில ஆண்டுகளிலேயே குழந்தையின் முழுப் பண்பும் அல்லது குணமும் பெரும்பாலும் உருவாகிவிடுகிறது. ஆகவே இந்த ஆண்டுகளில் சூழல் அல்லது சூழ்நிலை மிகவும் முக்கியமானது. இப் பருவத்தில் குழந்தையின் இயற்கை வேகங்களைத் தடுக்கும் அடக்குமுறை கூடவே கூடாது.

**ஐந்தாவது:** மனிதனைக் குழந்தையின் தந்தை என்று சொல்வதைக் காட்டிலும் 'குழந்தையை மனிதனின் தந்தை' என்று கருதுவதில் சூட்சுமமான உண்மை இருக்கிறது. புத்திசாலிகளான பெற்றோரும் ஆசிரியரும், குழந்தையைத் தக்க சூழலில் வளரவிட்டு விட்டு—உடலிலும் அறிவிலும் ஒருங்கே வளரவிட்டு—பின்னாளில் நாட்டின் சிறந்த பிரஜையாகும்படி செய்யக்கூடும். இது உண்மையான குழந்தைக் கல்வியின் இன்றியமையாத பகுதி.

இந்த ஐந்து விஷயங்களையும் ஒருவாறு அறிந்து சிந்தித்துப் பார்க்கும்போதே, குழந்தைக் கல்வி முறையில் ஒரு புரட்சி அவசியம்தான் என்பது இனிது புலனாகும். குழந்தையை 'மனிதனின் தந்தை'யென்று கூறுவதுடன், குழந்தையை 'ஆசிரியரின் ஆசிரியன்' என்றும் மாண்டிஸோரி அம்மையார் கூறுவதுண்டு. இது உண்மையினும் உண்மை. குழந்தையின் மனப்போக்கிற்கும் வளர்ச்சிக்கும் ஏற்ற முறையில் அதன் இயற்கை வேகங்களை உபயோகித்துக் கொள்வதற்கும், சூழ்நிலைகள் அமைப்பதற்கும் ஆசிரியர் குழந்தையைக் கவனித்து, குழந்தையிடம் கற்றுக்கொண்டு தானே ஆகவேண்டும்?

ரோஜா மொட்டு ரோஜாவாக மலர்வதுபோல் குழந்தையும் வளர்கிறது, மலர்ச்சி பெறுகிறது. இவ்

வளர்ச்சியை வியந்து நோக்கிய வண்ணம் சூழல்களையும் சௌகரியங்களையும் அமைத்துக் கொடுக்கும் ஆசிரியர், குழந்தைவாயிலாக எவ்வளவோ கற்றுக்கொண்டு தாமே புரட்சிகரமான மாறுதல்களை அடைகிறார்! இத்தகைய ஆசிரியர் குழந்தையை மட்டுமா அறிந்து கொள்கிறார்? 'வாழ்க்கையையே தெரிந்துகொள்கிறார்—பகுத்தறிவால் அல்ல, **உள்ளொளியால்!**' என்பது மாண்டிஸோரி அம்மையார் கண்ட மகத்தான உண்மை.

உள்ளொளியால் வாழ்க்கையையும் அதன் பலவேறு பிரசினைகளையும் நோக்கியவர் காந்தியடிகள். அதனால்தான் அவரிடம் அதிசயமான கருத்துத் தெளிவும் லட்சிய உயர்வும் செயல் திறனும் காணப்பட்டன. அத்தகைய நிலையை ஓரளவாவது குழந்தைகளின் உண்மையான ஆசிரியர்களெல்லாம் அடையக் கூடும் என்று மாண்டிஸோரி அம்மையார் கண்டு பிடித்திருக்கும் இந்த உண்மையைச் சிந்தித்துப் பாருங்கள்.

இத்தகைய முறையிலுள்ள சாரமான அம்சங்களையெல்லாம் நமது கல்வி முறையுடன் இசைத்துக் கொள்ளவேண்டியது அவசியமல்லவா?

> **எப்பொருள் எத்தன்மைத்**
> **தாயினும், அப்பொருள்**
> **மெய்ப்பொருள்காண்ப தறிவு.**
> **எப்பொருள் யார்யர் வாய்க்**
> **கேட்பினும், அப்பொருள்**
> **மெய்ப்பொருள் காண்ப தறிவு**

என்று அறிவுக் களஞ்சியமான திருவள்ளுவர் நமக்கு உபதேசித்திருக்கிறார்.

இப்படிச் செய்யாமல் 'விதேசிச் சரக்கு' என்றோ, 'குபேர நாடுகளுக்கே இது தகும்' என்றோ, வேறு காரணம் காட்டியோ, உலகப் பிரசித்திபெற்ற மாண்டிஸோரி அம்மை கண்டுபிடித்த உண்மைகளைப் புறக்கணிப்பது பெருந் தவறு. இவற்றைத் தெரிந்து கொள்ளாமல் கண்டிப்பது புரட்டு. புதிய குழந்தைக் கல்வி முறையில் வேண்டியது புரட்சி; புரட்டு அன்று.

*

### அதிக மிச்சம்

பள்ளிக்கூட மாணவர்களிடம் பணத்தை மிச்சம் பிடிக்கவேண்டும் என்று உபதேசித்தார்கள். மிச்சம் பிடிப்பதற்காக அதிகப் பணம் கேட்டு மாணவர்கள் தங்கள் வீடுகளுக்குக் கடிதம் போட்டிருக்கிறார்கள்.

—பஞ்ச்

### அனுபவசாலி

அனிடா லூஸ் என்ற புத்தக ஆசிரியை, "செம்பட்டை மயிருள்ள பெண்களையே ஆடவர்கள் விரும்புகிறார்கள்" என்ற பெயருடன் ஒரு புத்தகம் எழுதியிருந்தாள். அவளுடைய நண்பர் ஒருவர் அவளைப் பார்த்து "உண்மையாகவே நீங்கள் அப்படித்தான் நம்புகிறீர்களா?" என்று கேட்டார்.

"முழுமனதுடன் நம்புகிறேன்."

"எப்படி?"

"எப்படி என்ன? நான் கறுப்பு மயிருள்ள பெண்!"

—ஸ்டீபன் லெம்பிள்டன்

# புத்தக உலகம்

**அறுந்த தந்தி:** [ஆசிரியர்: கி. வா. ஜகந்நாதன். கிடைக்குமிடம்: கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர் சென்னை. விலை ரூ 2-8-0.]

இந்தத் தொகுதியில் 12 கதைகள் இருக்கின்றன. அன்றாட வாழ்க்கையை ஒட்டிய கதைகள் சிலவும், அத்தைப் பாட்டியின் அற்புதக் கற்பனை வடிவோடு அமைந்த கதைகள் சிலவும் இருக்கின்றன. ஆசிரியர் சரளமான தமிழ் நடையில் தமது கதைகளை எழுதியிருக்கிறார். அற்புதக் கற்பனைக் கதைகள் ஆசிரியருடைய புது முயற்சி என்றாலும், வாழ்க்கையை ஒட்டிய கதைகள்தான் நன்றாயிருக்கின்றன. அந்த முறையில், ஆறாத புண், பிச்சைக்காரி, அக்கினி சாட்சி முதலிய கதைகள் நன்றாயிருக்கின்றன. அமுதக் கற்பனைக் கதைகள் எழுதுவது எல்லோருக்குமே கஷ்டம். புதுமைப் பித்தன் இந்த முறையில்சில கதைகள் எழுதி வெற்றி பெற்றிருக்கிறார். இந்நூலிலுள்ள சாகும் வரம், கதையும் கத்தரிக்காயும் போன்ற கதைகள் அவர் வழிப்பட்ட முயற்சிகள் போலத் தோன்றுகின்றன; எனினும் இவை வெற்றியடையவில்லை. அற்புதக் கற்பனைக் கதையில் விஷய அழுத்தம் வைரம் பாய்ந்திருக்க வேண்டும். இந்தக் கதைகள் தொய்வுற்றிருக்கின்றன. ஆகவே கிழவி எமனுக்கு கதை சொல்லும்போது, எமனை வெல்லும் சமத்கார அழுத்தம் குறைபடுகிறது. இந்தப் பன்னிரண்டு கதைகளும் படிக்க உகந்தவை. புத்தகத்தின் அச்சும் அமைப்பும் நன்று.

**மதிப்புரைக்கு இரண்டு இரண்டு புத்தகங்கள் அனுப்ப வேண்டும்**

**யோகசமுச்சயம்:** (இரண்டாம் பாகம்) [ஆசிரியர்: ஸ்ரீ அரவிந்தர், மொழிபெயர்ப்பு: கே. எஸ். வெங்கடராமன், கிடைக்குமிடம்: ஸ்ரீ அரவிந்த நூல் நிலையம். 369. எஸ்பிளனேட், சென்னை. விலை ரூ 2-0-0]

இந்நூல் 'ஆர்யா'வில் தொடர்ச்சியாக எழுதப்பெற்ற ஆங்கிலக் கட்டுரைகளின் மொழிபெயர்ப்பாகும். இவ்விரண்டாம் பாகத்தில் பூரண யோக முறையைப் பற்றிய அறிவு இயக்கம் அன்பு இயக்கம் முதலியவை வேள்வியேற்ற விதிகள் சொல்லப்பட்டிருக்கின்றன. பாரமார்த்திக சிந்தனையில் ஈடு படுவோர்க்கு இந்நூல் பயன் படும்.

**ராகவிபோதம்:** [ஆசிரியர்: ஸோமநாதர். கிடைக்குமிடம்: கலாக்ஷேத்ரம், அடையாறு, சென்னை. விலை ரூ 2. 8 0]

கி. பி. 16-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த ஆந்திர நாட்டு இசை ஞானியாகிய ஸோமநாதர் எழுதியுள்ள இந்த நூலை பண்டித வே. ராமசந்த்ர சர்மா மொழிபெயர்த்திருக்கிறார்.

இந்த நூலில் மேளகர்த்தாக்களாக மொத்தம்23 ராகங்களே கூறப்பட்டுள்ளன. இவற்றில் கூறப்பட்டுள்ள தோடி, கல்யாணம், காம்போதி உட்பட எல்லா ராகங்களுமே இன்று ஜன்ய ராகங்களின் பெயர்களாக இருந்து வருகின்றன. இந்த நூலில் சங்கீத சாஸ்திரம் சம்பந்தமான இதுபோன்ற பல புதிய அரிய விஷயங்களும், வீணை இலக்கணம், ராகம், சுருதி முதலியவற்றின் விரிவான விளக்கங்களும் காணப்படுகின்றன. அத்துடன் உருவமில்லாதவாறு செவிப்புலனால் மட்டும் அனுபவிக்கக் கூடிய ராகங்களுக்கு பல அழகான உருவங்களும் கொடுக்கப்பட்டுள்ளன. உதாரணம்:

தோடியின் உருவம்:

"பச்சை நிற விடிவினள்; அலங்காரத்திலே ஆசையுள்ளவள்; மதுர மொழியினள்; பழுப்பாடை யணிந்தவள்; வனத்திலே வாஸத்தை யுடை

யவள்; வளர்ப்பு மானொன்றுடையவள்; வேணுநாதம் புரிந்து கொண்டிருப்பவள்; தவள புஷ்பத்தின் மணமிக்க கேஸரத் தாதுப் பொடியை மேனி முற்றும் மணக்கப் பூசுபவள்; இவளே தோடி தேவதையாம்.''

இந்தோள ராகத்தின் உருவம்:

"வெண்ணிறமும், தீர்ந்த அழகும், அசோகம், சம்பகம், கமலம் இம்மூன்று மலரும் விரவித் தொடுத்த மலர் மாலை யுடையவன; யுவதிகள பலர் வேண்டுதலில் அங்குமிங்கும் ஓடியாடி மகிழ்பவன்; ஊஞ்சலில் உட்காரும் வேட்கை மிக்குடையோன். இவனே ஹிந்தோளன்.''

சங்கீத ஞானமுள்ள ஒவ்வொருவரும் இந்த அரிய நூலைப் படித்து, இதில் கூறப்பட்ட இசை நுணுக்கங்களை (கடைப்பிடிக்கா விட்டாலும்) தெரிந்துகொள்வது மிகவும் அவசியம் என்று கூற விரும்புகிறோம். இந்த நூலை மொழிபெயர்த்துத் தமிழுலகுக்கு வழங்கியவர்களைப் பாராட்டுகிறோம். நூலின் மொழிபெயர்ப்பைப் பற்றி ஒரு வார்த்தை:-பிரமாதம்.

சாகாவரம்: [ஆசிரியர்: ம. லக்ஷ்மிநாராயணன். கிடைக்குமிடம்: கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை. விலை ரூ 2. 8. 0]

174 பக்கங்கள் கொண்ட இந்நூல் தேச பக்த இளைஞன் ஒருவனின் வாழ்க்கையைத் தெரிவிக்கிறது. சிறைவாசத்தின் பரிசாக க்ஷயரோக வியாதியுடன் ஊருக்குத் திரும்புகிறான் ஒரு தேச பக்தன்; அவன் மீண்டும் தேச சேவையில் இறங்குகிறான். நோயின் உக்கிரத்தை ஓரளவு சமனப்படுத்தியபின் பார்வதி என்ற இளம் விதவையை மணக்கிறான். அதன் மூலம் அவள் வாழ்வு மீண்டும் தளிர்க்கிறது. எனினும் அவனுடைய தேச சேவை அவன் உயிரைப் பறிகொள்கிறது; [illegible]யைக் காக்க குமரன் உயிர்விடுகிறான். இதுதான் கதை. வர்ணனைப் பகுதிகளில் அனாவசியமான வளர்ப்பு இல்லாமல், கதையை ஓட்டிச் செல்லுவதில் ஆசிரியர் கவனம் செலுத்தியிருப்பது பாராட்டத்தக்கது. எனினும் புத்தகத்தில் சில குறைபாடுகள் தென்படுகின்றன. கதா நாயகன் நாயகியை முதன் முதலாகச் சந்திக்கும் போதே காதல் கொள்கிறான். உயிரை வருத்தும் க்ஷயத்தின் இருமலோடு இருக்கும் அவனுக்கு ஒரு குவளை தண்ணீர் தந்து உதவுகிறாள் கதா நாயகி. உடனே காதல் பிறந்து விடுகிறது. ஒரு இனந் தெரியாத க்ஷயரோகியை ஒரு பெண், அதிலும் ஒரு விதவை, கண்டதும் காதல் கொள்வதும், அந்த க்ஷயரோகியின் நெஞ்சில் குத்திருமல் வாதையோடு காதலும் ஜனிப்பதும் அசம்பாவிதமாகப் படுகிறது. பின்னால் கதா நாயகி தன் வயிற்றில் பாரமேற்று அறியும் பருவத்தில் கதா நாயகன் மண்டையைப் போட்டு விடுகிறான். அதன் பின் அவள் மீண்டும் விதவையாகிறாள். தேசத்தின் நலனுக்காகத் தனி மனித சுகத்தைத் தத்தம் செய்ய வேண்டியிருக்கிறது என்ற அபிப்பிராயத்தை ஆசிரியர் வலியுறுத்தியிருந்தால் கதை முடிந்ததாக—அதாவது கதா நாயகியின் கதிக்கு கோடிட்டு நிறுத்தியதாகப் படும். அது காணப்படவில்லை. சம்பாஷணைகள் வரும் இடத்தில் ஆசிரியர் பிரசங்க தோரணையில் புகுந்து, முடிவில் '... ஒரு குட்டிப் பிரசங்கமே அடித்துவிட்டான்' என்று சொல்லுவதன் மூலம் தம்மைச் சமாளிக்க முயலுகிறார். இதையும் கூடியவரை நிவர்த்தித்திருந்தால் நலமாய் இருந்திருக்கும். எனினும் அரசியல் பகைப்புலத்தோடு தமிழில் நவீனங்கள் வெளிவருவது அபூர்வம். ஆகவே இந்நூலைப் படிப்பதற்குத் தடையில்லை.

—தொ. மு. சி.

Edited, Printed & Published by Vai. Govindan at the Shakti Press Ltd., (Shanti Press) 115-E, Mowbrays Road, Royapettah, Madras, 14.
Associate Editor: G. Alagiriswami.

# சக்தி

## மாதப் பத்திரிகை

○

| | | |
|---|---|---|
| தனிப் பிரதி 'தபால்' | 0 | 8 |
| ஆறு மாதம் | 3 | 8 |
| ஒரு வருஷம் | 6 | 0 |
| 2 வருஷம் | 11 | 0 |

ரெஜிஸ்டர் மூலம் பெற விரும்புவோர் பிரதி ஒன்றுக்கு 0-3-0 விகிதம் சேர்த்து அனுப்பவேண்டும்

### பர்மா

| | | |
|---|---|---|
| தனிப் பிரதி | 0 | 9 |
| ஆறு மாதம் | 4 | 0 |
| ஒரு வருஷம் | 7 | 0 |
| 2 வருஷம் | 13 | 0 |

### மலேயா, முதலிய வெளி நாடுகளுக்கு

| | | |
|---|---|---|
| தனிப் பிரதி | 0 | 10 |
| ஒரு வருஷம் | 8 | 0 |
| ஆறு மாதம் | 4 | 8 |
| 2 வருஷம் | 15 | 0 |

○

## சக்தி காரியாலயம்
### சென்னை 14.

என்ற விலாசத்திற்குச் சந்தாத்தொகை அனுப்பவேண்டும்




உங்களுடைய ஆரோக்கியத்திற்கு உதவியாக உள்ள நல்ல பழக்கங்களை விருத்தி செய்யுங்கள். பற்களையும் ஈறையும் நன்கு காப்பாற்ற முயற்சிப்பது நல்ல பழக்கம். இதற்கு ஓர் நல்ல பற்பசை தேடிக்கொள்வது அவசியம். நீம் டூத் பேஸ்ட் ஓர் உயர்ந்த பற்பசை. வேம்பின் சத்தும், மற்றும் உயர்ந்த மூலிகைகளும் கொண்டு தயாரிக்கப்பட்டது.




C. C. 9/48-49.

# சக்தியின் அன்பர்களுக்கு

சக்தி ஆரம்பித்த காலம் முதலே சமுதாயம் உயர் நிலை அடைய வேண்டும் என்ற உயரிய எண்ணத்துடனேதான் நடைபெற்று வருவதை நீங்கள் அறிவீர்கள். சக்தி வளர்ந்து கொண்டு வருகிறது. ஒவ்வொரு இதழிலும் புதுப்புது விஷயங்களை அள்ளிக் கொடுக்கிறது. அந்த விஷயங்களைப் பற்றி வாசகர்களாகிய உங்களுடைய எண்ணத்தையும் அவ்வப்பொழுது அறிய நாங்கள் ஆசைப்படுவது இயற்கைதானே. உங்களுடைய யோசனைகளைத் தாராளமாகச் சொல்லுங்கள். சொல்ல உங்களுக்குப் பூரண உரிமை உண்டு.

ஆசிரியர், சக்தி

# உங்கள் ஊரில்

'சக்தி' தவறாது கிடைக்கிறதா? அப்படிக் கிடைக்கவில்லையானால் தயவு செய்து கீழ்க் கண்ட மனுவைப் பூர்த்தி செய்தனுப்புங்கள். 'சக்தி' தவறாது கிடைக்கும்.

ஊர்..............................

தேதி..............................

**சக்தி காரியாலயம்**
**சென்னை—14**

சக்தி மாத வெளியீட்டிற்கு என்னை சந்தாதாரராகச் சேர்த்துக்கொள்ள வேண்டியது ஒரு வருஷத்திற்குரிய / இரண்டு வருஷத்திற்குரிய சந்தாத்தொகை ரூ. ஆறு / பதினொன்று மணியார்டரில் / போஸ்டல் ஆர்டர் மூலம் அனுப்பியிருக்கிறேன்.

தங்கள்,

பெயர் (தெளிவாக)..............................

தெரு..............................

ஊர்ப்பெயர்..............................

ஜில்லா..............................




மிகவும்
ருசிகரமானது
மாத்திரமல்ல-
இது
நல்லது

போர்ன்-வீடாவில் 95 சதவிகிதம் எலும்பு வளர்ச்சிக்கும் ஜீவசக்தி யளிப்பதற்குமான சரக்குகள் இருக்கின்றன. தவிர அது ருசியாகவும் ஜீர்ணத்துக்கு தூண்டுகோலாகவும், எளிதில் ரத்தத்துடன் சேர்ந்து புஷ்டி தருவிதாகவும் இருப்பதால் குறிப்பாக கர்ப்பிணிகளுக்கும் வியாதிக்குப்பின் குணமடையும் தருவாயிலும் இன்றியமையாத உணவாக விளங்குகின்றது.

காட்பரீஸ்

# போர்ன்-வீடா

கால்ஷியம் விடமின்கள் நிறைந்தது

காட்பரி என்பது சிறந்த ரகத்துக்கு அறிகுறி